# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS


CONNEMARA PUBLIC LIBRARY
28 JUL 19
MADRAS



ஸ்ரீ செல்வ முத்துக் குமாரசுவாமி,
வைத்தீசுவரன் கோயில்.

மாலை 11] சௌமிய - ஆனி - ஜூலை 1969 [மணி 10

தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு



கீழ்வேளூர்க் கேடிலியப்பர் கோயில், அங்காடி அடிக்கல்நாட்டு விழாவிலும், மதிய உணவளிப்புத் துவக்கவிழாவிலும், நமது அறநிலைய ஆணையர் திரு. ஆர். இராமசுப்பிரமணியம், B.SC , B.L. அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல். (19-6-69).

## பொருளடக்கம்


1. உண்மை விளக்கம்
2. திருவள்ளுவம்
3. அபிராமி அந்தாதி
4. திருஆரூரான் திருமண மண்டபத் திறப்புரை
5. மகாபாரதம்
6. ஞானமும் நந்தியும்
7. திருமுறைகளின் சிறப்பு
8. தோட்டிமை உடைய தொண்டர்
9. வடநாட்டுத் தலங்களின் யாத்திரை


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்


**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.




மாலை 11] சௌமிய - ஆனி - ஜூலை, 1969 [மணி 10

# உண்மை விளக்கம்*

**முன்னுரை :** செந்தமிழ் மக்களின் பேரறிவின் பெரு விளைவாகத் திகழ்வது, 'சைவ சித்தாந்தம்' என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கை. அத்தத்துவக் கொள்கையினை விளக்கும் அரும் பெறல் நூல்கள் 'சித்தாந்த சாத்திரங்கள்' எனவும், 'மெய்கண்ட நூல்கள்' எனவும் வழங்கப் பெறும். சித்தாந்த சாத்திரங்கள் பதினன்கு ஆகும். அவற்றுள், 'உண்மை விளக்கம்' என்பதும் ஒன்று.

சித்தாந்த சாத்திரங்களை முறையாகப் பயிலத் தொடங்குவோர், முதறகண் பயிலத்தகுந்ததாய், எளிய இனிய தெளிவான நடையில், 'உண்மை விளக்கம' மிகவும் சுருக்கமாக அமைந்து விளங்குகின்றது. சைவசித்தாந்தத்தின் அரும பெறல் உண்மைகள் அனைத்தையும, சாரமாக வடித்தெடுத்து விளக்கும் சிறந்துயர்ந்த குறிக்கோள கொண்டு இயற்றப் பெற்றமையின், இஃது 'உண்மை விளக்சம்' எனப் பெயா பெற்றது. பக்குவம் வாய்ந்த தக்கமாணக்கருக்கு அநுபவம மிக்க ஞான தேசிகர் அருளிச் செய்யும் உபதேச முறையில் அமைந்து திகழும் இந்நூல், செப்பலோசையுடைய வெண்பாவினல் இயன்றுள்ளமை, பெரிதும் சிறப்பும் மிக்க பொருத்தமும் உடையதாகக் காணப்படுகின்றது.

**மனவாசகங் கடந்தார் :** 'உண்மை விளக்கம்' இயற்றிய ஆசிரியர் 'மனவாசகங் கடந்தார்' என்பவா. பண்டைக்காலத்தில் திருமுறைகளிற் பயின்று வரும் அரிய தொடர்களைக் கொண்டு, தத்தம் மக்களுக்குப் பெயர் அமைப்பது சான்ரேர்களின் வழக்கம். அம்முறையினை ஒட்டி,

"எனைநான் என்ப தறியேன் பகலிரவு
ஆவதும் அறியேன்
மனவா சகங்க டந்தான்
எனைமத்தோன் மத்தனுக்கி......"

எனவரும் அரிய திருவாசகப் பாடலிற் பயின்றுவரும் தொடரே, இந்நூலாசிரிய

* பூவாளூர்ச் சைவ சித்தாந்த சபையின் சார்பில், 18-5-69 முதல் 28-5-69 வரையில், "உண்மை விளக்கம்" பற்றி நிகழ்த்திய சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகளின் சுருக்கமான சாரம். —ஆசிரியர்.

ருக்குப் பெயராயிற்று. இங்ஙனமே சைவ சித்தாந்த சாத்திரங்களுள் சிவஞானசித் தியார்க்கும், திருவருட்பயனுக்கும் உரை வகுத்த ஆசிரியராகிய நிரம்பவழகிய தேசிகர் அவர்களுக்கும்,

" நித்த மணாளர் நிரம்ப வழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னும்..."

என்னும் திருவாசகப் பாடலின் தொடரா லேயே பெயரமையப் பெற்ற செய்தியும், பிறவும் அறிந்தின்புறற் பாலன.

**வரலாற்றுக் குறிப்புகள் :** மனவாசகங் கடந்தார் திருவதிகையில் வாழ்ந்தவர். ஆசிரியர் மெய்கண்ட சிவத்தின் நேர்முக மாணாக்கர்கள் பலருள் இவரும் ஒருவர். சிவஞான சித்தியார் இயற்றியருளிய அருள்நந்தி சிவாசாரியர் இவரோடு உடன் பயின்ற நண்பராவர். திருவதிகை, திருத் துறையூர், திருவெண்ணெய்நல்லூர் என் னும் மூன்று தலங்களும் ஒன்றற்கொன்று மிகஅணித்தாகவிளங்குவன ஆதலின் இப் பெருமக்கள் தம்முள் தொடர்புகொணடு நெருங்கிப் பழகுதற்கு வாய்ப்பு இருந்தது. ஏனைய எத்தனையோபல செந்தமிழ்ச் சான் றோர்களைப் போலவே, மனவாசகங்கடந் தாரைப் பற்றியும் போதிய அளவு வரலாற் றுச் செய்தி ஏதும் நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. எனினும், ஆசிரியர் மெய் கணட சிவத்தின் பால், அருள்நந்தி சிவா சாரியாருடன் ஒருசாலை மாணாக்கராய் உடன் பயின்றவர் என்பதொன்றே, இவர் தம் பெருமையை விளக்கப் போதிய சான்றாகும்.

" மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தி நிபாதம்
மேவுதலும் ஞானம்விளைந்து ஓர் குருவின்
அருளால்
புக்கனுட்டித் தேநிட்டைபுரிந்துளோர்கள்..."

எனவரும் சிவஞானசித்தியார் செய்யுட்கு, ஆசிரியர் சிவஞான சுவாமிகள்,

" ஓர்குரு எனப் பொதுப்படக் கூறினர்
ஒருசாலை மாணாக்கராய்த் தம்மின்
மூத்தாரையும் தழுவுதற்கு "

என விளக்கம் வரைந்திருத்தல், தம்மின் மூத்தவராய் ஒருசாலை மாணாக்கராய்த் திகழ்ந்திருந்த மனவாசகங் கடந்தார் போன்றவர்கள்பால், தாம் கொண்டிருந்த பெருமதிப்பின் பயனாகத்தான், ஒருகால் அருள் நந்திசிவம் இங்ஙனம் அருளிச் செய்தனரோ, என நம்மனோரை நினைக்கச் செய்கின்றது:

இஃதெங்ஙனமாயினும், மனவாசகங் கடந்தார் அரிய பல நுண்பொருள்களை எண் பொருளவாகச் செலச்சொல்லிக் கற் பிக்க வல்லபெருந்திறனுடையார் என்பது, அவர் தம் நூலின் அமைப்பாற் புலனாகின் றது. உணர்தற்கரிய பொருள்களை மிக எளிய இனிய முறையில் இவர் உணர்த்திச் செல்கின்றார். அதனால், "தெய்விகத் தத்துவக் கொள்கையானது எத்துணை இனிமை மிக்கதாக இருக்கின்றது! அறிவி லிகள் நினைப்பதுபோல, அது கடினமான தும் சுவையற்றதும் அன்று. அப்போலோ வின் குழலிசையைப் போல அஃது இனி மை மிக்க இசைநலம் உடையதாகத் திகழ் கின்றது. தேனிற்றோய்த்த இனிய பொருள்கள் போல எஞ்ஞான்றும் இனிமை பயக்கும் பெருவிருந்தாக அது விளங்கு கின்றது. அதன்கண் சுவைக்குறைவோ, தெவிட்டுதலோ சிறிதும் இல்லை" (1)

என்னும் கருத்தமைய,

எத்தகை இன்ப ஊற்றாய்,
இறையருள் நூல்கள் உள்ள!
அத்தகை யவற்றை அந்தோ
அறிவிலார் கடினம் என்பர்!
வித்தகக் கண்ணன் ஊதும்
வேய்ங்குழல் இசைபோல் இன்பம்
மிக்கொளிர்ந்து, அறிஞர்க்கு ஆரா
விருந்தென மிளிரும் நன்றே!

— தமிழாக்கம்,
ஆசிரியர்.

என ஜான் மில்ட்டன் என்னும் ஆங்கிலக் கவிஞர் பாடியதனை நினைவுகூர்ந்து, நாம் வியந்து மகிழ்கின்றோம்.

---

" How charming is divine philosoply!
Not harsh and crabbed as dull fools suppose;
But musical as is Apollo's lute,
And a perpetual feast of nectar'd sweets,
Where no crude surfeit reigns."

—John Milton.

**ஐய வினாக்கள் :** மனவாசகங் கடந்தார் தமது ஞானாசிரியராகிய மெய்கண்டாரைப் பணிந்து, அவர்பால் தமக்கு நேர்ந்த ஐயங்களை வினவுவது போலவும், அவற்றிற்கு அவர் விடைகூறிச் சைவசித்தாந்த உண்மைகளை விளக்குவது போலவும், வினாவிடை முறையில் அமைத்து இந்நூலை இயற்றியுள்ளார். "பலகலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப் பதிபசு பாசம் தெரித்தல்" என்றபடி, முப்பொருள் உண்மைகளை விளக்குவதே சைவசித்தாந்தம். முப்பொருள்களாவன பதி (கடவுள்), பசு (உயிர்), பாசம் (தளை) என்பன. பாசம் ஆணவம், மாயை, கன்மம் என மூவகைப்படும். பாச நீக்கத்துக்கும் சிவப்பேற்றுக்கும் துணைபுரிவன, நாதன் நடமும், அஞ்செழுத்தும் ஆகும். ஆக, இவற்றைக் குறித்தே மனவாசகங் கடந்தார் தம் ஆசிரிராகிய மெய்கண்டார்பால் ஐயுற்று வினவுகின்றார்.

*" ஆறாறு தத்துவம்ஏது ? ஆணவம் ஏது ? அன்றேதான்*
*மாறா வினையேது ? மற்றவற்றின் வேறாகா*
*நான்ஏது ? நீ ஏது ? நாதன்நடம், அஞ்செழுத்துத்*
*தான்ஏது ? தேசிகனே ! சாற்று"*

**ஆறாறு தத்துவங்கள் :** காணப்பட்ட உலகத்தாலேயே காணப்படாத கடவுளின் உண்மையை அறிதல் வேண்டும். ஆசிரியர் திருவள்ளுவரும், மெய்கண்டாரும், அம்முறை தழுவியே கடவுளுண்மையைத் தத்தம் நூல்களிற் கட்டுரைத்தனர். மாணிக்கவாசகரும் "ஞாலமே கரியாக நானுனை நச்சி நச்சிட வந்திடும் காலமே" என அருளிச் செய்தனர். எனவே, மனிதன் அறிவு பெற்ற நாள்முதல் இவ்வுலகியற்கையைப் பலவகையிற் பகுத்து உணர்ந்து அறிய முயன்றான். உலகாயதர் நிலம் நீர் தீ வளி என நான்கு தத்துவங்களை மட்டுமே ஆராய்ந்தமைந்தனர். சாங்கியம் என்னும் அறிவுக்கொள்கை 25 தத்துவங்களை ஆராய்ந்தறிந்த சிறப்புடையது ஆகும்.

*" சாங்கியம் யோகம்என் றிரண்டு தன்மைய*
*வீங்கிய பொருள்எலாம் வேறு காண்பன ;*
*ஆங்கவை யுணர்ந்தவர்க் கன்றி அன்னவன்*
*ஓங்கிய மேல்நிலை உணரற் பாலதோ ?*

எனக் கம்பர் சாங்கிய நூற் கொள்கையினைப் புகழ்ந்து போற்றினார். பரிமேலழகர் "சுவை யொளியூறோசை" என்னும் திருக்குறளுரையில் சாங்கியக் கொள்கையினைப் பாங்குற விளக்கியுள்ளார். பரிபாடல் என்னும் சங்க நூலும், இச்சாங்கியக் கொள்கையினை,

*" பாழெனக் கால்எனப் பாகென ஒன்றென*
*இரண்டென மூன்றென நான்கென ஐந்தென*
*ஆறென ஏழென எட்டெனத் தொண்டென*
*நால்வகை யூழிஎண் நவிற்றும் சிறப்பினை "*

என்னும் வரிகளாற் குறிப்பிட்டிருத்தல் காணலாம். இங்ஙனம் "ஐயைந்தும் ஆய்வது அறிவு" எனப் போற்றப்பட்ட சாங்கியக் கொள்கைக்கும், சைவசித்தாந்தத்திற்கும் பெரிதும் தொடர்புண்டு.

*" நிலவுல காய தாதி*
*நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்*
*குலவினர் அளவ ளாவாக்*
*கொள்கைய தாகி, வேதத்*
*தலைதரு பொருளாய், இன்பாய்த்*
*தாவில்சற் காரி யத்தாய்,*
*மலைவறும் உணர்வால் பெத்த*
*முத்திகள் மதித்தாம் அன்றே "*

எனவரும் சிவப்பிரகாசச் செய்யுளில், சைவ சித்தாந்தத்துக்குச் சிறந்த அடிப்படைக் கொள்கையாகக் குறிப்பிடப்பெற்ற "சற்காரிய வாதம்" (உள்ளது அழியாது இல்லாதது தோன்றாது என்னும் கொள்கை), சாங்கியர்க் குரியதே யாகும். இந்திய நாட்டுத்தத்துவக்கொள்கைகளுள் மிகவும் பழமை வாய்ந்தது சாங்கியமே என்பர். இத்தகைய சாங்கியக் கொள்கையினும் மிக ஆழ்ந்து நுணுகிச்சென்று, உலகமைப்பின் பொருட் கூறுகளையும், தோற்ற ஒடுக்க முறைகளையும் குறித்துச் சைவசித்தாந்தம் திறம்பட விளக்குகின்றது. இவ்விளக்கத்தின் விளைவே ஆறாறு

தத்துவங்களைப் பற்றிய செய்திகள் ஆகும் (2).

முப்பத்தாறு தத்துவங்களும் முறையே ஆன்ம தத்துவம் (24), வித்தியா தத்துவம் (7), சிவதத்துவம் (5) என மூன்று வகைப் படும். அவற்றுள் ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் முறையே வருமாறு :—

**ஆன்ம தத்துவங்கள் : பூதங்கள் 5 :** பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்பன. இவற்றை நிலம் நீர் தீ வளி விசும்பு எனவும், மண் புனல் அனல் கால் வான் எனவும் கூறுவர். அண்டம் (Macrocosm) பிண்டம் (Microcosm) என்னும் இரண்டும், இவ்வைம் பெரும் பூதங்களின் கலப்பினுல் ஆகிய காரியமேயாகும். பூதங்கள் ஐந்திற்கும் தனித்தனியே வடிவு, நிறம், எழுத்து, குணம், தொழில் குறி, தெய்வம் கலை என்பன உண்டு.

(2) "The unique position of Saiva Siddhantha in the history of thought is the fact that it expounds by careful reflection the systematic account of the process of cosmic evolution which attempts to comprehend the universe as a sum total of 36 categories. This exposition is no mere metaphysical speculation but is a purely logical account on scientfic principles"

## (ஐம் பூதங்கள்)

| பூதம் | வடிவம் | நிறம் | எழுத்து | குணம் | தொழில் | குறி | தெய்வம் | கலை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. நிலம் | நாற் கோணம் | பொன்மை | ல | கடினம் | தாங்குதல் | வச்சிரம் | அயன் | நிவிர்த்தி |
| 2. நீர் | பிறை | வெண்மை | வ | தண்மை | பதம்செய் தல் | தாமரை | மால் | பிர திட்டை |
| 3. தீ | முக் கோணம் | செம்மை | ர | வெம்மை | ஒன்று வித் தல் | சுவத் திகம் | உருத்திரன் | வித்தை |
| 4. வளி | அறு கோணம் | கறுப்பு | ய | திரட்டு தல் | சரித்தல் | அறு புள்ளி | மகே சுவரன் | சாந்தி |
| 5 விசும்பு | வட்டம் | புகைமை | அ | வெளி யாதல் | இடம் கொடுத்தல் | அமுத பிந்து | சதாசிவன் | சாந்திய தீதை |

" இரந்தரம் ஆகி வான்தான்
இடங்கொடுத்திடும் ; சலித்துப்
பரந்தவை திரட்டும் கால்; தீச்
சுட்டொன்று வித்தல் பண்ணும் ;
நிரந்தரம் குளிர்ந்து நின்று
பதஞ்செயும் நீர் ; மண் தானும்
உரந்தரும் கடினம் ஆகித்
தரித்திடும், உணர்ந்து கொள்ளே !

" மண்புனல் அனல்கால் வான்பால்
வடிவு நாற் கோணம், ஆகும்
தண்பிறை, மூன்று கோணம்,
தகும்அறு கோணம், வட்டம்,
வண்பொன்மை வெண்மை செம்மை
கறுப்பொடு தூம வன்னம் ;
எண்தரும் எழுத்துத் தானும்
லவரய வவ்வும் ஆமே !"

" குறிகள்வச் சிரத்தி னோடு,
கோகன தம், சுவத்தி
அறுபுள்ளி, அமுத விந்து ;
அதிதெய்வ அயன்மால் ஆதி
செறிபுகழ் ஈசனோடு
சதாசிவம் பூத தெய்வம் ;
நெறிதரு கலைஐந் திற்கும்
நிகழ்த்துவர் இந்த நீர்மை "

என்று ஆசிரியர் அருள்நந்தி சிவனாரும், தமது சிவஞான சித்தியார் நூலின்கண் அருளிச் செய்திருத்தல், ஈண்டு உணர்ந்து மகிழ்தற்குரியது.

**தன்மாத்திரைகள் :** சப்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்பன. இவை முறையே ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம் எனவும் வழங்கப்படும். ஆசிரியர் திருவள்ளுவர் "சுவை யொளியூறோசை நாற்றமென்றைந் தின் வகை தெரிவான் கட்டே யுலகு" என்னும் திருக்குறளில், இவற்றைக் குறிப்பிட்டிருத்தல் காணலாம். மேற்குறித்த பூதங்கள் ஐந்தின் சூக்கும நிலையே, தன்மாத்திரைகள் ஆகும். தன்மாத்திரைகளில் இருந்தே பூதங்கள் ஐந்தும் முறையே தோன்றுகின்றன. தன்மாத்திரைகள் ஐந்தும் பஞ்சபூதங்களுக்குக்காரணமாயும், பஞ்ச பூதங்களைப் பற்றுக் கோடாகக் கொண்டு இந்திரியங்கள் விடயங்களை விடயிப்பதற்குத் துணைசெய்வனவாயும் இருக்கும். இதனை,

*"ஓசைநற் பரிச ரூப*
*இரதகந் தங்கள் என்று*
*பேசும்மாத் திரைகள் ஐந்தும்*
*பிறக்கும்பூ தாதி கத்தில்;*
*நேசஇந் திரியங் கட்கு*
*நிகழ்அறிவு இதனாற் காண்டும் ......"*

*"சாற்றிய பஞ்ச தன்மாத்*
*திரைகளிற் சத்தம் முன்னாத்*
*தோற்றும் வான் வளிதீ நீர்மண்......"*

எனவரும் சிவஞானசித்தியார் செய்யுட்களாலும் தெளியலாம். தன்மாத்திரை எனினும், சூக்குமபூதம் எனினும் பொருள் ஒன்றே. தன்மாத்திரையும் ஐம்பெரும் பூதமும், தேர் ஊர்வானுக்குத் தேர்போல இந்திரியங்கட்கு ஆற்றல்விளைவித்து நிற்கும். பெரும்பூதமும் தன்மாத்திரையும், குடமும் குடமேற்பூச்சும் போலும்.

**ஞானேந்திரியங்கள்:** சுரோத்திரம் துவக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணம் என்பன. இவற்றை முறையே செவி தோல்கண் நாக்கு மூக்கு(மெய் வாய் கண் மூக்கு செவி) என்பர். இவை ஐந்தும் முறையே ஐம்பூதங்களைப் பற்றுக்கோடாகக் கொண்டு, சுவை யொளியூறோசை நாற்றங்களை அறியும்.

*"சத்தா தியைஅறியும் தானம், செவிதோல்கண்*
*அத்தாலு மூக்குஎன் றறி"*

*"நற்செவி துவக்குக் கண்நா*
*நாசிஐந் தினையும், நல்லோர்*
*புத்திஇந் திரியம் என்று*
*புகன்றனர்; இவைத மக்குச்*
*சத்தநற் பரிச ரூப*
*இரதகந் தங்கள் ஐந்தும்*
*வைத்தனர் விடயம் ஆக,*
*அடைவினில் மருவும் என்றே"*

**கன்மேந்திரியங்கள்:** வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் என்பன. இவை முறையே வாய் கால் கை எருவாய் கருவாய் எனவும்படும். ஐம்பூதங்களைப் பற்றுக்கோடாகக்கொண்டு, இவைகள் பேசல் நடத்தல் கொடுத்தல் விடுத்தல் இன்புறல் என்னும் தொழில்களைச் செய்யும்.

*"வாக்குப்பா தம்பாணி மன்னுகுதம் உபத்தம்*
*ஆக்கருது நாளும் அது."*

*"வாக்கொடு பாதம் பாணி*
*பாயுவோ டுபத்தம் ஐந்தும்*
*நீக்கினர் முன்னே கன்மேந்*
*திரியங்கள் எனநினைந்தே;*
*ஆக்கிய வசன கமன*
*தானமும் விசர்க்கா னந்தம்*
*ஊக்கமார் ஐந்தும் ஐந்தின்*
*தொழில் என ஓதி னாரே"*

**அந்தக் கரணங்கள் :** மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்பன. சித்தம் இஃது யாதாகற்பாற்று என ஒரு பொருளைச் சிந்திக்கும். மனம் இது குற்றியாகற்பாற்று, மகனாகற்பாற்று என ஒன்றைச் சங்கற்பித்தும், அஃதாமோ அன்றோ என ஐயுற்றும் பற்றி நிற்கும். ஆங்காரமானது குற்றியென்றுதல் மகனென்றுதல் ஒன்றை நிச்சயிப்பேன் யான் என்று எழுச்சிகொள்ளும். புத்தியானது இவன்மகன், இது குற்றி, இது குடம், இஃது ஆடை என அவ்வப்பொருள்களைப் பெயர் சாதி கன்மம்

குணம் என்பனபற்றிச் சிறப்பு வகையால் துணியுர். கண்ணுக்குக்காட்டாகிய விளக்குப்போல, ஆன்மாவுக்குக் காட்டாக நிற்பது அந்தக்கரணம்.

உண்மை விளக்கத்தில், மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்னும் முறையில் வைத்து, அந்தக் கரணங்களின் பெயர் கூறப்பட்டுள்ளது. அமைச்சு நாடு அரண் பொருள் படை நட்பு என்பதே முறையாயினும்,

*"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்*
*உடையான் அரசருள் ஏறு"*

என ஆசிரியர் திருவள்ளுவர் கூறியவாறு போல, ஈண்டும் சித்தம் மனம் அகங்காரம் புத்தி எனற் பாலனவற்றைச் செய்யுள் நோக்கி முறைபிறழ வைத்ததாகக் கொள்ளுதல் வேண்டும்.

*"அந்தக் கரணம் அடைவே உரைக்கக்கேள்*
*அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம்—சிந்தை இவை*
*பற்றியதுநிச்சயித்துப்பல்கால்எழுந்திருந்தங்(கு)*
*உற்றது சிந்திக்கும் உணர்"*

—உண்மை விளக்கம்

பூதங்கள் ஐந்து, தன்மாத்திரைகள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, அந்தக்கரணங்கள் நான்கு ஆகிய இத்தத்துவங்கள் இருபத்துநான்கும், ஆன்மாவுக்குத் தூல வடிவில் நேரே தொடர்புற்றுப் பயன்படுதலின், ஆன்ம தத்துவம் எனப் பெயர் பெறும். இதனைச் சீகண்ட ருத்திரர் அதிட்டித்து நிற்பர்.

**வித்தியா தத்துவங்கள்–காலம்:** புத்தர் முதலானோர் காலம் என்றொரு பொருள் இல்லை என்பர். மாந்தளிர் முதலியன இளவேனிற் காலம் முதலியவற்றினன்றித் தோன்றாமையும், முல்லைப்பூ முதலியன கார்காலம் முதலியவற்றினன்றி மலராமையும் காண்கிறோம். இங்ஙனமே உலகத்துப் பொருள்களெல்லாம், ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றிப் பிறிதொரு காலத்தில் அழிந்துபடுதல் யாவரும் அறிந்ததொன்று. ஏனைக் காரணங்களெல்லாம் தொக்கவழியும், இதற்கு முன்னர்த் தோன்றாத ஒரு பொருள் இப்பொழுது தோன்றுதற்கு அமைந்த காரணம் யாது, அதுவே காலம் எனத் துணியப்படும்.

*"ஆயஅக் காலம் மூன்றாய்*
*ஆக்கியும் அளித்தும் போக்கிக்*
*காயமோ டுலகுக் கெல்லாம்*
*காலசங் கையி னைப்பண்ணி*
*நாயகன் ஆணை யாலே*
*நடத்திடும் சகத்தை யெல்லாம்"*

அசுத்த மாயையினின்று அநந்த தேவரால், முறையே காலமும் நியதியும் கலையும், கலையின் வித்தையும், வித்தையின் அராகமும் தோன்றும். "மாயையிற் காலமோடு நியதிபின் கலாதி தோன்றும்" என்பது சிவஞான சித்தியார். தோற்ற முறைமைபற்றிக் காலம் முன்னாயினும், தொழிற்பாட்டு முறைமைபற்றிக் கலை முன்னாகலின் "அருத்திமிகும் கலை காலம் நியதியுடன் வித்தை அராகம் இவை அனந்தரால் மாயைதனில் ஆகும்" எனச் சிவப்பிரகாசத்திற் கூறப்பட்டது.

காலம் செல்காலமான எல்லையும், நிகழ்காலமான பலனும், எதிர்காலமான புதுமையும் ஆக மூன்று விதமாகஇருக்கும்.

*"நிகழ்காலம் கழிகாலம் எதிர்காலம் என்றே*
*ஓசைதர வருங்காலம், எல்லைபலம் புதுமை*
*உறுவிக்கும் இறைசத்தி உடனாய் நின்றே"*

—சிவப்பிரகாசம்—49

**நியதி:** பால் ஊழ் தெய்வம் விதி நியதி என்பன ஒருபொருட் கிளவிகள். அவரவரால் ஈட்டப்படும் வினையின் பயனை அவரவரே நுகருமாறு, அரசர் ஆணைபோல நியமித்து நிறுத்துவது நியதி தத்துவம். ஒருபாற்கோடாது நடுநின்று செங்கோல் செலுத்தும் அரசன் ஆணை இல்வழி, எளியோர் பொருளை வலியோர் கவர்ந்து கொள்ளுவதுபோல, நியதி தத்துவம்இல்வழி ஒருவர் செய்த வினைப்பயன் மற்றொருவர் கவர்வதாய் முடியும். தொல்காப்

பியர் திருவள்ளுவர் இளங்கோவடிகள் முதலிய சான்றோர்களெல்லாம், இதனைத் தத்தம் நூல்களிற் குறிப்பிட்டு வலியுறுத்தியுள்ளமை காணலாம்.

"பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு"

என்பதைப்பற்றி, ஒரு சிலர் அவரவர் வினைப் பயனை நியமித்தற்கு இருவினையே அமையும், நியதிதத்துவம் வேண்டாஎன்பர். சடமாகிய இருவினையானது நுகர்ச்சியைப் பயத்தல் மாத்திரையேயன்றி, அந்நுகர்ச்சி வினை செய்தவனைச் சென்று அடையுமாறு செய்விக்கமாட்டா. ஆதலின் முதல்வனது ஆணையாகிய சத்தியை முன்னிட்டு, அவர் அவர் தம் வினைக்குரிய நுகர்ச்சியினை நியமித்து நிறுத்துதற்குக் கருவி நியதிதத்துவமேயாகும் என்க.

"செய்வினையும் செய்வானும்
அதன் பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
அல்லவற்றுக் கிலலையென
உய்வகையாற் பொருள்சிவன்என்
றருளாலே உணர்ந்தறிந்தார்"

எனச் சாக்கிய நாயனார் வரலாற்றில், ஆசிரியர் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்திருத்தல் ஈண்டு அறிதற்குரியது. "நியதி பின்தோன்றிக் கன்ம நிச்சயம் பண்ணி நிற்கும்" என்பது சிவஞான சித்தியார். "நியதி தேசமிகும் அரசர்தரும் ஆணை, செய்தி செய்தவரைத் துய்ப்பிக்கும் செய்கைபோல, நேசமுறும் தம் கன்மம் நிச்சயித்து நிறுத்தும்" என்பது சிவப்பிரகாசம்.

**கலை :** கலை என்னும் தத்துவமானது மூலமலத்தின் மறைப்புண்டு சூனியம் போல நின்றஆன்மாக்களுக்குப் போக நுகர்ச்சியின் பொருட்டு மலசத்தியிற் சிறிதே நீக்கி ஆன்மாக்களுக்குக் கிரியா சத்தியை விளக்குவது. 'கலித்தல்' நீக்குதலும் செலுத்துதலும்ஆகலின், மலத்தை நீக்குதலாற் கலை எனப்பெயராயிற்று. ஆனமாவின் கிரியாசத்தியை விளக்கிப் புத்தி தத்துவத்திற் செலுத்துவது கலை.

"அயர்விலாக் கலைபின் தோன்றி
ஆணவம் ஒதுக்கிச் சித்தின்
செயல்புரி கிரியா சத்தி
தெரிவிக்கும் சிறிதே"

—சித்தியார்—14[illegible].

"வைத்தகலை தான்மூல
மலம்சிறிதே நீக்கி
மருவும்வகை தெரிவிக்கும்
வாயில்களின் பயனை"

—சிவப்பிரகாசம். 39.

**வித்தை :** கலையினின்றும் தோன்றி ஆன்மாக்களுக்கு ஞானசத்தியை விளக்கி, எவ்வகைப்பட்ட உணர்வும் ஆன்மாவிற் சென்று விடயமாதற்குக் கருவியாய் நிற்பது வித்தியாதத்துவம். புத்தி தத்துவ இயக்கத்தாற் பரந்து நிகழும் உயிரின் ஆராய்ச்சி யுணர்வுக்கு அடிப்படைக் காரணமாய், உயிரின்கண் அறிவினை முதன்முதல் எழுப்புவது, இவ்வித்தியா தத்துவத்திற்கே யுரிய சிறப்பியல்பாகும். வித்தை என்பது, அறிவு எனப் பொருள் படும் வித் என்னும் தாதுவிற் பிறந்த வித்யா என்னும் வடசொல்லின் திரிபாகும்.

"வித்தை உயர்கலை அதனில் தோன்றி
அறிவினை உதிக்கப் பண்ணும்"

—சித்தியார், 145,

"வாயில்களின் பயனைப் புத்திதர,
வித்தை இடைநின் றறிவை
உயிர்க்குப் பொருந்தியிடும்
வகைபுணர்க்கும் புனிதசத்தி
புணர்ந்தே"

—சிவப்பிரகாசம்—37.

**அராகம் :** இச்சை நிகழ்ந்தன்றிப் போக நுகர்ச்சி செல்லாமையானும், இச்சையாவது ஞான விசேடமேயாகலானும், வித்தியாதத்துவத்தினின்றும் அராக தத்துவம் தோன்றி ஆன்மாவுக்கு இச்சாசக்தியை விளக்கிப் பொருள்களில் விருப்பத்தை யுண்டாக்கும். இச்சை எனப் பொருள் படுவதாகிய ராகம என்னும் வடசொல், தமிழில் அகரச்சாரியை பெற்று அராகம் என வழங்கப்படுவதாயிற்று.

"விச்சையின் அராகம்தோன்றி
வினைவழிபோகத் தின்கண்
இச்சையைப் பண்ணி நிற்கும்........."

—சித்தியார்—172.

"பேசரிய அராகம்தம் கன்மத்துக் கீடாய்ப்
பெற்றதனில் ஆசைதனைப் பெருகுவிக்கும்......"
—சிவப்பிரகாசம்—30.

இவ்வாறு காலம் நியதி கலை வித்தை அராகம் என்னும் தத்துவங்கள் ஐந்தும் ஆன்மாவுக்கு உபகாரமாய், ஏனைக் கருவிகள்போல அவத்தைப்படுதற்கு ஏதுவாய், இடையிடையே கூடுதலும் நீங்குதலும் இன்றி, எக்காலத்தும ஆன்மாவினுடனாய்க் கஞ்சுகம் (சட்டை, போர்வை) போலப் பந்தித்து நிற்றலின், இவை 'பஞ்ச கஞ்சுகம்' என வழங்கப்படும்.

**புருடன் :** இங்ஙனம் காலம் நியதி கலை வித்தை அராகம் என்னும் பஞ்ச கஞ்சுகத்துடன் கூடிப் பொதுமையாற் போத்திருத்துவம் (போகம் நுகர்வோனுதற்றன்மை) எய்தி நின்ற ஆன்மா, பிரகிருதி மாயையினது போக நுகர்ச்சியின்கண் ஈடுபடுதற்கு ஏதுவாகிய பஞ்சக்கிலேசம் என்னும் புமஸ்துவ(போக நுகர்ச்சிக்குரிய) மலமுடையதாய்ப் புருட தத்துவம் என நிற்கும். 'பஞ்சக் கிலேசம்' (ஐந்து குற்றங்கள்) என்பன, பொருள்களைத் திரியக் காணும் உணர்வாகிய அவிச்சையும், யான் என மதிக்கும்அகங்காரமும்,எனக்கு இது வேண்டும் என்னும் அவாவும், பொருள்களின்பாற் செல்லும் ஆசையும், அவை கிடையாதவழி எய்தும் கோபமும் ஆகும். இப்பஞ்சக்கிலேசமே புமஸ்துவ மலம் என்று கூறப்படும். திருவள்ளுவப் பெருந்தகை, இவ்வைந்தினையும் மூன்ருக அடக்கிக்,

'காம வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய்"

என அருளிச் செய்தனர். பஞ்ச கஞ்சுகமும், பஞ்சக்கிலேசமும், பொதுவகையானும் சிறப்பு வகையானும், போகம் நுகர்வோனுதற் றன்மைக்கு ஏதுவாக நிற்க, ஆன்மா புருடதத்துவம் எனப் பெயர்பெற்றுப்பிரகிருதி மாயையின்போகம் நுகர்தற்கு உரியவனுவன். ஆன்மா வியாபகமாயினும், அது புருடனுதற் கேதுவாய் விசேடித்து நிற்கும் தத்துவங்கள் சடமாதல் பற்றி, அடுத்ததன் தன்மையாய் நிற்கும் புருட தத்துவத்தையும் சடம் என்று உபசரித்துக் கூறுதலும் பொருந்தும். புருடதத்துவம் உண்மையாற் சித்தும், உபசாரத்தாற் சடமுமாம் என்பது உணரத்தக்கது.

"தொழில் அறிவு இச்சை மூன்றும்
வைச்சபோ திச்சா
ஞானக் கிரியைமுன் மருவி, ஆன்மா
நிச்சய புருடன் ஆகிப் பொதுமையின்
நிற்பன் அன்றே"
—சித்தியார். 146.

"ஐவகையால் உறுபயன்கள் நுகரவருங் காலம்
அதுபுருட தத்துவம்என் றறைந்திடுவர்
அறிந்தோர்"
—சிவப்பிரகாசம்—40.

**மாயை :** ஈண்டு மாயை எனப்படுவது மும்மலங்களுள் ஒன்ருகிய மாயையன்று. இது வித்தியா தத்துவங்களுள் ஏழாவதாக நிற்பது. அரும்பில் மணம் வெளிப்படாது அடங்கி நிற்றல்போல, முக்குணங்களும் விளங்குதலின்றிச் சூக்குமமாய் நின்ற அவத்தையாகிய மூலப்பிரகிருதி (மூலப்பகுதி)யே, ஈண்டு மாயை எனக் குறிக்கப்பட்டது. ஆன்மாவிற்குக் குணம் முதல் நிலம் ஈருகிய போக்கியங்கள், முறையே யுளவாதற் கேதுவாகக் கலையினின்றும் மூலப்பகுதி என்னும் தத்துவம் தோன்றிச்,சீகண்ட ருத்திரரின சத்தி கலக்கக் கலக்குண்டு, தன்னினின்றும் குண தத்துவத்தைத் தோற்றுவிக்கும்.

போக்கிய ரூபமாய் நின்ற தத்துவங்களுக்கெல்லாம இது மூலகாரணமாதல் பற்றி மூலப்பகுதி என்றும், பிரகிருதி (முதற்காரணம்) மாயை என்றும், பிரதானம் (முதன்மை), மான் (மகத்) என்றும், முக்குணங்களும் வியத்தமாய் விளங்காது மயில்முட்டையின் நீரில் ஐவகை நிறங்களும் போலச் சூக்குமமாய் நின்ற அவத்தையுடைமைபற்றி அவ்வியத்தம் (வெளிப்படாதது) என்றும், வழங்கப்படும்.

ஆன்மாக்களைப் போக நுகர்ச்சியிற் செலுத்தியும், அவற்றிற்குப் போக்கியப் பொருள்களாக அமைந்தும் மயக்கிநிற்றலின், மயக்குவது என்னும் பொருளில் மூலப்பிரகிருதியை ஆசிரியர் 'மாயை' என்று குறிப்பிட்டார். "வைத்ததோர் மலமாய் மாயைமயக்கமும் செய்யும் அன்றே" எனவும், "போகசாதனம் பெத்தம் ஆமே" எனவும் அருள்நந்தி சிவாசாரியர் கூறியிருத்தலும் காணலாம். (தொடரும்)

—ஆசிரியர்

# திருவள்ளுவம்

**பிறன்மனை விழையாமை :**

(1) பிறனுக்குப் பொருளாம் தன்மையுடையவளை விரும்பி ஒழுகுகின்ற அறியாமை, உலகத்தில் அறநூலையும் பொருள் நூலையும்ஆராய்ந்து அறிந்தவர்பால் நிகழாது.(2) காமம் காரணமாகப் பாவத்தின்கண் நின்றவர் எல்லாருள்ளும், பிறன்மனைவியை விரும்பி அவனது வாயிலின்கண் சென்று நிற்பவர்களைப் போலப் பேதைமையுடையவர்கள் எவரும் இல்லை. (3) தம்மை ஐயுறுத நல்லவருடைய மனைவியின்பால் தீங்கு செய்தலை விரும்பி ஒழுகுபவர்கள், உயிர் உடையவராயினும் இறந்தவரேயாவர். (4) காம மயக்கத்தால் தினையளவும் தம்செயல் விளைவை ஆராயாமல், பிறனுடைய மனைவியை விரும்புதல், எத்துணைப் பெருமையுடையவ ராயினும் ஒருவர்க்கு மிக்க சிறுமையை விளைவிக்கும். (5) எய்துதல் எளியது என்று கருதிப் பின் விளைவு கருதாது, பிறன் மனைவியின்பால் வரம்புகடந்து செல்லுபவன், மறைவின்றி எக்காலத்தும் நிலைநிற்கும் குடிப்பழியினை அடைவான். (6) பிறனுடைய மனைவியின் பால் நெறிதவறிச் செல்லுகின்றவனிடத்தில், பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியும் ஆகிய இந்நான்கு குற்றமும், ஒரு காலும் நீங்கமாட்டா. (7) அறநெறியின் இயல்பு தவருமல் இல்லறத்தில் வாழ்கின்றவன் என்று சொல்லப்படுபவன், பிறனுக்குரிய இயல்பையுடையவளது பெண்தன்மையை, விரும்பாதவனேயாவன். (8) பிறனுக்கு உரிய மனைவியை உட்கொண்டு பாராத பெரிய ஆண்தகைமை, சால்புடையோர்க்கு அறம்மட்டுமே யன்றி, நிரம்பிய ஒழுக்கமும் ஆகும். (9) அச்சம் தரும் கடலாற் சூழப்பட்ட உலகத்தில், இம்மை மறுமையாகிய எல்லா நன்மைகளையும் எய்துதற்கு உரியவர்யாவர் எனின், பிறன் ஒருவனுக்கு உரிமையாகி யிருப்பவளுடைய தோளைச் சேராதவரே ஆவர். (10) ஒருவன், அறத்தைத் தனக்கு உரியதாகச் செய்யாமல் பாவங்களையே செய்வானுயினும், பிறனுடைய உரிமை என்னும் எல்லைக்கு உட்பட்டு நிற்பவளது பெண்மையை விரும்பாதிருத்தல் கூடுமாயின், அஃது அவனுக்கு நலம் பயக்கும்.

**(16) பொறையுடைமை :**

(1) தன்னைக் குழிபறிப்பவரையும் வீழாமல் தாங்குகின்ற நிலத்தைப் போன்று, தமமை இகழ்ச்சி செய்து அவமதிப்பவர்களைப் பொறுத்தல், தக்கவர்களுக்குத் தலையாய அறம் ஆகும். (2) பொறுத்தல் நல்லது ஆதலால், தம்மால் ஒறுப்பதற்கு இயலும் காலத்திலும், பிறர் செருக்கினுற் செய்யும் இகழ்ச்சியைப் பொறுத்துக் கொள்க; இங்ஙனம் பொறுத்துக் கொள்ளுதலினும், அவ்விகழ்ச்சியை அப்பொழுதே மறந்துவிடுதல், மிகவும் நல்லது. (3) ஒருவனுக்கு வறுமையின் மிக்க கொடிய வறுமையாவது, விருந்தினரை வரவேற்காது நீக்குதல்; அதுபோல வன்மையின் மிக்க சிறந்த வன்மையாவது, அறிவில்லாமையால் தன்னை இகழ்ச்சிசெய்தவர்களைப்பொறுத்தல். (4) ஒருவன்,நற்பண்புகள் அனைத்தும் நிறைந்திருத்தல் ஆகிய பெருஞ்சிறப்பானது, தன்னிடம் இருந்து நீங்காதிருத்தலை விரும்புவானுயின், பிறர் செய்யும் பிழைகளைப் பொறுத்தல் ஆகிய நற்பண்பு, அவனுல் அழியாமற் காத்து ஒழுகப்பெறும். (5) பிறர் தமக்குச் செய்த தீங்கினைப் பொறுக்காமல், அவர்க்குத் தாமும்

தீங்கு செய்து ஒறுக்க முற்படுபவர்களை, ஒருபொருளாக அறிவுடையவர்கள் மனதத்திற் கொள்ள மாட்டார்கள்; பிறர் செய்யும் தீங்குகளைப் பொறுத்துக்கொள்பவரைப் பொன்போற் போற்றிப் பொதிந்து கொள்ளுவர். (6) தமக்குத் தீங்கு செய்தவனை ஒறுப்பவர்க்கு உண்டாவது அந்த ஒரு நாளைய இன்பமே; அதனைப் பொறுத்தவர்க்கோ, உலகம் அழியும் அளவும புகழ் உண்டாகும். (7) செய்யத் தகாத கொடியவற்றைத் தன்கட் பிறர் செய்தாராயினும், அவர்க்கு அதனால் வரும் துன்பத்திற்காக மனம் நொந்து, ஒருவன் அவர்பால் அறனல்லாதது செய்யாதிருத்தல்நல்லது. (8) மனச் செருக்கால் தமக்குத் தீங்கு செய்தவரை, நல்லவர்கள் தம்முடைய பொறுமையால் வெற்றி கொண்டு விடுக. (9) வரம்பு கடந்தவர்களின் வாயினின்று வரும் கொடிய சொற்களைப் பொறுப்பவர், துறவுநெறியில் நின்றவர்களைப் போன்று, மனமாசு இல்லாதவர் ஆவர். (10) அறிவில்லாதவர் சொல்லுகின்ற இகழ்ச்சிச் சொல்லைப் பொறுத்துக் கொள்ளுபவர்களுக்குப் பிறகு அடுத்தபடி யாகவே, உணவைத் தவிர்ந்து நோன்புகள் கடைப்பிடித்து உற்றநோயைப் பொறுத்துக் கொள்ளும் துறவியரும் கூட, பெரியோராக மதிக்கப்பெறுவர்.

(17) அழுக்காறாமை :

(1) தன் நெஞ்சத்தின்கண் பொறாமை என்னும் குற்றம் இல்லாத அறிவொடு கூடிய தன்மையினை, ஒரு நல்ல மனிதன் தனக்கு உரிய ஒழுக்க நெறியாகக் கொண்டு, உயிரினும் ஓம்புக. (2) யாவரிடத்தும் அழுக்காறு கொள்ளாமல் அதனின்று நீங்குதலை ஒருவன் பெறுவானாயின், அவன் பெறும் சிறந்த பேறுகளுள், அப்பேற்றினை ஒப்ப விழுமியது வேறு எதுவும் இல்லை. (3) பிறனுடைய செல்வம் கண்டவழி, அதற்காக மகிழாமல் பொறுமைப்படுதல் ஆகிய அழுக்காற்றைச் செய்பவன், மறுமைக்கும் இம்மைக்கும் அறமும் செல்வமும் ஆகிய நலங்களைத் தனக்கு விரும்பாதவன் என்று எள்ளப்படுவான். (4) தீயநெறியால் தமக்கு இம்மையிலும் மறுமையிலும் துன்பம் வருதலை அறிந்து, பொறாமை காரணமாக அறிவுடையோர் அறன் அல்லாத தீய செயல்களைச் செய்ய மாட்டார்கள். (5) பகைவர் எவரும் இல்லாமல் இருப்பினும், ஒருவர்க்குக் கேடு விளைவிக்க வல்லது அழுக்காறு; ஆதலின் அழுக்காறு உடையவர்க்குப் பகைவர் வேண்டுவதில்லை; கேடு விளைவிப்பதற்கு அஃது ஒன்றே போதும். (6) ஒருவன் பிறருக்குக் கொடுக்கும் பொருள்களைக் குறித்துப் பொறுமைப் படுபவன் மட்டுமேயன்றி, அவனுடைய சுற்றமும் கூட, உடுக்கப்படுவதும் உண்ணப்படுவதும் கிடையாமல் அழிந்து போதம். (7) பிறர் செல்வம் முதலியன கண்டு பொறுமைப் படுபவனைத், திருமகள் தானும் பொறுக்காமல், தன் தமக்கையாகிய மூதேவிக்குக் காட்டிக் கொடுத்துவிட்டு, நீங்கிவிடுவாள். (8) அழுக்காறு எனப்படும் ஒப்பற்ற கொடிய பாவி, தன்னை உடையவனை, இம்மைக்கண் செல்வத்தைச் கெடுத்து, மறுமைக்கண் நிரயத்திலும் கொண்டு போய்ச் செலுத்தி விடும். (9) பொறுமையினாற் கோணலுற்ற மனத்தை யுடையவன் உயர்வடைதலும், அஃது இல்லாத நேரிய செம்மைப் பண்பு உடையவன் இழிவு அடைதலும், ஒருபோதும் உளவாகா; உளவாயின் அவை ஆராயப் படும். (10) பொறுமைப்பட்டுப் பெருமை அடைந்தவாகளும் இல்லை; பொறுமை இல்லாதவர்களுள், பெருமை அடைவதினின்று நீங்கி இழிவு அடைந்தவர்களும் இல்லை.

(18) வெஃகாமை :

(1) நடுவுநிலைமை என்னும் பண்பு தன்பால் இல்லாமல், பிறர் பாடுபட்டுத் தேடிய பொருளை, ஒருவன் கவர்ந்து கொளளக் கருதுவானாயின், அஃது அவன் குடும்பத்தைக் கெடும்படி செய்து, பலவகைத் துன்பங்களையும் அப்பொழுதே அவனுக்குக் கொடுக்கும். (2) ஒருவன் பொருட்குப் பிறன் உரியவன் அல்லன் என்னும், நடுவுநிலைமைக்கு மாறுபட்ட செயலைச் செய்ய அஞ்சுபவர்கள், பிறர் பொருளைக் கவர்வதனால் தமக்கு வரும் நன்மையை விரும்பி, அதனைக் கவர்வதற்குப் பழியின் பாற் படும் செயல்களைச் செய்ய மாட்டார்கள். (3) அறத்தான்வரும் நிலையான இன்பத்தை விரும்புபவர்கள், பிறரிடமிருந்து கவர்ந்த பொருளால், தாம் எய்தும் நிலையில்லாத இன்பத்தை விரும்பி, அவர்

மாட்டு அறன் அல்லாத செயல்களைச் செய்ய மாட்டார்கள். (4) ஐம்புலன்களை யும் பாவநெறியின்கண் செல்ல விடாமல் வெற்றி கொண்ட,குற்றமில்லாத அறிவினை யுடையவர்கள், யாம் வறுமையில் இருக் கின்றோம் என்று கருதி, அது தீர்தற் பொருட்டுப் பிறர் பொருளை விரும்பமாட் டார்கள். (5) பிறர் பொருளை விரும்பி, யாவர்மாட்டும் அறிவொடு படாத செயல் களை அறிவுடையார் செய்வராயின், நுண் ணிதாய் எல்லா நூல்களினும்சென்ற அவர் களின் அறிவு, என்ன பயனை யுடைய தாகும்? (6) அருளாகிய அறத்தை விரும்பி, அதற்கு வழியாகிய இல்லறத் தின்கண் நின்றவன், பிறர் பொருளை விரும்பி, அதனை அடைவிக்கும் தீய நெறி களை எண்ணுவானாயின், அவ்வளவிலேயே அழிந்தொழிவான். (7) பிறர் பொருளைக் கவர்ந்து, அதனால் வருகின்ற நலங்களை அடையலாம் என்று விரும்புதலை விடுக; பின்னர் விளைவைத் தருமிடத்து அதன் பயன், மாட்சிமை யுடையதாதல் இல்லை ஆதலான். (8) சுருங்கும் இயல்புடைய செல்வம், சுருங்காமல் இருப்பதற்கு உரிய காரணம் யாது என்று ஒருவன் ஆராயின், அது பிறன் விரும்பும் கைப்பொருளைத் தான் விரும்பாதிருத்தலை ஆகும். (8) இது வே அறம் என்று அறிந்து, பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரைத், திருமகள் தான் அடைவதற்கு உரிய காலமும் இடமும் செவ்வியும் முதலாயின அறிந்து, தானே தேடிச் சென்று அடைவாள். (10) பின்னர் விளைவதனை அறியாமல், ஒருவன் பிறர் பொருளைக் கவரக் கருதினால், அக் கருத்து அவனுக்கு இறுதியைப் பயக்கும்; பிறர்பொருளை விரும்பாமை என்னும் பெரு மிதம் வெற்றியைப் பயக்கும்.

**(19) புறங்கூறாமை :**

(1) ஒருவன் அறம் என்ற சொல்லைச் சொல்லுவதும்செய்யாமல், பாவங்களையே செய்வானாயினும், பிறனைப் புறத்தே இகழ்ந்து கூறாதவன் என்று உலகத்தா ரால் சொல்லப்படுதல், இனியதாகும். (2) அறம் என்பதொன்று இல்லை என்று அழித் துச் சொல்லி, அதன் மேலும் பாவங்களைச் செய்தலினும், ஒருவனைக்காணாத இடத்து இகழ்ந்துரையால் அழித்துச் சொல்லிக், கண்டஇடத்து அவனோடு பொய்யாக நகைத்துப் புகழ்ந்து உரையாடுதல், மிக்க தீமையை யுடையது. (3) பிறரைக் காணாத இடத்தில் இகழ்ந்து கூறி, அவ ரைக் கண்ட இடத்து அவருக்கு இனிய வன் போலப் பொய்யாக நடித்து, ஒருவன் உயிர்வாழ்தலை விட, அங்ஙனம் செய்யா மற் செத்தொழிதல் நல்லது; அஃது அவனுக்கு அறநூல்கள் கூறும் மறுமைப் பயனையேனும் கொடுக்கும். (4) ஒருவனது எதிரிலே நின்று கண்ணோட்டம் அறும்படி இடித்துக் கூறினாலும் கூறலாம்; அவன் எதிரிலே இல்லாத பொழுது பின்னே வரும் குற்றத்தை நோக்காத இழிசொல்லை, எவனும் சொல்லாது ஒழிக. (5) புறம் சொல்லுகின்ற ஒருவன், அறனை நல்லது என்று சொல்லினாலும், அதனை அவன் தன் மனத்தோடு கூடியவனாய், உண்மையாகச் சொல்லுகின்றானல்லன் என்பது, புறம் சொல்லுதற்குக் காரண மான, அவனது மனப்புன்மையினாலேயே அறிந்து கொள்ளப்படும். (6) பிறனொரு வனின் குற்றத்தை அவன் இல்லாத இடத்தே கூறுகின்றவன், தன்னுடைய குற்றங்களுள்ளும் மிக்கனவற்றை ஆராய்ந்து,தான் மறுக்கஇயலாவகையில், தன் எதிரிலேயே பிறர்கூற, மிகவும் இழிவு படுத்தப் பெறுவான். (7) தம்மொடு சேர்ந்து மகிழுமாறு, இனிய சொற்களைச் சொல்லிப் பிறரொடு நட்புச் செய்து கொள்ளும் இயல்பினை அறியாதவர், மனம் பிளவுபடும் வகையிற் புறங்கூறி நின்று தம்முடைய சிறந்த நண்பர்களையும் தம் மிடம் இருந்து பிரிந்து போகச் செய்து கொள்வர். (8) தம்முடன் நெருக்கமாகப் பழகிய நண்பர்களின் குற்றத்தையும் கூட, அவர்கள் இல்லாத இடத்தில் பலரும் அறியப் பரப்புகின்ற இழிந்த இயல்பினை யுடையவர்கள், அயலார் மாட்டுச் செய் யும் தீங்கு எத்தகையதாக இருக்குமோ? (9) பிறர் இல்லாத இடம்பார்த்து, அவர் கள் மேற் புல்லிய சொற்களைக் கூறுகின்ற கயவனின் உடற்சுமையை, இக்கொடியது பொறுத்தலே எனக்கு அறமாகும் என்று கருதியே, நிலமானது பொறுக்கின்றது போலும்! (10) அயலாரையும் புறத்தே பழித்துக் கூறுகின்றவர்கள், அதன்

பொருட்டுப் பிறருடைய குற்றங்களைக் காணுமாறு போல, அயலாரைப் புறம் கூறுகின்ற தம்முடைய குற்றத்தையும் காணவல்லவர்கள் ஆயினுல், அவர்களின் நிலைபெறு உடைய உயிர்க்கு, வருவதொரு துன்பம் எதுவும் இல்லை.

## (20) பயனில சொல்லாமை :

(1) அறிவுடையார் பலரும் கேட்டு வெறுக்கும்படி, பயன் இல்லாதனவாகிய சொற்களைச் சொல்லுகின்றவன், இளையர் நண்பர் முதலிய எல்லோராலுமே இகழப்படுவான். (2) பயன் இல்லாத சொற்களை அறிவுடையார் பலரின் முன்னிலையில் ஒருவன் சொல்லுதல், வெறுப்பை விளைவிக்கும் இழிசெயல்களைத் தன்னுடைய நண்பர்கள்பாற் செய்தலினும், தீங்கு ஆகும். (3) பயன் இல்லாதனவாகிய பொருள்களைப்பற்றி, ஒருவன் விரித்துக் கூறும் சொற்களே, இவன் பண்பாடு இல்லாதவன் என்பதனை வெளிப்படுத்திவிடும். (4) பயனெடு பொருந்தாத, இனிமையும் மெய்ம்மையும் ஆகிய பண்புகள் அமையாத சொற்களை, ஒருவன் பலரிடையே கூறுவானயின், அவை நாகரிகப் பாங்கு எய்தாமல், அவன் பல நன்மைகளை இழக்குமாறு செய்யும். (5) பயனிலவாகிய சொற்களை, இனிய பண்புடையவர்கள் சொல்லுவராயின், அவருடைய மேம்பாடும் நன்மதிப்பும் நீங்கிவிடும். (6) பயனில்லாத சொற்களைப் பலகாலும் சொல்லுபவனை, மனிதன் என்று சொல்லற்க; மனிதர்களுள் பதர் என்றே சொல்லுக. (7) நல்ல இனிய பண்பொடு பொருந்தாத சொற்களை, ஒருகாற் சான்றோர்கள் சொல்லுவராயினும், சொல்லுக; ஆனுல் அவர் பயனில்லாத சொற்களைச் சொல்லாதிருத்தல் நல்லது. (8) அறிதற்கு அரிய பயன்களை ஆராயவல்ல அறிவினை உடையவர்கள், மிகுந்த பயனுடையன அல்லாத வெற்றுச் சொற்களைச் சொல்ல மாட்டார்கள். (9) மயக்கத்தினின்று நீங்கிய தூய அறிவினை உடையவர்கள், பொருளற்ற பயனில் சொற்களை, மறந்தும்கூடச் சொல்லமாட்டார்கள். (10) சொல்லுவதாக இருப்பின், சொற்களில் பயனுடைய சொற்களையே சொல்லுக; பயனில்லாத சொற்களைச் சொல்லாமல் விட்டு விடுக.

## (21) தீவினை அச்சம் :

(1) அகந்தை காரணமாகக் கொடியசெயல்களைச் செய்வதற்கு, அவற்றை முன்பே பலகாற் செய்து பழகிய தீவினையுடையவர்கள், அஞ்சமாட்டார்கள்; ஆனுல் அதற்குச் சிறந்தவர்களாகிய பெரியோர்கள் அஞ்சுவார்கள். (2) தீய செயல்கள் எக்காலத்தும் எவ்விடத்தும் நல்லனவாகாமல் தீய துன்பங்களையே கொடுத்தல் திண்ணம்; ஆதலால், தீய செயல்கள் நல்லோரால் நெருப்பினும் கொடியனவாகத் தெளிந்து, அஞ்சி விலக்கப்படும். (3) பகைத்து வருத்துபவர்களிடத்தும் தீய செயல்களைச் செய்யாமல் விடுதலை, நலம் நாடும் அறிவுகள் எல்லாவற்றுள்ளும் தலையாய அறிவு என்று, பெரியோர்கள் சொல்லுவர். (4)மறந்தும் கூட மற்றவனுக்குக் கெடுதி செய்தலைக் குறித்து நினைக்காதே; நினைத்தால், அங்ஙனம் நினைப்பவனுக்குக் கெடுதி விளைவிக்கும் செயலை அறக்கடவுள் நினைக்கும். (5) யான் வறியனய் இருக்கின்றேன் என்று கருதி, அது தீரும்பொருட்டுப் பிறர்க்குத் தீங்கான செயல்களைச் செய்யாதொழிக; செய்தால், அங்ஙனம் செய்பவன் மீண்டும் மிக்க வறுமையையே யுடையவன் ஆவான். (6) துன்பம் விளைவிக்கும் இயல்புடைய பாவச் செயல்கள், தன்னைப் பின்வந்து வருத்துதலை விரும்பாதவன், தீமையின்பாற் பட்ட செயல்களை மற்றவர்கள்பாற் செய்யாமல் இருப்பானுக. (7) எத்தகைய பெரிய பகையை உடையவரும், அதனை ஒருவகையில் தப்பி உய்வார்கள்; தீவினையாகிய பகையோ, தன்னைச் செய்தவனை விட்டு நீங்காமல், பின்தொடர்ந்து சென்று கொல்லும். (8) பிறர்க்குத் தீங்கான செயல்களைச் செய்தவர்கள், தாமே பின்னர்க் கேடு அடைதல், ஒருவனது நிழல் நெடிதாகச் சென்றும், அவனை விடாது வந்து, அவனது அடியின்கண் தங்கிய தன்மையைப் போன்று, தவிர்க்க இயலாதது ஆகும். (9)ஒருவன் தனக்குநன்மை வருதலில் விருப்பம் உடையவன் என்றல், எத்துணைச் சிறியதொரு தீய செயலையும், அவன் பிறர் இடத்துச் செய்யாமல் நீக்கி



ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி (உற்சவர்), திருத்தணிகை

விடுக. (10) ஒருவன் தவறான நெறியிற் சென்று,மற்றவர்கள்பால் தீயசெயல்களைச் செய்யமாட்டான் என்றால், அவன் எத் தகைய கேடும் அடையான் என்பதனைத் திண்ணமாக அறிந்து கொள்க.

## (22) ஒப்புரவு அறிதல் :

(1) தமக்கு நீரைத் தருகின்ற மேகங் களுக்கு உயிர்கள் என்ன கைம்மாற்றைச் செய்ய வல்லனவாகும்? அம்மேகங்களைப் போன்ற பெரியோர்கள் செய்யும் உதவி களும், அம்மேகங்களைப் போன்று கைம் மாறு நோக்குவன அல்ல. (2) ஒருவன் முயற்சி செய்து ஈட்டிய செல்வம் முழு வதும், தகுதியுடைய நல்லவர்களுக்கு உதவி செய்தற்பொருட்டேயாகும். (3) தகுதியுடைய நல்லவர்களுக்கு உதவி செய்வதுபோல, நல்லனவாகிய பிற செயல் களைத் தேவருலகத்திலும் இவ்வுலகத் திலும் பெறுதல் இயலாது. (4) உலக நடையினை அறிந்து, பிறர்க்கு உதவி செய்து வாழ்பவனே உயிருடன் கூடி வாழ் பவன் ஆவான்; அஃது அறிந்து செய்யா தவன், செத்தவர்களுள் ஒருவனாகக் கரு தப்படுவான். (5) உலக நடையை விரும் பிச் செய்யும் பெரிய அறிவினையுடையவ னது செல்வம், ஊரில் வாழ்பவர்கள் தண் ணீர் உண்ணும் குளம், நீரால் நிறைந்த தனைப் போலப் பலருக்கும் மகிழ்வும் நல மும் பயக்கும். (6) செல்வம் உதவி செய் யும் தன்மையுடையவனிடம் சேருமாயின், அது பயன்படுகின்ற ஒரு சிறந்த மரம், ஊரின் நடுவே பழுத்தாற் போலப் பிறருக் கும் உரியதாகும். (7) செல்வமானது பிறர்க்கு உதவி செய்யும் சிறந்த இயல்பை உடையவனிடத்திற் சேருமாயின், பிணி தீர்க்கும் மருந்தாக அமைந்து, எளிதாகக் கிடைத்தலினும் தவறாத சிறந்த மரத்தைப் போல யாவரானும் புகழப் பெறும். (8) செல்வம் சுருங்கி வாய்ப்பு இல்லாத காலத் திலும் தாம் செய்யத் தகுவனவற்றை அறிந்தொழுகும் இயற்கையறிவுடையவர், பிறர்க்கு உதவி செய்வதற்குச் சிறிதும் தளர்ச்சி அடைய மாட்டார்கள். (9) ஒப்புரவு செய்தலை யுடையவன் நல்குரவு அடைந்த வன் ஆதலாவது, தான் நுகர்வன நுகரப் பெறுமையன்று; தான் தவிராது செய்யும் நீர்மையை யுடைய உதவிச் செயல்களைப் பிறர்க்குச் செய்யப் பெறாமல் வருந்துகின்ற இயல்பேயாகும். (10) பிறருக்கு உதவி செய்தலினால், ஒருவனுக்குப் பொருட்கேடு விளையும் என்றால், அக்கேடு தன்னை விற்று யினும் பெற்றுக்கொள்ளும் தகுதியை உடையது.

### ஈகை :

(1) ஒரு பொருளும் இல்லாதவர்க்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடுப் பதே, பிறர்க்குக் கொடுத்தலாவது; அது தவிர்ந்து பிற எல்லாக் கொடையும், அளவு குறித்து வாங்கி, வாங்கியவாறே எதிர் கொடுக்கும் கடன்போலும் இயல்பை யுடையது. (2) வீட்டுலகிற்கு நல்லநெறி என்பார் உளராயினும் ஏற்றல் தீயது; கொடுப்பவர்கள் மேலுலகத்தை அடை தல் இல்லை என்பார் உளராயினும், கொடுத் தலே நல்லது. (3) யான் வறியவன் என்று இரப்பவன் சொல்லும் இளிவரவைத் தான் பிறரிடம் சொல்லாமையும், அதனைத் தன் னிடம் சொல்லியவர்க்கு இல்லை என்னாது ஈதலும், நல்ல குடிப்பிறப்பை யுடையவ னிடம் மட்டுமே உள்ளனவாகும். (4) ஒரு பொருளை இரந்தவரின் இனிய முகத்தைக் காணும் அளவும், இரத்தலே யன்றி இரக் கப் பெறுதலும் கூட, மிகவும் துன்பமா கும். (5) தவத்தான் வலிமையுடையவர்க்கு வலிமையாவது, தம்மையுற்ற பசியைப் பொறுத்தல்; அவ்வலிமைதானும், அங்ங னம் பொறுத்தற்கரிய பசியைத் தமது ஈகையாற் போக்குவாரது வலிமைக்குப்பிற் பட்டதேயாம். (6) வறியவர்களின் கொடிய பசியினை அறன் என்று கருதித் தீர்க்க ; அதுவே பொருள்பெற்றவன் ஒருவன், தன் பொருளை வைக்கும் இடமாகும். (7) தன்னி டம் உள்ளதனைப் பிறருக்கும் பகுத்துக் கொடுத்து உண்ணுதலிற் பழகியவனை, பசிஎன்னும் கொடிய நோய் நெருங்குதல் இல்லை. (8) தாம் பெற்றிருக்கும் பொரு ளைப் பிறர்க்கு ஈயாமல் வைத்திருந்து, பின் னர் இழந்தே விடுகின்றஇரக்கமற்றவர்கள், வறியவர்கட்கு வேண்டியவற்றைக் கொடுத்து, அவர்கள் உவத்தலான், இரக்க முடையோர் எய்தும் இன்பத்தினைக் கண் டறிய மாட்டார்கள் போலும். (9) மேலும் மேலும் தமது செல்வத்தின் அளவை நிரப்

புவதற்காக, வறியவர்க்கு ஈயாமல், பிறரை விலக்கித் தாம் மட்டுமே தனியாக இருந்து உண்ணுதல், ஒருவர்க்குப் பிறர்பாற் சென்று இரத்தலைக் காட்டிலும் மிக்க துன்பம் பயப்பது திண்ணம். (10) ஒருவனுக்குச் சாதலைப்போலத் துன்பம் தருவது எதுவும் இல்லை; அத்தகைய சாதலும்கூட, வறியவர்க்கு ஒன்றைக் கொடுக்க முடியாத இடத்து, மிகவும் இனியது ஆகும்.

### புகழ்

(1) வறியவர்க்கு ஈக; அதனாற் புகழ் உண்டாக வாழ்க; அப்புகழைத் தவிர, மக்களுயிர்க்குப் பயன் வேறு எதுவும் இல்லை. (2) உலகத்திற் கூறுவார் கூறுவனவாகிய செய்திகள் எல்லாம், வறுமையால் இரப்பார்க்கு அவர்வேண்டியதொன்றைக் கொடுப்பவர்கள்பால் நிலைபெற்று விளங்கும் புகழேயாகும். (3) தனக்கு ஒப்பு எதுவும் இல்லையாகும்படி, சிறந்தோங்கிய புகழைத் தவிர, உலகத்தில் அழியாமல் நிலைபெறுவது வேறுஒன்றும் இல்லை. (4) ஒருவன் நிலவுலகின்கண்ணே அழியாமல் நிலைபெறும் புகழைச் செய்ய வல்லவனாயின், தேவலோகம் தன்னை எய்திநின்ற ஞானிகளையும் போற்றாமல், அவனையே பெரிதும் போற்றும். (5) பண்பு விளக்கத்திற்கு ஆக்கமாகும் பொருளழிவும், புகழுடம்பு உளதாய் நிலைபெறுதற்குரிய புலாலுடம்பின் மறைவும், சதுரப்பாடு உடையவர்களுக்கே யன்றி ஏனையோர்க்கு நேர்தல் இல்லை. (6) மன்பதையிற் புறத்தே வெளிப்படின், புகழுக்குரிய செயல் நலத்துடன் வெளிப்படுக; அச் செயல்நலம் இல்லாதார், மன்பதையிற் புறத்தே வெளிப்படுதலினும், வெளிப்படாமல் இருத்தல் நல்லது. (7) தமக்குப் புகழ் உண்டாகும்படி வாழ இயலாதவர்கள், அது குறித்துத் தம்மையே நொந்துகொள்ளக் கடவர்; புகழ் இலர் என்று தம்மை இகழ்ச்சி செய்பவர்களை, நொந்து கொள்வது எற்றுக்கு? (8) தமக்குப் பின்னர் எஞ்சி நிலைபெறும் புகழ் என்னும் பெறுதற்கரிய பொருளைப் பெறாமல் விடுவராயின், உலகத்திலுள்ள மக்களுக்கெல்லாம் அதுதானே பெரிய இகழ்வாகும். (9) புகழ்இல்லாத உடம்பைச் சுமந்தநிலம், பழியில்லாத வளப்பம் மிக்க விளையுள் குன்றும். (10) தம்மிடம் பழி எதுவும் இல்லாதபடி வாழ்பவர்களே, உயிரோடு கூடி வாழ்பவர்கள் ஆவர்; புகழ் எதுவும் இல்லையாகப் பழியுடன் வாழ்பவர்கள், வாழாமல் இறந்த நடைப்பிணங்களே யாவர்.

### (26) அருள் உடைமை :

(1) செல்வங்கள் பலவற்றிலும் மேலான செல்வம், அருளால் வரும் செல்வமே; பொருளால் வரும் செல்வங்கள் இழிந்தவர்களிடத்திலும் உள்ளன. (2) நல்ல நெறிகளால் ஆராய்ந்து அருளை உடையவர் ஆகுக; பலவகைகளால் ஆராய்ந்தாலும், அவ் அருள்தான் துணை செய்யும். (3) இரக்கம் நிறைந்த நெஞ்சு உடையவர்களுக்கு, இருள் நிறைந்த துன்ப உலகத்துட்சென்று புகுதல் இல்லை. (4) நிலைபேறுடைய உயிர்களைக் காத்து அருளுடையவனாக வாழ்பவனுக்கு, தனது உயிர் அஞ்சுதற்குரிய தீவினைகள் இல்லை என்று அறிந்தோர் கூறுவர். (5) அருள் உடையவர்க்குத் துன்பம் நேராது;இதற்குக் காற்று வீசுகின்ற வளப்பம் மிக்க இப்பெரிய உலகமே சான்று. (6) அருளைத் தவிர்ந்து, உயிர்கள்பாற் கொடுமை செய்து வருகின்றவர்களை, உறுதிப் பொருளை இழந்து, வாழ்வின் குறிக்கோளையும் மறந்தவர்கள் என்பர் நல்லோர். (7) பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலக இன்பம் இல்லாதது போல, உயிர்கள்பால் அருள் இல்லாதவர்க்கு வீட்டுலக இன்பம் இல்லை. (8) பொருளை இழந்தவர், பின் ஒரு காலத்து அதனைப் பெற்றுச் சிறப்புறுவர்; அருளை இழந்தவர்கள் அழிவார்கள்; பின் ஒரு காலத்தும் அவர்கள் சிறப்புஅடைவதில்லை. (9) அருள் இல்லாதவன் செய்கின்ற அறச் செயலை ஆராய்ந்தால், அஃது அறிவுத் தெளிவு இல்லாதவன் மெய்ப்பொருளை உணர்ந்தாற் போல்வதாகும். (10) ஒருவன் தன்னைவிட மெலிந்தவரைத் துன்புறுத்தச் செல்லும்பொழுது, தன்னைவிட வலியவர் முன்னே, தான் அஞ்சி நிற்கும் நிலையினை நினைப்பானாக.

### (26) புலால் மறுத்தல் :

(1) தன் உடம்பைப் பருக்கச் செய்வதற்குத் தான் வேறு ஓர் உயிரின் உடம்பைத்

தின்பவன், எவ்வாறு அருளை உடையவனுவான்? (2) பொருளாற் பயன் கொள்ளுதல் அதனைப் பாதுகாவாதார்க்கு இல்லை; அதுபோல அருளாற் பயன் கொள்ளுதல் புலால் தின்னுபவர்க்கு இல்லை. (3) கொலைக் கருவியைக் கையிற் கொண்டவர் மனத்தைப் போல, ஓர் உயிரின் உடலைச் சுவைத்துத் தின்றவர்களின் மனமும், நல்லதாகிய அருளில் செல்லாது. (4) அருள் எது என்றால், ஓர் உயிரையும் கொல்லாதிருத்தல்; அருளல்லாதது (பாவம்) எது என்றால், ஓர் உயிரைக் கொல்லுதலால் வந்த ஊனைத் தின்னுதல். (5) உயிர் இனங்கள் உடம்போடு கூடி நிலை பெறுதல், ஊன் தின்னுமையினல் உள்ளது; ஊனைத்தின்பவனை விழுங்கிய நரகம் பின் அவனை உமிழத் திறவாது. (6) ஊனைத் தின்பதன் பொருட்டு உலகமக்கள் உயிர்களைக் கொல்லுவதில்லை என்றால், விற்றுப் பொருள் ஈட்டும் பொருட்டு ஊன் விற்பவர்கள் ஒருவரும் இரார். (7) புலால் என்பது வேறு ஓர் உயிரினது உடம்பின் புண்ணேயாகும்; ஆதலின் அது தூயதன்று என அறியவல்லவர்களாயின், அதனை உண்ணுமல் நீக்கி விடுதல் வேண்டும். (8) மயக்கம் ஆகிய குற்றத்தின் நீங்கிய அறிவினையுடையவர்கள், ஓர் உயிரினின்று நீங்கிவந்த பிணம் ஆகிய ஊனை உண்ண மாட்டார்கள். (9) தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து, ஆயிரக் கணக்கான வேள்விகளைப் புரிந்து அடையும் நலன்களிலும், ஒரு விலங்கின் உயிரைப் போக்கி, அதன் ஊனை உண்ணுதிருத்தலால் விளையும் பயன் பெரியது. (10) எந்த உயிரையும் கொல்லாதவனுமாய், அதன் புலாலையும் உண்ணுமல் மறுத்து விலக்கியொழித்தவனை, எல்லா உயிர்களும் கை குவித்துத் தெய்வமாக மதித்து வணங்கி மகிழும்.

**(27) தவம் :**

**(1)** தம் உயிர்க்கு வரும் துன்பங்களைத் தாங்கிக்கொள்ளுதலும், தாம் பிற உயிர்கட்குத்துன்பம் செய்யாமையுமே, தவத்தின் இலக்கணமாகும். (2) தவம் செய்யப்பெறுவது முன்னே தவம் உடையவர்க்கே கைகூடும்; அம்முன்னைத்தவம் இல்லாதவர்கள் தவத்தை மேற்கொள்வது பயனில் முயற்சியேயாம். (3) துறவிகளுக்கு உண்டியும் உறையுளும் உதவவிரும்பியே, இல்லறத்தைப் பற்றி நிற்பார், தாம் தவம் செய்தலை மறந்தார்போலும். (4) பகைவரை அடக்குதலும், அன்புடையவர்களை உயர்த்துதலும் ஆகிய இவ்விரண்டும், தவம் செய்வார் நினைப்பாராயின், அவர்தம் தவ வலிமையான் உண்டாகும். (5) விரும்பியவற்றை விரும்பியபடியே அடையச்செய்வதனால், செய்யத் தக்கதாகிய தவம், இப்பிறவியிலேயே அறிவுடையோரால் முயன்று செய்யப்படும். (6) தவம் செய்கின்றவரே, தம் கடமையைச்செய்கின்றவர் ஆவர்; அவர் அல்லாத மற்றவர்கள், ஆசையாகிய வலையுள் அகப்பட்டுத் தமக்குக் கேடு செய்து கொள்பவர்களே ஆவர். (7) சுடுந்தோறும் சுடுந்தோறும் குற்றம் நீங்கி ஒளிவிடும் பொன்னைப்போலத், தவம் செய்யவல்லவர்களுக்குத் துன்பம் வருத்துந்தோறும் வருத்துந்தோறும் பாவம் நீங்கி ஞானம் பெருகும். (8) தவத்தால் தன் உயிரைத் தனக்கு உரியதாகுமபடி பெற்றுக்கொண்டவனை, அது பெருத மற்ற உயிர்களெல்லாம் வணங்கும். (9) தவத்தான் வரும் ஆற்றலை அடையப்பெற்றவர்க்குக் கூற்றுவனைக் கடந்து செல்லும் வெற்றியும் கைகூடும். (10) உலகத்தில் அறிவு இல்லாதவர் பலராக இருத்தற்குக் காரணம், தவம் செய்வோர் சிலராக, அது செய்யாதார் பலராதலே ஆகும்.

**28. கூடா ஒழுக்கம் :**

**(1)** வஞ்சம் பொருந்திய மனத்தை உடையவனது போலி ஒழுக்கத்தை, உடம்பாய் அவனுடன்கலந்துள்ள ஐந்துஇயற்கை முதற்பொருள்களும் கண்டு, தமக்குள்ளே நகைக்கும். (2) தான் அறிந்த குற்றச் செயலில் தனது நெஞ்சம் ஈடுபடுமாயின், ஒருவனுக்கு வான்போல் உயர்ந்த தவ வேடம், என்னபயனைத் தரும்? (3) மனத்தை அடக்கும் வலிமை இல்லாத இயல்புடையவன் மேற்கொள்ளும் வலிய தவ வேடம், பசு புலியின் தோலைப்போர்த்துக்கொண்டு பயிரை மேய்ந்தாற் போல்வதாகும். (4) தவவேடத்தில் மறைந்து நின்று பொருந்தாத தீய செயல்களைச்

செய்தல், வேட்டுவன் புதரின்கண் மறைந்து நின்று பறவைகளைப் பிடித்தலை ஒக்கும். (5) யாம் பற்றுக்களை அறுத்துவிட்டேம் என்று சொல்லிக் கொள்பவர்களின் போலி ஒழுக்கம், பின்னர் எத்தகையது எத்தகையது என்று வருந்துமாறு, பல துன்பங்களையும் விளைவிக்கும். (6) மனத்தால் துறவாமல், துறந்தவர்களைப்போல, உலகத்தை ஏமாற்றி வாழ்பவர்களைக் காட்டிலும், கொடியவர்கள் இல்லை. (7) குன்றி மணியின் புறத்தைப் போல, வேடத்தால் செம்மை உடையவராகப் புறத்தே காணப்படினும், அதன் மூக்குப்போல மனம் இருண்டு இருப்பார் பலரை உடையது இவ்வுலகம். (8) அழுக்குகள் மனத்தில் இருக்கவும், தவத்தால் மாட்சிமை உடையவர் போல் நீரில் மூழ்கிக் காட்டி, தவம் ஆகிய போர்வையுள் மறைந்துவாழும் போலிமக்கள் உலகத்தில் பலர் உள்ளனர். (9) அம்பு நேரிதாயினும் கொடியது; யாழின் கோடு வளைந்ததாயினும் சிறந்தது; அது போலவே, தவம் செய்பவர்களையும் வடிவத்தால் அன்றிச் செயல்களாலேயே,நல்லவர் தீயவர் என்று உணர்ந்துகொள்க. (10) உயர்ந்தோர் பழித்தற்குரிய குற்றங்களை நீக்கிக் கொண்டு விட்டால், தவம் செய்வோர்க்குத் தலையை மழித்தலும், சடையாக வளர்த்தலும் ஆகிய வேடங்கள் வேண்டுவதில்லை. (தொடரும்).

—ஆசிரியர்.

---



சென்னை ஆனைக்கவுனி முருகப்பன் தெருவில் உள்ள ஸ்ரீ வைகுண்டப் பெருமாள், ஸ்ரீ தருமராச சுவாமி தேவத்தானம், ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமிக்கு நிகழ்ந்த அஷ்டபந்தன-நவகலசத் தாபன - சம்புரோட்சண விழாவிற் கலந்துகொண்ட பெருமக்கள்.

*(18—5—69)*

# அபிராமி அந்தாதி

(மூலமும் உரையும்)

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பாற்சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்,நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்,ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

(பொழிப்புரை) உலகமக்களே! நீங்கள் யாரேனும் ஒருவரிடத்தே போய், உங்களுடைய வறுமையைச் சொல்லி, அவர்களால் இழிவுபடுத்தப்பட்டு நிற்காத நிலைமை வேண்டும் என்று மனத்தில் எண்ணுவீர்களே யாயின், நாடோறும் நிலைபெற்ற தவத்தினைப் பயிலாமையிலேயே பயின்று தேர்ந்த கீழ்மக்களிடத்தில், எக்காலத்திலும் செல்லாதபடி, என்னை நன்னிலையில் வைத்தருளிய திரிபுரசுந்தரி ஆகிய அபிராமி அம்மையின், திருவடிகளை நீங்கள் புகலாக அடையுங்கள்.

(குறிப்புரை) அம்பிகை தமக்குச் செய்த அருளின் திறம் கூறுவார் "கயவர்தம்பால் ஒரு காலத்திலும் செல்லாமை வைத்த திரிபுரை" என்று சிறப்பித்தார். கீழ்மக்களின் இயல்பை "நீடுதவம் கல்லாமை கற்ற கயவர்" என்பதனுற் புலப்படுத்தினுர். 'கல்லாமை கற்ற'என்பது முரண்தொடை. 'நித்தம் சேர்மின்களே' எனவும் இயைக்கலாம். 'நித்தம் கற்ற' என இயைப்பினும் ஆம்.

வறுமையுற்றுர், தக்கார் தகவிலார் என்பன நோக்காமல், எவரிடத்தும் தாமே செல்வர்; அவர் கேளாமல் இருப்பவும், தாமே தம் குறைகளையெல்லாம் கூறுவர்; அவர் உதவி எதுவும் புரியாமல் இழிவுபடுத்தி, இங்கு நில்லாமற் போ என்று வெருட்டினும், அங்கேயே அயர்ந்து நின்று துன்புறுவர்; ஆயினும் இரத்தலை வெருமல் மனத்தால் பின்னும் அதனையே கருதி நிற்பர். இவ்வியல்பெல்லாம் தோன்ற "இல்லாமை சொல்லி ஒருவர் தம்பாற் சென்று இழிவுபட்டு நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல்" என்றுர். சேர்தல்-இடைவிடாது நினைத்தல். அம்பிகையை வழிபட்டால் வறுமை தீரும் என்பது இப்பாடலின் கருத்து. (54)

மின்ஆ யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்றது
அன்னுள்; அகம்மகிழ் ஆனந்தவல்லி; அருமறைக்கு
முன்னுல் நடுஎங்கு மாய்,முடி வாய முதல்விதன்னை
உன்னுது ஒழியினும், உன்னினும் வேண்டுவது ஒன்றில்லையே

(பொழிப்புரை) பல ஆயிரம் மின்னல்கள், ஒரு திருமேனியை எடுத்து விளங்குவது போன்ற, பேரொளி வடிவத்தை யுடையவள்; அடியவர்கள் தமது நெஞ்சத்திற் பதித்து மகிழ்ச்சி கொள்ளுகின்ற, பேரின்ப மயமான கொடி போன்றவள்; அரிய வேதங்களுக்கு முதலாகவும் நடுவாகவும் முடிவாகவும் எங்குமாகவும் திகழ்கின்றவள்; இத்தகைய முதல்வியாகிய அபிராமி அம்மையை, நாம் நினையாதொழிந்தாலும் நினைத்தாலும், நம்மால் அவளுக்கு ஆக வேண்டியது யாதொன்றும் இல்லை.

(குறிப்புரை) அம்பிகை பேரொளி வடிவினள் ஆதலின், "மின் ஆயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது அன்னுள்" என்றுர். அடியார்களின் நெஞ்சிற் பதிந்து படர்ந்து ஓங்கி, அவர்களுக்கு மேன்மேல் மகிழ்ச்சியை விளைவித்து நின்று, அவ்வாற்ருல் தானும் மனம்மகிழ்

பவள் ஆதலின், "அகமகிழ் ஆனந்த வல்லி" என அம்பிகை புகழப் பெற்ருள். வேதங்களின் தொடக்கம் நடு இறுதி என்னும் எல்லா இடங்களிலும், தனது சிறப்பே பேசப்பெறும் நிலையில் முதன்மையுற்று விளங்குவதால், அம்பிகையை "அருமறைக்கு முன்ஞல் நடு எங்குமாய் முடிவாய முதல்வி" எனப் போற்றினர். நினைத்து வணங்குதலாற் பயன் நமக்கே யன்றி, நம்மால் அவளுக்கு விளையும் பயனே பெருமையோ எதுவும் இல்லை என்பார், "முதல்வி, தன்னை உன்னினும் உன்னுது ஒழியினும் வேண்டுவது ஒன்றிலையே" என்ருர். "அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்; யாதுநீ பெற்றது ஒன்று என்பால்?" எனவரும் திருவாசகப் பகுதியும் இங்குக் கருதத்தகும். (55)

ஒன்ருய் அரும்பிப் பலவாய் விரிந்து, இவ் வுலகெங்குமாய்
நின்ருள்; அனைத்தையும் நீங்கிநிற் பாள்; என்றன் நெஞ்சினுள்ளே
பொன்ருது நின்று புரிகின்ற வா,இப் பொருள் அறிவார்
அன்று ஆல் இலையில் துயின்றபெம் மானும்,என் ஐயனுமே

(பொழிப்புரை) ஒரு பொருள் ஆகிய பராசத்தியாய்த் தோன்றிப், பலபல சத்திகளாக விரிவடைந்து, இந்த உலகம் எங்கிலும் பரவி நின்றவளும், உலகப் பொருள்கள் எல்லாவற்றையும் விட்டுப் பிரிந்து நிற்பவளும் ஆகிய அபிராமியம்மை, என்னுடைய மனத்தின் உள்ளே நீங்காமல் நிலைபெற்று அருள்புரிந்து வருகின்றதன்மை, எத்துணை வியப்பைத் தருவது! இந்த நுட்பத்தினை, முற்காலத்தில் ஆலிலையில் துயில் கொண்ட பெருமாளுகிய திருமாலும், என் தந்தையாகிய சிவபெருமானுமே, அறியவல்லவராவர்.

(குறிப்புரை) எல்லாவற்றிலும் கலந்த நிலை (Immanence), எல்லாவற்றையும் கடந்தநிலை (Transcendence) என்பன, இறைமைக்குரிய இருவகைப் பண்புகள். அவ்விரண்டனுள், கலந்த நிலையினை "ஒன்ருய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய் நின்ருள்" எனவும்; கடந்த நிலையினை "அனைத்தையும் நீங்கி நிற்பாள்" எனவும் குறிப்பிட்டார். உயிர்களின்பால் உடலின் உயிர்போல் ஒன்ருயும், கண்ணின் அருக்கன்போல் வேருயும், கண்ணொளியின் ஆன்மபோதம் போல் உடனுயும் இயைந்து நிற்றல், இறைத்தன்மைக்கு இயல்பு என நூல்கள் நுவலும். அவ்வியல்பும் "இவ்வுலகெங்குமாய் நின்ருள்; அனைத்தையும் நீங்கி நிற்பாள்; என் நெஞ்சின் உள்ளே பொன்ருது நின்று புரிகின்ருள்" என்பதனுல், முறையே புலப்படுத்தப்பெற்றிருத்தல் கண்டு மகிழற்பாலது.

'யாவையுமாம் ஏகம்' என்றபடி பராசக்தி ஒருத்தியே, ஆதிசத்தி இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி எனப் பலவகைச் சத்திகளாகவும் தொழில் புரிதலின் "ஒன்ருய் அரும்பிப் பலவாய்விரிந்து" என்ருர். "அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை யெல்லாம்" எனச் சிவஞான சித்தியார் கூறுமாறுபோல, இவ்வுலகம் எங்கும் காணப்படும் பொருள்களெல்லாம் அம்மையின் அருள்விளையாட்டால் தோன்றி நிற்பனவே யாதலின், "இவ்வுலகெங்குமாய் நின்ருள்" என்ருர். அம்பிகையின் வியத்தகும் இத்தகைய அருட்செயல்களின் நுட்பத்தினை நம்போலியர் உணரப் பெறுதல் அரிது என்பது உணர்த்த "இப்பொருள் அறிவார் அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும், என் ஐயனுமே" என்றருளிச் செய்தார். திருமாலும் சிவபிரானும் முறையே தமையனும் கணவனுமாம் நிலையில், அம்பிகையோடு நெருங்கிப் பழகியுணரும் இயல்பினராதல் கருதி இங்ஙனம் குறிப்பிட்டார் போலும்! (56)

ஐயன் அளந்த படிஇரு நாழிகொண்டு, அண்டமெல்லாம்
உய்ய அறஞ் செய்யும் உன்னையும் போற்றி, ஒருவர்தம்பாற்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யும்கொண்டு சென்று, பொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்! இதுவோ உன்றன் மெய்யருளே!

(பொழிப்புரை) அம்மையே! சிவபெருமான் அளந்து கொடுத்தபடி, இருநாழி நெல்லைக் கொண்டு, உலகங்கள் எல்லாம் உய்யும் வண்ணம் முப்பத்திரண்டு அறங்களையும் செய்கின்ற, பெருமாட்சிமை யுடைய உன்னையும் புகழ்ந்து துதித்து, ஒரு சிறப்பும் அற்ற இழிந்த மனிதர்களிடத்தில் செம்மையும் பசுமையும் அமைந்த தமிழினுற் பாமாலைகளையும் பாடிப் புனைந்து கொண்டுபோய், பொய்யையும் மெய்யையும் சொல்லி இரந்துநிற்குமாறு, என்னை இழிநிலையில் வைத்துவிட்டனையே! இதுதான் நின்னுடைய உண்மையான அருளின் இயல்போ

(குறிப்புரை) சிவபிரான் அளித்த இருநாழி நெல்லைக் கொண்டு, காஞ்சிபுரத்திற் காமாட்சி அம்மை முப்பத்திரண்டு அறங்களையும் முறையே குறைவற வளர்த்தருளினள் என்பது புராணவரலாறு. அதனைக் குறிப்பிட்டு இங்கு அம்பிகையின் சிறப்பினைப் புகழ்ந்தார். முப்பத்திரண்டு அறங்களையும் முறையே புரிந்தருளிய நீ, 'அற்றாரைத் தாங்குதல்' ஆகிய அறமும் அவற்றுள் ஒன்றுதல் கருதி, எளியேனைக் காக்க இன்னும் முற்படாமை என்? என்பது கருத்து. 'ஒருவர்' என்றது இழிந்தவர் என்னும் குறிப்பில் வந்தது. நடையின் சிறப்பும், பொருளின் அழகும் குறித்துச் ''செய்ய பசுந்தமிழ்'' என்ற விதந்து ஓதினார். கவிஞர்கள் தாம்படும் வறுமையின் கொடுமைகளையும், இனிப் பரிசில் பெறுவதால் எய்த இருக்கும் வளங்களையும், தமது பாடல்களிற் பாடுதல் இயல்பாதலின் ''செய்ய பசுந்தமிழ்'' என்றார் எனினும் ஒக்கும்.

பரிசில் பெறத் தமது கல்வியே அமையுமாயினும், கவிதை புனைந்தும் போக வேண்டியிருக்கும் கொடுமையினைப் ''பாமாலையும் கொண்டு சென்று'' என்பதனாற் சுட்டினார். பெரியோரை அவர் இருக்குமிடத்திற் சென்று காணுதலும், காணச் செல்லுங்கால் அவர்க்குக் கொடுத்து மகிழ்விக்கத் தக்கதொரு பொருளை எடுத்துக்கொண்டு போதலுமே முறையாக இருப்ப, இழிந்தவரைக் காணற்குத் தாம் செல்லவும், அவரை மகிழ்விக்கத் தாம் பாமாலை புனையவும் நேர்தலை, அருவருத்துக் கூறியபடியுமாம். ஒருவரைப் பாடுவோர் அவர்பால் உள்ள குணங்களுடன், இல்லாத குணங்களையும் சேர்த்துப் புகழ்ந்துரைத்தல் வழக்கமாதலின் ''பொய்யும் மெய்யும் இயம்ப வைத்தாய்'' என்றார்.

புகழ்ப் பாடல்களில் பொய்யே மெய்யினும் பெரிதும் மிகுந்திருக்குமாதலின், பொய்யை முதற்கண் அமைத்தார். புகழுரைப் பகுதிகள் பொய்யும், வறுமைத் துன்பம் கூறும் பகுதிகள் மெய்யும் ஆகும் எனக் கொள்ளலும் பொருந்தும். தக்கார் அல்லவரைப் புகழ்தல் தமக்கு உடன்பாடு அன்மையின் 'இயம்பினேன்' என்னாது 'இயம்ப வைத்தாய்' என்றார். தக்கார் அல்லாரைப் புகழ்தல் பெருங்குற்றம்; அஃது என்னைச் சாராது; நின்னையே சாரும் என முறையிட்டபடி. ''சார்ந்தாரைக் காத்தல்தலைவர் கடன்'' ''தொழுவாரவர் துயராயின தீர்த்தல் உன தொழில்'' ''என்போலியர் உம்மை இனித் தெளியார் அடியார் படுவது இதுவே யாகில்'' எனச் சான்றோர் பலரும் கூறுவராதலின், ''இதுவோ உன்றன் மெய்யருளே'' என வினவிப் பணிந்தார். (57)

அருணம் புயத்தும், என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணம் புயமுலைத் தையல்நல் லாள், தகை சேர்நயனக்
கருணம் புயமும், வதனம் புயமும், கராம்புயமும்
சரணம் புயமும்அல் லாற்கண் டிலேன்ஒரு தஞ்சமுமே!

(பொழிப்புரை) செந்தாமரை மலரினும், என்னுடைய உள்ளத் தாமரையினும் விரும்பி வீற்றிருக்கின்ற, தாமரை முகிழ் போன்ற முலைகளையுடைய, பெண்ணின் நல்லாள் ஆகிய அபிராமியம்மையின் அழகு பொருந்திய அருட்கண்கள் ஆகிய தாமரையும், திருமுகம் ஆகிய தாமரையும், திருக்கைகளாகிய தாமரையும், திருவடிகளாகிய தாமரையும் தவிர, வேறொரு பற்றுக்கோட்டையும் யான் காணவில்லை.

(குறிப்புரை) அம்பிகை செந்தாமரை மலரிலும், அடியார்களின் உள்ளத்திலும் எழுந்தருளி இருப்பளாதலின், ''அருணம் புயத்தும் என் சித்தாம்புயத்தும் அமர்ந்திருக்கும்'' என்றார். மிக உயர்ந்த இடத்தும், மிக இழிந்த இடத்தும், எழுந்தருளும் அருளியல்பைப் புகழ்ந்தபடி. 'சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்பலமாகிய நல்ல இடத்தும், என் நெஞ்சம் ஆகிய தீய இடத்தும் ஒப்பத் தங்குபவன்' என்று மணிவாசகர் புகழ்ந்திருத்தல் (கோவை; 20) காண்க. அம்புயம்-தாமரை, நீரிற் பிறப்பது. அருணம்-சிவப்பு. சித்தம்-மனம். தருணம்-இளமை. நயனம்-கண். வதனம்-முகம். கரம்-கை. சரணம்-திருவடி. அருண + அம்புயம், சித்த + அம்புயம், தருண + அம்புயம், கருண + அம்புயம், வதன + அம்புயம், கர + அம்புயம், சரண + அம்புயம் என்பன, புணர்ந்து தீர்க்க சந்தியாக வந்தன. அம்பிகையின் உறுப்பனைத்தும் தாமரை மலர் போல விளங்குதலைக் கண்டு புகழ்ந்தபடி. அம்பிகையின் திருவடிகளைத் தவிரப் புகலிடம் பிறிதெதுவும் இல்லை என்பதனை ''அல்லாற் கண்டிலேன்'' என இரண்டு எதிர்மறையாற் கூறி வலியுறுத்தினர், ''வாராமை இல்லை'' என்றாற்போல. (58)

தஞ்சம் பிறிதில்லை ஈதல்லது என்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்; ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்குஅல ராகநின் றாய்; அறி யார்எனினும்
பஞ்சுஅஞ்சும் மெல்லடி யார்,அடி யார்பெற்ற பாலரையே"

(பொழிப்புரை) ஒப்பற்ற நீண்ட வில்லும், ஐந்து அம்புகளும், முறையே கரும்பாகவும், மலராகவும் கொண்டு விளங்கும் அபிராமி அம்மையே! இதனைத் தவிர வேறொரு பற்றுக்கோடு இல்லை என்று தெளிந்து. உன்னை வழிபடும் தவவழியிலேயே, என்னுடைய மனமானது பழகும்படி செய்ய, யான் நினைக்கின்றேன் இல்லை. (அதற்காக, நீ என்னைப் புறக்கணித்து ஒதுக்காமல், அருளோடு அணைத்துக் காத்திடுதல் வேண்டும்; ஏனென்றால்) பஞ்சையும் கூட மிதிக்க அஞ்சுகின்ற மென்மையான கால்களையுடைய தாய்மார்கள், தாங்கள் பெற்ற பிள்ளைகள் அறிவில்லாதவர்களாக இருந்தாலும், அவர்களை அடிக்கமாட்டார்கள்.

(குறிப்புரை) தஞ்சம் இதுவே என்பதனை "பிறிதில்லை ஈது அல்லது" என ஈரெதிர்மறையால் வலியுறுத்தி அறிவுறுத்தினர். "தவநெறிக்கே" என்பதில் ஏகாரம் பிரிநிலை. இஃதொன்றும் ஒழிய, அவநெறிகள் ஏனையவற்றுளெல்லாம் நெஞ்சம் பயில்கின்றது என்பது குறிப்பு. ஒப்பற்ற தன்மையும், தோல்வியே அறியாமையும் பற்றி "ஒற்றை நீள்சிலை" எனப்புகழ்ந்தார். இக்கு—கரும்பு. அலர்—மலர்; அம்பிகை கரும்பு வில்லும், ஐந்து மலர் அம்புகளும் உடைய வளாதலின், "சிலையும் அஞ்சு அம்பும், இக்கு அலராக நின்றாய்" என்றார். 'ஐந்து' என்பது 'அஞ்சு' என வந்தது; போலி. "அறியார் எனினும் அடியார் பெற்ற பாலரையே" என உலகியல்பு கூறியது, வேற்றுப்பொருள்வைப்பு என்னும் அணி. (59)

பாலினும் சொல்இனி யாய்!பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்,கொன்றை வார்சடையின்
மேலினும், கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் றோ!அடி யேன்முடை நாய்த்தலையே!

(பொழிப்புரை) பாலைக்காட்டிலும் இனிய சொல்லையுடைய அபிராமி அம்மையே! குளிர்ச்சியை உடைய தாமரை மலர் போன்ற நின் திருவடிகளை வைத்தருள, திருமாலும் மற்றுமுள்ள தேவர்களும் வணங்கும்படி விளங்குகின்ற சிவபெருமானது கொன்றைமாலையை அணிந்த நீண்ட சடையின் மேலிடத்தைக் காட்டிலும், கீழேநின்று பாடுகின்ற வேதங்களாகிய சிறந்த ஒப்பற்ற பீடங்கள், நான்கைக் காட்டிலும், அடியேனுடைய நாற்றமுடைய நாய்த்தலையைப் போன்ற தலையானது, நினக்கு மிகவும் நல்லதாக வுள்ளதோ?

(குறிப்புரை) பால் உண்பவர்க்கு இனியசுவை பயந்து உடலுக்கு நலம் விளைவிப்பது போல, அருளிச் சொற்கள் கேட்பவர்க்கு இனிமைபயந்து உயிர்க்கு நலம் விளைவித்தலின், அம்பிகையைப் 'பாலினும் சொல் இனியாய்' எனப் புகழ்ந்தார். அவளது திருவடிகளின் தன்மையும் பெருமையும்மென்மையும் அழகும் கருதிப்'பனிமாமலர்ப் பாதம்'என்றுதுதித்தார்.அம்பிகை தமது தலையில் திருவடி சூட்டியருளிய திறத்தினை, இப்பாடலால் ஆசிரியர் புகழ்ந்து போற்றி நயந்து குறிப்பிடுகின்றார். சிவபெருமானின் சடைமுடியின் மீதும், நான்கு வேதங்களாகிய பீடங்கள் மீதும் வைக்கப்பெறும்அம்பிகையின் திருவடிகள், தம்முடைய தலையின்மீதும் வைத்தருளப் பெற்றமையினை வியந்து 'சாலநன்றோ அடியேன் முடை நாய்த் தலையே'என்றுவியந்து புகழ்ந்து துதிக்கின்றார். சிவபெருமான்'மால் இனும் தேவர் வணங்கநின்றோன்' என விதந்து ஓதப்பெற்றார். அம்பிகையின் திருவடிகளைத் தாங்கும் இயல்புபற்றி வேதங்களைப் பீடங்கள் எனச் சிறப்பித்தார். மெய்ம்மை ஈண்டு சிறப்பைக் குறித்தது. முடை-நாற்றம். தமது பணிவுடைமை தோன்றத் தமது தலையை 'அடியேன் முடைநாய்த்தலை' என்று குறிப்பிட்டுக் கொண்டார். 'சிவபிரானின் சடையின் மீதும், வேதங்களாகிய பீடங்கள் மீதும் வைக்கப்பெறுகின்ற நின் திருவடிகளை, இழிந்த என் தலையின்மீதும் வைத்தருளினையே' என அம்பிகையின் அருட்டிறத்தைப் புகழ்ந்தபடி. "நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார் நல்லூர் எம் பெருமானர் நல்லவாறே" என்பனபோன்ற திருப்பாடல்கள், இங்கு நினைக்கத்தக்கவை. (60)

—ஆசிரியர்.

# திருஆரூரான் திருமண மண்டபத் திறப்புரை

தமிழக முதலமைச்சர்

மாண்புமிகு கலைஞர் திரு மு. கருணாநிதி அவர்கள்

[திருவாரூர்த் தியாகராச சுவாமி கோயிலில், அபிடேகக் கட்டளை நிதியில் இருந்து நிறுவப் பெற்ற திருஆரூரான் திருமண மண்டபத் திறப்பு விழா, 19—6—69 வியாழக் கிழமை மாலையில், நமது தமிழ்நாடு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு கே. வி. சுப்பையா, B.A. அவர்கள் தலைமையிற் சிறப்புற நிகழ்ந்தது. அதுபோது நமது தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், திருமண மண்டபத்தைத் திறந்து வைத்து ஆற்றிய சிறப்புரையின் சுருக்கம் இங்குத் தரப்பெறுகின்றது.

—ஆசிரியர்.]

**திருமண மண்டபம் :** இந்தத் திருமண மண்டபம், ஏறத்தாழ ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, அருமையான கட்டிடமாகும். இவ்வளவு அருமைபெருமை உள்ள இந்தக் கட்டிடத்தைத் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்காக 125/- ரூபாய் என்ற அளவில் அவர்கள் தருவதாகத் திட்டமிட்டிருக்கிறார்கள். செலவழிக்கப்பட்டிருக்கின்ற தொகையையும், இங்கு இருக்கின்ற வசதிகளையும், வாங்கப்படுகின்ற வாடகையையும் பார்த்தால், இது மிக மிக மலிவான வாடகைதான்.

**மகிழ்ச்சிக்குரிய செயல் :** இப்படி 125 ரூபாய் வாடகையில் சிக்கனமான முறையில் திருமணம் இங்கு நடைபெறும் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இதனை அடுத்து, ஆதீனங்கள் அபிஷேகக் கட்டளைகள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களிலே, தங்களுடைய திசையைத் திருப்பியிருப்பது மிகப்பெரிதும் மகிழ்ச்சிக்குரிய காரணமாகும்.

**பணிகளில் ஆசை !** திரு. வி. எஸ். தியாகராசன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், திருப்பதி தேவத்தானத்து வருமானத்தைக் கொண்டு, அங்கே நல்ல மருத்துவமனைகளையும், கல்லூரிகளையும், பள்ளிக்கூடங்களையும், பொதுச்சேவைக்கான நிறுவனங்களையும் அமைக்கின்றார்கள்.

அதேபோல், தமிழ் நாட்டிலே இருக்கின்ற வருமானம் மிக்க ஆலயங்கள், தங்களுடைய ஆதரவைப் பொதுமக்களுக்கு எல்லா விதத்திலும் காட்டுகிறவிதத்தில், இதுபோன்ற பணிகளிலே ஈடுபடவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. நான் சார்ந்த இயக்கத்தினுடைய ஆசை.

**கலந்து கொள்ளக் காரணம் :** பலர் கருதலாம். திருவாரூரான் திருமண மண்டபம், தியாகராசசுவாமி தேவத்தானத்திற்குத் தொடர்புடைய மண்டபம். இதைக் கருணாநிதி திறப்பாரா என்று !

நான் தமிழ்நாட்டை ஆளுகின்ற பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தினால், இதிலே சிக்கவைக்கப்பட்டேன் என்பது அல்ல, அதற்குரிய காரணம். நான் விரும்பும் வழியில் ஆலயத்திற்கான நோக்கங்கள், இன்றைய தினம் திரும்பி இருக்கின்றன என்பதுதான், நான் இதிலே கலந்துகொள்வதற்கான காரணமாகும்.

ஆதீனத்தின் சார்பிலே அளிக்கப்பட்ட வரவேற்பை, என்னுடைய பழைய தமிழாசிரியர் தண்டபாணி தேசிகர், அவருக்கே உரிய அன்பான குரலெடுத்து இங்கே படித்தளித்தார்கள். வரவேற்பில் கடைசியாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "ஆதீனத்திற்குச் சொந்தமான ஆலயங்களில் காலத்திற்கும், மக்கள் தேவைகளுக்கும் ஏற்றவாறு, அறநிலைய ஆட்சித்துறையின் ஆலோசனைகளோடு, அறப்பணியும் பொதுப்பணியும் செய்யப்படும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைத் தவிர, நான் இதில் கலந்துகொள்வதற்கு வேறுஎன்ன காரணம் இருக்குமென்று கருதுகிறீர்கள் ? அந்தக் காரணத்தினால் தான், இந்த விழாவிலே மிகுந்த மகிழ்ச்சியோடு கலந்துகொள்கிறேன்.

**கலப்புத் திருமணம் :** இந்தத் திருமண மண்டபத்தினுடைய முகப்பில், சுந்தரர் பரவை நாச்சியாரைத் திருமணம் புரிந்துகொள்ளும் அருமையான காட்சி, சிற்ப வடிவத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது. பரவை நாச்சியார், சுந்தரர் திருமணம், கலப்புத்திருமணமாகும். சென்னைக்கு அருகில் உள்ள ஞாயிறு என்கிற கிராமம், நமது அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் பிறந்த ஊர்! அந்த ஞாயிறு என்கின்ற கிராமத்தில் தோன்றிய சங்கிலி நாச்சியார் என்ற பெண்ணைச் சுந்தரர் இரண்டாம் திருமணம் செய்துகொண்டார். முதல் திருமணம் கலப்புத் திருமணம். சுந்தரர் கொஞ்சம் முந்திக்கொண்டார். இப்பொழுது அந்தத் திருமணத்தைச் செய்து கொண்டிருப்பாரேயானால், தமிழக அரசினுடைய தங்கப் பதக்கத்தை அவர் பெற்றிருப்பார்.

**சுந்தரரும் செந்தமிழும் :** சுந்தரமூர்த்தி, தமிழுக்கும், தமிழ்இனிமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கினவர். அவருடைய பாடல்கள் தித்திக்கும் தேன்பாகு, தென்றல், தென்பாங்கு என்றெல்லாம், பாராட்டத்தக்க அளவில் அமைந்துள்ளன. அதிலே தெய்வீகக் கருத்துக்கள் இருக்கின்றன. நாம் அதை இங்கு வடித்தெடுத்துப் பேசுவது, தமிழின் சுவையை! அந்தச் சுவை நிறைந்த பாடல்களைத் தமிழகத்திற்குத் தந்த சுந்தரருடைய பெயரால், அவருடைய சிலை அமைந்த இப்பெருமை மிக்க திருமண மண்டபம், ஆரூரான் திருமண மண்டபம் என்று பொருத்தமுறப் பெயர் அமைக்கப்பட்டிருக்கிறது.

**பெயர்ப் பொருத்தம் :** திருவாரூரிலேயே ஆரூரான் திருமண மண்டபம் என்கின்ற பெயர் வைக்கத்தான் வேண்டுமா? என்றால், நீங்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்றால், பம்பாய்க்குச் சென்றால், அங்கே 'மெட்ராஸ் கபே' என்று இருக்கும். டெல்லிக்குச் சென்றால் 'திருச்சி ஓட்டல்' என்றிருக்கும். ஆனால் சென்னையிலேயே 'சென்னை கபே' என்று போட்டுக்கொள்வதில்லை.

ஆனால் ஆரூரிலேயே ஆரூரான் கல்யாண மண்டபம் என்று நாம் போட்டுக்கொள்வதற்குக் காரணம், பழைய இதிகாச காலத்தில், தமிழில் நல்ல இன்பம் சேரத்தக்க அளவுக்கு இனிய பாடல்களைப் பாடித்தந்த ஒருவரது பெயரால், இந்த மண்டபம் அமையவேண்டும் என்கின்ற காரணத்தாலேதான், இதற்கு அப்பெயரை இட்டிருக்கின்றார்கள்.

**நல்லன எல்லாம் நடக்கலாம் :** ஆனால் இந்த மண்டபத்தில் திருமணங்கள் மாத்திரம் தான் நடைபெற வேண்டும் என்பதில்லை. திருமண மண்டபம் என்று இருப்பதால் திருமணத்தைத் தவிர வேறேதும் நடைபெறக்கூடாது என்றில்லை. எல்லாவிதமான நல்ல நிகழ்ச்சிகளையும், நீங்கள் நடத்தலாம். நான் ஆணையரிடத்திலே இதுபற்றிப் பேசினேன். இதில் இசை நிகழ்ச்சி, கலை நிகழ்ச்சி, இவைகளெல்லாம் நடத்தலாம். கதா காலட்சேபம் நடத்தலாம். ஆக எல்லாவற்றிற்கும் ஏற்றவாறு, இந்தத் திருமண மண்டபம் அமைந்திருக்கின்றது.

இவ்வளவு அழகாக இந்தத் திருமண மண்டபம் எழும் என்று நான் எண்ணவில்லை. நானும் அன்பில் தருமலிங்கமும், மன்னை நாராயணசாமியும், ஒரு நாள் திருவாரூர் வந்தபோது, காட்டூர்

இராமையா, இந்த இடத்திலே என்னுடைய காரை நிறுத்தி, இங்குதான் திருமண மண்டபம் என்றார். சுற்றிச்சுற்றிப்பார்த்தேன். ஒன்றும் தெரியவில்லே. அப்போது தான் அடித்தளம் அமைக்கப்பட்டிருந்தது.

ஆனல் அன்று பார்த்த இந்த இடம், இன்று இவ்வளவு அழகாகவும் கம்பீரமாகவும் கண் கவரத்தக்க அளவிற்கு இங்கே கட்டி முடிக்கப்பெறும் என்று, நான் கருதவில்லே. ஆனல் மிகத்திறம்பட இந்த வேலேயை முடித்திருக்கிறார்கள். திருவாரூரிலேயே உள்ளவர்களுக்கு மாத்திரமல்லாமல், இந்தப் பகுதியிலே இருக்கின்ற அனேவருக்கும் பயன் படத்தக்க வகையில், இந்தத் திருமண மண்டபம் நிச்சயமாகச் சிறந்து விளங்கும் என்று நான் நம்புகிறேன்.

சுந்தரரே கலப்புத் திருமணம் செய்து கொண்ட காரணத்தால், திருமண மண்டபத்தைக் கலப்புத் திருமணங்களுக்கும் அளிக்கவேண்டும். அதிலே சாதி மத வித்தியாசங்கள் பார்க்கலாகாது என்று, நான் அபிடேகக் கட்டளேயாருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மக்கள் குரலே மகேசன் குரல்:** அபிடேகக் கட்டளே, அன்னதானக் கட்டளே, இராசாங்கக் கட்டளே, உள்துறைக் கட்டளே போன்ற பல கட்டளேகள், திருவாரூர்த் தியாகராச சுவாமி தேவத் தானத்திற்கு மிக நல்ல முறையிலே, நெடுங்காலமாகத் தெய்வத்திருத் தொண்டு புரிந்துவந்திருக்கின்றன; தெய்வத் திருத்தொண்டு என்பது தெய்வத்திற்குச் செய்கின்ற தொண்டு மாத்திரமல்ல; தெய்வம் யார்? அண்ணு வெகு அழகாகச் சொன்னர். 'மக்கள குரலே மகேசன் குரல்' என்று. 'ஏழை எளியவர்களின் புன்சிரிப்பிலே தான் இறைவன் இருக்கிறன்' என்று கவி தாகூர் சொன்னர்.

ஆகவே இறைவனேக்காண, மகேசனேக் காண, ஏழைகளே நாடவேண்டும்; மக்களே நாடவேண்டும். ஆகவே மக்களுக்குச் செய்கின்ற தொண்டு மகேசனுக்குச் செய்கின்ற தொண்டாகும். ஏழைகளிடையே புன்னகையை வரவழைத்தால், இறைவன் நம்மிடையே வரம் அருள வந்தார் என்று அர்த்தம். இந்த அடிப்படையிலேதான் தெய்வத்தொண்டினே நாம் அணுகவேண்டும். இப்படிப்பட்ட தொண்டினேத் தேவாலயங்கள், இனிமேல் தொடர்ந்து செய்திட வேண்டும்; அப்படிச் செய்யச் செய்ய மக்களுக்கும் தேவாலயங்களுக்குமுள்ள தொடர்பு, மேலும் மேலும் வலுப்பெறும்.

**பண்டைக் கோயில்களின் பண்பு:** சந்திர மண்டலத்தைக் கண்டு பிடித்து அங்கேயுள்ள மண்ணே எடுத்து, முதலிலே அங்கே யார் போய்க் குடியேறுவதென்று, அமெரிக்கா நாட்டுக்காரனும், ரஷ்யா நாட்டுக்காரனும் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்க நாட்டுக்காரன் முயன்று சந்திரமண்டலத்தைத் தொட்டு விட்டால், அதிலே முதலில் அவன் கட்டுகின்ற கட்டிடம் மருத்துவமனேயாக இருக்கும் அல்லது ஒரு பள்ளிககூடமாக இருக்தும்.

ரஷ்ய நாட்டுக்காரன் முதன் முதலிலே சந்திரமண்டலத்தில் இடம்பெற்று, அங்கே கட்டிடம் கட்ட ஆரம்பித்தால், தொழிற்சாலே கட்டுவான். தப்பித்தவறி நாம் போனுல், முதலிலே நாம் கட்டுகிற கட்டிடம் ஆலயமாகத்தான் இருக்கும்.

நான் ஆலயத்தைக் கேலி செய்வதற்காக இதைச் சொல்லவில்லே. அப்படி கட்டுகின்ற ஆலயமும், பழைய ஆலயங்களாக இருக்க வேண்டும்! பழைய ஆலயங்கள் மருத்துவமனே முதலிய வசதியுள்ள ஆலயங்களாக இருந்தன. பழைய ஆலயங்கள் கல்விக் கூடங்களாக இருந்தன. பழைய ஆலயங்கள் விளேயாட்டுத் திடல்களாக இருந்தன. பழைய ஆலயங்கள் ஒவ்வொரு ஊரிலும், ஊராட்சி மன்றத் தேர்தல்களே, மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கின்ற, குடவோலே எடுக்கின்ற கூடங்களாக இருந்தன. அப்படிப்பட்ட பழைய ஆலயத்தைச் சந்திர மண்டலத்திலும் அமைப்போம் என்று சொன்னேன்.

**தஞ்சைப் பெரியகோவில் :** இத்தகைய நல்ல நோக்கத்தோடு, தேவாலயங்கள், வருமானம் மிக்க கோவில்கள் பாடுபட வேண்டும். நான் வருமானம் மிக்க கோயில்கள் என்று சொல்வதற்குக் காரணம், சில பெரிய கோவில்கள் போதியவருமானம் இல்லாமலும் இருக்கின்றன. வாழ்ந்து கெட்ட சீமான் ஒருவன் இறந்த பிறகு, தான் இருந்தபோது பிள்ளைக்கு என்ன வைத்துவிட்டுப் போனான் என்று கேட்டால், நாலு கடன் பத்திரத்தை வைத்து விட்டுப் போனான் என்பதைப் போலச் சில கோவில்கள் இருக்கின்றன. தஞ்சாவூர் இராசராசேசுவரம் என்னும் பிரகதீசுவரர் ஆலயம், அங்கிலேயில்தான் உள்ளது. அஃது இராசராசசோழன், இராசேந்திர சோழன் இவர்கள் எல்லாம் ஆண்ட காலத்தில் மிக்க பெருமையும் வீறும்பெற்று இருந்தது. காரணம் என்ன? அவர்களெல்லாம் என்ன எண்ணினார்கள். நம்முடைய சோழர் பரம்பரைதானே தொடர்ந்து ஆளப்போகிறது; ஆகவே ஆலயத்திற்கென்று தனி மானியங்கள் ஒதுக்கத்தேவையில்லை, எழுதிவைக்கத் தேவையில்லை. நாமே நேரடியாகக் கவனித்துக்கொள்ளலாம் என்று, அவர்கள் அந்த ஆலயங்களுக்கு மானியங்கள் எழுதி வைக்கத் தவறினார்கள்.

சோழ சாம்ராச்சியம் அத்தமனமான பிறகு, இன்றைய தினம் மிகப் பிரம்மாண்டமான அளவுக்குக் கட்டப்பட்டு, விண் முட்டுகிற அளவுக்கு உயர்ந்து நிற்கிற கோபுரததை உடையதும், ஒரே கல்லால் ஆன விமானம் என்று ஆச்சர்யத்தால் அனைவருடைய விழிகளையும் அகலவ்ரியச் செய்கின்றதுமான அந்த ஆலயம், இன்று புல் பூண்டு நிறைந்த காடாக, மான்யம் எதுவுமில்லாமல் கஷ்டப்படுகின்ற நிலைமையில், மத்திய சர்க்காருடைய உதவியோடு இன்றைக்கு நகர்ந்துகொண்டிருக்கிறது.

**தொல்பொருள் ஆய்வுத்துறை :** அப்படிப்பட்ட மத்திய சர்க்காருடைய தொல்பொருள் ஆராய்ச்சிக் குழுவின் கைகளில் அடங்கிக் கிடக்கின்ற, தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம் போன்ற ஆலயங்கள் பற்றி யெல்லாம், மத்தியக் கல்வி அமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவிடத்தில் கடந்த திங்கள் டெல்லிக்குச் சென்ற போது விரிவாகப் பேசினேன். நீங்கள் ஒருமுறை என்னுடன் வந்து தஞ்சாவூரையும், கங்கைகொண்ட சோழ புரத்தையும் காணுங்கள் என்றெல்லாம் சொன்னேன்.

"நான் வருதற்கு முன்பு, அதுகுறித்து அலுவலாளர்களை,மேற்பார்வையாளர்களை அனுப்பி வைக்கிறேன். அவர்களிடத்திலே என்னென்ன செய்யவேண்டும் என்பதைச் சொல்லி அனுப்புங்கள்" என்று திரு. வி. கே. ஆர். வி. ராவ் எடுத்துச் சொன்னதற்கிணங்க, நான்கு நாட்களுக்கு முன்பு அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட அலுவலாளர்கள் என்னை வீட்டிலேவந்து சந்தித்தார்கள். தஞ்சாவூர்க் கோவில் பற்றியும், கங்கை கொண்ட சோழபுரம் பற்றியும், நான் அவர் களிடத்திலே விளக்கமாக எடுத்துச்சொன்னேன். "நீங்கள் கவனியுங்கள். இல்லையென்றால், மாநில அரசிடத்திலாவது அதைக் கவனிக்கின்ற – சீர்படுத்துகின்ற - பாதுகாக்கின்ற – பழுது பார்க்கின்ற பொறுப்புக்களை அளித்து விடுங்கள்" என்று கூறினேன்.

"இல்லை இல்லை, உங்கள் ஒத்துழைப்பு இருந்தால் போதும், அதற்காக நாங்கள் பணம் செலவிட்டு ஆலயங்களைப் பாதுகாக்கிறோம்" என்று கூறியிருக்கிறார்கள்.

**அனைவரும் மகிழும் அரசு :** ஆக இந்த அரசு ஆலயங்களைப் பாதுகாக்கும்; இந்த அரசு யாருடைய மனமும் புண்படுகிற அளவுக்கு, மதத்துறையிலே தன்னுடைய கருத்துகளை நுழையவிடாது.

ஆனால் இந்த அரசுக் கட்டிலில் வீற்றிருக்கிற எங்களுக்கென்று தனிக்கொள்கைகள் உண்டு; எங்களுக்கென்று தனி லட்சியங்கள் உண்டு; எங்களுக்கென்று தனி எண்ணங்கள் உண்டு.

நான் படித்த பள்ளிக்கூடம் திருவாரூர்ப் பள்ளிக்கூடம்; அடுத்துப் படித்த பள்ளிக்கூடம் ஈரோட்டுப் பள்ளிக்கூடம். நான் கல்லூரியில் நுழைந்ததில்லை; ஆனால்

நான் நுழைந்த கல்லூரி, காஞ்சிபுரத்துக் கல்லூரி.

ஆகவே, நான் அந்த ஈரோட்டுப் பள்ளிக் கூடத்துப் பாடங்களை, காஞ்சிபுரத்துக் கல்லூரி கற்றுத்தந்த பண்பாட்டோடு பயின்றவன். 'யாருடைய மனத்தையும் புண்படுத்தாதே' என்பது காஞ்சிபுரத்துக் கல்லூரியினுடைய அறிவுரை. அந்த அறிவுரையின்படி நான் நடப்பேன், அதே நேரத்தில் என்னுடைய இலட்சியங்களை, யாருக்காகவும் எந்தநேரத்திலும், இம்மியளவும் விட்டுக் கொடுக்கமாட்டேன்.

ஆனால் யாருடைய மனமும் புண்படத் தக்கவிதத்தில், இந்த அரசை நான் நடத்த மாட்டேன். அனைவரும் மகிழத்தக்கவிதத்தில், அவர்கள் ஆண்டவனை நம்புபவர்களாக இருந்தாலும், நம்பாதவர்களாக இருந்தாலும், அனைவரும் மகிழத்தக்க விதத்தில், இந்த அரசு நடைபெறும்.

**திருவாரூர்க் கோயில் திருப்பணி :** திரு. வி. எஸ். தியாகராாசன் அவர்கள், நாலைந்து நாட்களுக்கு முன்பு என்னிடம் பேசிய நேரத்தில், திருவாரூரில் தேவாலாயத் திருப்பணி தொடங்க இருக்கிறது. நீங்கள் தொடங்கி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆலயம் இடிபாடுகளால் கெட்டுவிட்டால், ஓர் ஆயிரம் ஆண்டுகளுக்குப்பிறகு ஆலயம் இருந்த இடம் தெரியாமல் போய்விடுமேயானால், தமிழகத்தினுடைய இந்தக் காலத்து வரலாற்றை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு யாரும் உணர முடியாது. ஆகவே இந்தத் திருப்பணியின் மூலம் ஆலயம் பலப்படுத்தப்படுகிறது, பழுது பார்க்கப்படுகிறது, என்ற காரணத்தினால் வருகிறேன் என்று, நான் மகிழ்ச்சியுடன் ஒத்துக்கொண்டேன்.

**மனநிறைவும் முகமலர்வும் :** ஆனால் அதே நேரத்தில், என்னுடைய கொள்கைகள் என்னுடைய நெஞ்சத்தை விட்டு அகலாது, அதற்காகப் பாடுபடுவேன். வெற்றி பெறவேண்டும் என்பதற்காக, நான் வலியச்சென்று யாரையும் வற்புறுத்தி, என் பக்கம் இழுக்கவேண்டுமென்று கருதமாட்டேன்.

இன்றையதினம் தருமபுரம் ஆதீனத்தைச் சேர்ந்தவர்களுக்கும், திருவாவடுதுறை ஆதீனத்தைச்சேர்ந்தவர்களுக்கும், மற்றும் ஆத்திகக் கருத்தை மனத்திலே கொணடவர்களுக்கும் தெரியாதா என்னுடைய கொள்கை என்ன என்று? தெரியும். அதே நேரத்தில் அரசை எப்படி நடத்துவேன், யாருடைய மனமும் புண்படாமல் இருக்கும்படி இந்த அரசை நடத்துவேன் என்பதை; அவர்கள் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால்தான், 'இது போதும் எங்களுக்கு' என்ற மன நிறைவோடு, அவர்கள் எனக்கு மாலை அணிவிக்கிறார்கள், வாழ்த்துரை வழங்குகிறார்கள். ஆகவே இந்த அருமையான சந்தர்ப்பத்தில, உங்கள் முகம் அனைத்தும் புன்னகையால் மலர்கின்ற இந்த நேரத்தில், இந்தத் திருமண மணடபத்தை மகிழ்ச்சியுடன் திறந்து வைக்கின்றேன்!

**மணமக்களுக்கு வாழ்த்து :** திருமண மண்டபத்தைத் திறந்து வைத்தால், ஒரு திருமணம் அங்கே நடைபெறவேண்டும். காஃபி ஓட்டல் திறந்தால், அனைவருக்கும் அங்கே சிற்றுண்டி வழங்கவேண்டும்.

அதைப்போல இத்திருமண மண்டபத் திறப்பு விழாவிலும், பசுபதி சுலோசனா ஆகியோரின் திருமணமும் நடைபெறவிருக்கிறது. அனைவரின் சார்பாகவும், நான் அந்த மணமக்களை வாழ்த்துகிறேன்!

— நன்றி : நவமணி (21-6-69)

# திருமுறைகளின் சிறப்பு

*[சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம், மாம்பாக்கம் குருகுலம் ஆகியவற்றைச் சேர்ந்த அன்பர்கள், சைவ சமய ஆசிரியர்கள் ஆகிய நால்வர் பாடலும் பெற்றுச் சென்னைக்கு அணித்தே மிகச் சிறந்த தலமாக விளங்கிவரும் திருக்கழுக்குன்றத்தில், ஒவ்வோர் ஆண்டும், ஆனிமக நாளை ஒட்டி, மாணிக்கவாசகர் விழாவை மிகவும் சிறப்புற நடத்தி வருகின்றனர். 24-ஆம் ஆண்டு நிகழ்ச்சியாக மாணிக்கவாசகர் விழா, அண்மையில் (17, 18, 19, 20—6—69) அங்கு மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. அப்போது மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், மாம்பாக்கம் குருகுலம் திருக்குறள் பீடம் அருட்டிரு அழகரடிகளார் ஆகியோர் திருமுன்னிலையிலும், 'திருக்கோயில்' ஆசிரியர் திரு புலவர் ந. ரா. முருகவேள், M.A., M.O.L. அவர்கள் தலைமையிலும், கவியரங்கம் ஒன்று நன்கினிது நிகழ ஏற்பாடு செய்யப்பெற்றது. "திருமுறைகள் செய்த புரட்சி" என்னும் தலைப்பிற் கவிஞர்கள் பலர், சைவத் திருமுறைகள் பன்னிரண்டின் சிறப்பை, முறையே பலவகைகளில் விளக்கிப் பாடினர். அக்கவியரங்கத்திற்கு ஒரு பொது முன்னுரை போல அமைந்த "திருமுறைகளின் சிறப்பு" என்னும் கவிதை, இங்கு வெளியிடப் பெறுகின்றது.*

*—ஆசிரியர்.]*

### (குரு வணக்கம்)

தனித்தமிழ் இயக்கத் தந்தை !
    சைவசித் தாந்தச் சான்றோர் !
முனைத்தநற் கொள்கை வீரர் !
    முபமொழிப் புலமை வேந்தர் !
மனித்தருள் தெய்வம் போன்ற
    மறைமலை அடிக ளார்தாம்
எனைத்தமிழ்ச் சைவன் என்ன
    இலங்குவித்தார் ! அவர்தாள் போற்றி ! 1

### (மணிவாசகர் விழா)

அன்பருள்சேர் மதுரைஆ தீனத் தலைவீர் !
    ஆன்றமைந்த சான்றோர்காள் ! அருமை நண்பீர் !
குன்றலில்சீர் மாம்பாக்கம் குருகு லத்தார்,
    குலவுசென்னைச் சிவனடியார் திருக்கூட் டத்தார்,
நன்றுதிருக் கழுக்குன்றில் இருபான்நான்கு ஆண்டா
    நயந்தெடுக்கும் மணிவாச கர்நல் விழாவில்,
இன்பமிகும் எழிற்கவிதை அரங்கம் ஒன்றை
    இவ்வாண்டும் நலம்அமைய இயலச் செய்தார் ! 2

(கவியரங்கம்)

நற்பண்பின் மிகும்ஆட லரசர்,நண்பர் நடேச
நாரா யணர்,சிவசங் கரனும்நல் லன்பர்,
எற்கெழும் தேமொழியாம் இனி பகுணச் செல்வர்,
எனும்சிறந்த இணையில் தமிழ்க் கவிஞர்கள் நால்வர்,
பொற்புமிகத் திருமுறைகள் மொழி-கலை-மன் பதை-மெய்ப்
போதம்எனும் துறைகளினில், புரட்சிநலம் புரிந்த
அற்புதத்தை, விளக்கிமிக அழகாகப் பாட,
அன்பின்வந்தார்! அனைவருக்கும் என்அன்பு, வணக்கம்! 3

(திருமுறைகள்)

எத்தனையோ பலநூல்கள் எண்ணற்ற நிலையில்
இருக்கின்ற நம்தமிழில் என்றாலும், அவைகள்
அத்தனையும், தெய்வநல அருட்சிறப்பான் மிகும்நம்
அளப்பருஞ்சீர்த் திருமுறைகட்கு ஈடாக மாட்டா!
"இத்தரையில் இவைபோன்ற இலக்கியங்கள் யாண்டும்
இறையருளின் நலம்செழிப்ப இல்லை இல்லை" என்றே
வித்தகராம் மேனாட்டார் வியந்துமிகப் புகழ்ந்தார்!
மேதகைய திருமுறைச்சீர் விளம்பற் பாற்றோ? 4

"இலக்கியங்கள் எலாம், நாட்டின் இயல்பை,வர லாற்றை,
இன்கலையை, எழிற்பண்பை இனி தெடுத்துக் காட்டும்;
இலக்கியங்கள் நாகரிகத்து எழில்விளக்கம்; நாட்டை
எழில்வளஞ்செய் இன்னமிழ்தப் பெருவெள்ளம்; நல்ல
இலக்கியங்கள் எழுந்தனவேல் எழுச்சியுறும் நாடும்;
இலக்கியத்தின் தரம்குறைந்தால் சமுதாயம் வீழும்;
இலக்கியங்கள் புரட்சிபல தோற்றுவிக்கும்" என்பர்.
இணையில்சைவத் திருமுறைக்கும் இவையனைத்தும்–
பொருந்தும். 5

(1) "No cult in the world has produced a richer devotional literature, or one more instinct with brilliance of imagination, fervour of feeling and grace of expression."

—Prof. L. D. Barnett, The Heart of India, p. 82.

"In no literature with which I am acquainted has the individual religious life—has its struggles and dejections, its hopes and fears, its confidence and triumph—received a delineation more frank and more profound."

—Charles Eliot, Hinduism and Buddhism, vol II, p. 27.

"In the matter of pure devotional outpouring, exuberance and ebullience of language Tamil has hardly a parallel in the world's literature."

—Dr. C. P. Ramaswamy Aiyer, P. E. N. Conference.

ஒருநாடும் காணாத ஒப்பில்பெரும் புரட்சி
உருவாகித், தீங்கொழிந்து நன்மையெலாம் ஓங்கத்,
திருஞான சம்பந்தர் திருமுறைகள்[2] செய்த;
திசையனைத்தும் ஊரூரும்[3] செந்தமிழை வளர்த்த;
அருள்நாடும் அவர்க்கிணையாம் ஆற்றல்மிக்க தலைவர்
அரியபெரும் பரப்புநர்தாம் தோன்றுகிலர் யாரும்;
மருள்ஓட வைத்தவர் தமிழ்வளம்[4]தான்! வீறும்
வளஞ்செறிந்த தமிழ்என்று மகிழ்ந்துரைத்தார் நம்பி! [5] 6

ஞானத்தின் திருவுருவாம் ஞானசம்பந்
தப்பெருமான், நற்றமிழ்க்கண்
தேனத்திற் சிறந்தபல திருப்பதிகம்(6)
முன்பின் இலா வகையிற் செய்து
கானத்தின் களஞ்சியமாய்க் கலைவளங்கள்
பெருகுவித்தார்! தமிழ்த்தாய்க் கன்னி,(7)
வானத்தின் இலங்குசைவ மணம்புணரச்
செய்தஅவர் மாண்பென் சொல்கேன்? 7

(2) "Sambandha was a born poet who 'lisped in numbers, for the numbers came.' He must be reckoned as a genuine Tamil poet, certainly the greatest in the lyrical department. His hynns are models of pure and elevated diction, generally and touching, but always melodious and well—turned."

(3) "Sambandha appears to have been an indefatigable traveller, and to have visited almost every town and every village of any consequence in the Tamil land."

—Prof P. Sundaram Pillai, M.A.

(4) "In any social group, whatever its nature and however large it may be, language plays a role of primary importance. It is the strongest of the bonds uniting the members of the group, and it is at the same time the symbol and safeguard of their common life. What instrument can have greater efficacy than language in affirming the individuality of the group? It is their sign of recognition and their badge of brotherhood."

—J. Vendryes, Language.

(5) நம்பியாண்டார் நம்பிகள், "ஆறேறும் சடையான் அருள்மேவ அவனியர்க்கு வீறேறும் தமிழால் வழிகண்டவன்" எனப் பதினொன்றும் திருமுறையிற் பாடியிருத்தல் காணலாம்.

(6) இயமகம் ஏகபாதம் எழுகூற்றிருக்கை கோமூத்திரி கூடசதுக்கம் மொழிமாற்று மாலைமாற்று சக்கரமாற்று திருவிராகம் வழிமொழித்திருவிராகம் திருவிருக்குக்குறள் திருமுக்கால் திருத்தாளச்சதி யாழ்மூரி முதலிய திருப்பதிகங்கள், திருஞானசம்பந்தர் பாடல்களில் தனிப் பெருஞ் சிறப்பான அமைப்புடையவை. சேக்கிழார் இப்பதிகங்களை யெல்லாம் "மூல இலக்கியம்" எனப் போற்றியுள்ளார். சம்பந்தர் வரலாற்றில், 276—227ஆம் பெரியபுராணப் பாடல்கள் இங்கு அறிந்து இன்புறற்பாலன.

(7) தமிழ்த்தாய் ஆகிய கன்னியை, ஞானசம்பந்தர் ஆகிய தலைமகன், சைவமணம் புணரச் செய்தார் என்னும் சொல் நயமும், பொருள் நயமும் போற்றற்பாலன. அதிசய அணி.

திருநாவுக் கரசுகள்தம் திருமுறைகள் மூன்றும்
சிறந்தநன்மெய் யுணர்வளம் திகழ்ந்தொளிரத் தேற்றும்;
வரு"ஞானப் பாடல்"[8] எனப் போற்றிமிக மகிழ்ந்தார்
மாதவத்துச் சிவஞான யோகிகள்தாம்; மாண்பார்
குருநாதர் இவர், குறளில் "மெய்யுணர்வு"என் றோங்கிக்
குலவும் அதி காரவைப்பாய்க் கூறுகிற்பர் மேலோர்[9]
ஒருநாவுக்கு உரைசெய்ய ஒண்ணுமோ ? "சொற்கண்
உறுதியினுக்கு அப்பர்[10] என உலகுரைக்கும் அன்றே!

மெய்யுணர்வு வளஞ்சான்ற மேலோராய் விளங்கும்
வித்தகர்நம் அப்பர்பெம்மான், வியனுலகம் எல்லாம்
உய்யும்வகை உளம்இரங்கி உவந்தருளிச் செய்த
உபதேச வளநலன்தான், உயர்ந்ததிரு விருத்தம்,
செய்யதிரு நேரிசை, சீர்க் குறுந்தொகை, செந் தமிழ்நல்
திருத்தாண் டகம்என்னும் தேன்மழையாய்ப் பெருகித்
தெய்வஅருள் நெறிப்பயிர்தான் செழித்தோங்கச் செய்து,
தேவாரம்([11]) எனும்பெயரால் திகழ்ந்தொளிரும் அன்றே!

நந்தம்அருட் பெருங்குரவர் நம்பியா ரூரர்
நவின்றதிரு முறைஏழாம் திருமுறையா நவில்வர் !
சுந்தரமூர்த் திகள் எனும்அத் தூயவன்போல், யாண்டுச்
சூழினும், ஓர் தலைமகன், நற் பெருங்கவிஞன் உண்டோ?
செந்தமிழிற் சேக்கிழார் திருத்தொண்டர் புராணம்
செப்புதற்குத் திருத்தொண்டத் தொகைசிறக்கப் பாடித்
தந்து, அவர்தம் காப்பியத்தின் தலைமகனாய் வைகித்
தமிழ்கொண்டு, கடவுளையும் பணிகொண்டான் தானே !

ஆசில்சீர் நம்நம்பி ஆரூரர்
அரும்பெருமை அளத்தற் காமோ ?
நேசமிகப் புகழ்ந்துரைத்து நெடிதேத்த
வேண்டும்எனும் நியமம் மாற்றி,
ஏசியும்மிக்கு இகழ்ந்துரைத்தும், இன்றமிழால்
இறையருளை எய்தி நின்ற
தேசுடைய சுந்தரர்தம் செந்தமிழ்ச்சொல்
நயவளம்([12])தான், செப்பற் பாற்றோ ? (11)

(8) 'இடையறுப் பேரன்பும்' எனத் தொடங்கும் காஞ்சிப் புராணப் பாடல்.

(9) 'சிவக்கவிமணி' என்னும் சம்பந்த சரணாலய அடிகள்.

(10) 'வாக்கிற்கு அருணகிரி' எனவரும் தனிப்பாடல்.

(11) 'தேவாரம்' என்னும் பெயர், திருநாவுக்கரசரின் பாடல்களுக்கே காரண இடுகுறிச் சிறப்புப் பெயராக வழங்கும் என்பர் பெரியோர்.

(12) "நபத்திற்குச் சுந்தரனார்" என்பது, ஒரு பழந்தனிப் பாடற்பகுதி.

"தேன்படிக்கும் அமுதாம்நற் றிருப்பாட்டு
சுந்தரர்தம் திருப்பாட்டு" என்றார்,
வான்படிக்கும் சீர்த்திமிகு வடலூர்நல்
இராமலிங்க வள்ள லார்தாம் !
தான்படிக்கும் தமிழ்மறையின் தனிச்சிறப்பைப்
பொன்மலைக்கும், சங்க தத்தின்
ஊன்படைக்கும் பழிமறையை அணுகிலைக்கும்
ஒப்பிட்டார் !(13) உரைத்தல் என்னே ! (12)

"தேவரெலாம் தொழச்சிவந்த செந்தாள் முக்கட்
செங்கரும்பே ! மொழிக்குமொழி தித்திப் பாக
மூவர்சொலும் தமிழ்கேட்கும் திருச்செ விக்கே
மூடனேன் புலம்பியசொல் முற்றுமோ?" என்று,
ஏவருமே துதித்துவக்கும் தாயு மானார்
இனிதெடுத்துப் புகழ்ந்தனரேல், இறைய ருட்டான்
பாவருஞ்சீர்த் திருமுறையின் பரிசாம்; இன்பப்
பண்புவளம் செறிஅதன்சீர் பரவற் பாற்றே ! (13)

இரும்புதரு மனத்தினையும் ஈர்த்துருக்கி,
எழிற்பொன்னாய் இனிது மாற்றிக்
கரும்புதரு சுவைபெருக்கிக் கனிவுவளம்
திருவாச கம்தான்(14) காட்டும்;

(13) "இலைக்குளநீர் அழைத்து, அதன்வாய் இடங்கர் உற அழைத்து" எனத் தொடங்கும் திருவருட்பாப் பாடல் காண்க.

(14) There are, indeed, but few poems in any language that can surpass Thiruvasakam or the holy word of Manikkavasagar, in profundity of thought, in earnestness of feeling, or in that simple childlike trust, in which the struggling human soul, with its burdens of intellectual and moral puzzles, finally finds shelter."

— Prof. P. Sundaram Pillai, M.A.

"There are few works in Tamil devotional literature that compare with, certainly none that excel the Thiruvasakam, in light and grace, in lofty feeling and fervid piety, in passionate longing for spiritual peace and purity, and in the uplifting faith in divine grace in which the humau soul, tossed about on the stormy billows of intellectual and moral puzzles, finds a safe haven of rest."

—Prof M. S. Purnalingam Pillai.

"ஐந்திணை உறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமம் சான்ற ஞானப் பனுவல்"

எனக் குமரகுருபர சுவாமிகள், தமது சிதம்பர மும்மணிக் கோவையிற் புகழ்ந்து பாடியருளி யிருத்தல் அறிந்து மகிழற்பாலது.

இரும்புவியிற் சிற்றின்பை இணையில்பெரும்
பேரின்பாய் இயலச் செய்தே
அரும்புலவோர் புகழ்கோவை([15]), அருள்அனுப
வத்தின்வளம் அமைந்து நிற்கும். (14)

செய்யதிரு மாளிகைநற் றேவர்,அருட்
சேந்தனர், கருவூர்த் தேவர்,
மெய்உயர்கண் டராதித்தர், வேணாட்டார்,
காடநம்பி, சேதி ராயர்,
பொய்யில் புரு டோத்தமர்,சீர்த் திருவாலி
அமுதர் எனப் புகலும் சான்றோர்,
உய்யும் வகை புகழ்ந்திசைத்த திருவிசைப்பா,
திரு முறையில் ஒன்பஃ தாகும். (15)

கருமூலம் நாம்அனைவோம் கழன் றுய்யக்
கயிலைநின் றும் போந்த சித்தர்,
திருமூல தேவர்அருள் திருமந்தி
ரச்சிறப்பைத் தெரிந்து ரைத்தல்,
அருள்மூலம் இலாதார்க்கும் அமையுமோ?
தமிழ்நூல்கள் அனைத்தி னுள்ளும்
பெருமூல நூல்என்னப் பிறங்குவது
மூலர்நூல்! பிறிதென் சொல்கேம்? (16)

நலன்சிறந்த ஞானமுதல் நால்நெறியும்
நவிற்றுவது; நானி லத்திற்
பலன்சிறந்த மந்திரங்கள் சக்கரங்கள்
பயிற்றுவது; பரிந்தி ரங்கிக்
குலன்சிறந்த அறவுரைகள் கொள்கைகள்தாம்
கூறுவது; குறிக்கொண் டுய்யத்
திறன்சிறந்த நுண்பொருள்கள் தெருட்டுவது;
திருமூலர் திருமந் திரம்! (17)

ஆலவாய் அண்ணல்,அருட் காரைக்கால்
அம்மையார், காட வர்கோன்,
சீலமார் சேரமான் பெருமாள்,நக்
கீரரொடு, சீர்க்கல் லாடர்,

(15) "In India, the Conditions of human love, from the first meeting of eyes to ultimate self oblivion, have seemed spiritually significant, and there has always been a free and direct use of sexual imagery in religious symbolism."

—Dr. Ananda K. Coomaraswamy, The Transformation of Nature in Art, p. 44

ஏலஉயர் கபிலரொடு பரணர், இளம்
பிரான், அதிரா அடிகள், ஏத்தி
ஞாலமகிழ் பட்டினத்தார், நம் பியாண்டார்
நவின்ற, பதினொன் றுகும் ! (18)

பெருகுபல சிறப்புடைய நாற்பதுநற்
பிரபந்தம் பிறங்கும் இஃதில்;
முருகனுக்கும், விநாயகர்க்கும், முதன்மைமிகும்
அடியவர்க்கும், முதல்வ னுக்கும்,
உருகுசுவை அமைந்தொளிரும் உலா முதல் நூல்
இருபத்தொன் றிதன்கண் உண்டு;
அரியதமிழ் நூற்பெருக்கில் பதினொன்றும்
திருமுறைச்சீர் ஆற்ற நன்றும் ! (19)

சுவைகள்என எட்டினையே சூழ்ந்துணர்தொல்
காப்பியனுர் சொல்லிப் போந்தார் !
நவையறுசீர் நூலினுக்கு நல்லமைதிச்
சுவைஒன்றும் நலக்கச் சேர்த்தே,
உவகைதரும் நூற்சுவைகள் ஒன்பஃதென்
றேபுலவோர் உரைத்துப் போந்தார் !
அவைகளின்மேல் அரியபக்திச் சுவையதனைச்
சேக்கிழார் ஆக்கித் தந்தார் ! (20)

"வரலாற்றின் உணர்வுசற்றும் வாய்த்திலது
தமிழ்மக்கட்கு"[16] என்றே வாய்சோர்ந்(து),
உரையாற்றி மகிழ்வர்சிலர்; உண்மையது
சிறிதெனினும், ஓர்ந்து ணர்ந்தே
விரலாற்றிற் சேக்கிழார் நெடிதாய்ந்து
வழங்குபெரு நூல்நி னைப்பின்,
திறனுற்றும் தமிழகத்தின் தேசியநற்
காவியம்அஃ தேயாம் அன்றே? (21)

(வேறு)

திருமுறை நூல்களின் தெய்வநலம் சான்ற
பெருமைகள்தாம் எல்லையிலாப் பெற்றித்(து);—அருமைமிகும்
நல்ல மறுமலர்ச்சி நூல்கள்என நாம்அவற்றைச்
சொல்லலாம் உண்மை துணிந்து. (22)

(16) "The historical spirit, the antiquarian spirit, to a great degree even the critical spirit, are developments only of modern times."

இயற்கைஎழிற் கின்புறுதல், வாழ்வியலைத் தேர்தல்,
மயற்கையறும் மெய்யறிவு வானில்—உயர்ச்சியுறல்,
நல்லொழுக்கில் நின்றருளை நாடல், உடையவர்கட்(கு)
இல்லை திருமுறைபோல் இன்பு.(17) (23)

மனக்கவலை மாற்றும் மருந்தாகும்; எல்லா
நினைப்பரிய தீக்குணமும் நீக்கும்;—தனக்கிணையில்
தெய்வத் திருமுறைநற் செந்தமிழ் நூல்களைப்போல்
வையத் துயர்ந்தனஇல் மற்று. (24)

கலைநிரம்பிக் கற்றற் கினிதாய், அறிவின்
நலம்நிரம்பிச் சொற்பொருள்கள் நன்றாய்,—விலைவரம்பின்று
உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உவப்பிக்கும்
தெள்ளு திருமுறைநூற் சீர்! (25)

(முடிவுரை)

என்னையும் "ஓர் பொருளாக்கி, நாய்சிவிகை
ஏற்றுவித்தே", இனிய அன்பால்,
துன்னுபெருஞ் சீர்ச்சென்னைச் சிவனடியார்
திருக்கூட்டத் தார்தாம் சூழ்ந்து,
கன்னல்எனும் சுவைதரும் இக் கவியரங்கிற்
கலந்துகொளக் கனிவு செய்தார்!
நன்னர்அவர் தமக்கும், மற்றும் நண்பருக்கும்,
உளங்கனிந்த வணக்கம், நன்றி! (2)

—ஆசிரியர்.

(17) "To a mind brooding on the silent beauty exhibited in the varied phenomena of nature, to an intellect diving deep into the mysteries that lie in the inmost corners of life, to a soul soaring high into ethereal regions of religion and philosoply, to a spirit seeking serence rest in moral sanctity and Divine grace, nothing appears so permanently beautiful, so certainly impressive and effective, as the study of a fine piece of poetry."

—Maraimalai Adigal.

# செய்திச் சுருக்கம்

சென்னைச் சைவசித்தாந்த மகாசமாசத்தின் சார்பில், திருமயிலைக் கபாலீச்சரத்தில் மாணிக்கவாசகர் விழா சிறப்புறக் கொண்டாடப்பெற்றது. சமாசத் தலைவர் வித்வான் திரு. கோ. மு. முத்துசாமிபிள்ளை I. A. S. (Rtd.) அவர்கள், வரவேற்புரை நிகழ்த்தினார்கள். திரு. முத்துக் குமாரசாமி நாயனார் அவர்களும், 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் M.A., M.O.L. அவர்களும் முறையே 'மாணிக்கவாசகர் மாட்சி' 'திருவாசகச் சிறப்பு' என்னும் பொருள்கள் பற்றிச் சொற்பெழிவாற்றினார்கள். சமாசச் செயற்குழு உறுப்பினர் திரு. சி. என். சிங்காரவேல் முதலியார் M.A. அவர்கள், நன்றியுரை நவின்றார்கள். —ஆசிரியர்.

---

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் அருளாட்சியில் உள்ள, திருப்பெருந்துறை ஸ்ரீ ஆத்மநாத சுவாமி தேவத்தானத்தில் ஆனித் திருமஞ்சன விழா 12—6—69 முதல் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதன் சார்பில், குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப் பாங்கின்படி, எட்டாம் நாள் விழாவில், அருண்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள், "திருவாசகப் பெருமை" பற்றியும், பத்தாம் நாள் விழாவில் 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L. அவர்கள், "திருவாசகப் பதிகங்களின் கருத்து விளக்கம்" பற்றியும் சொற்பொழிவுகள் ஆற்றிச் சிறப்பித்தனர். மானேசர் திருவாளர் டி. ஆறுமுகம்பிள்ளை அவர்கள் விழா நன்கினிது நடைபெறச் சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்திருந்தமை குறிப்பிடற்பாலது. —ஆசிரியர்.

---



மாயூரத்தில் நடைபெற்ற ஓதுவார்கள் சிறப்புப் பயிற்சிப்பள்ளி நிறைவு விழாவில், நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு கே. வி. சுப்பையா, B.A. அவர்களும், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல் (2—6—69). —ஆசிரியர்.

# மகாபாரதம்

**அருண்மொழியரசு**

**திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.**

(முற்றொடர்ச்சி)

**வீமன் திறம்:** அத்தினபுரத்தில், குருகுலத்தின் இரு திறத்து மக்களும் நீரில் வளரும் தாமரை மலர்கள் போல் இனிது வளர்ந்து மகிழ்ந்து விளையாடினார்கள். அரண்மனையில் அவர்கட்கு என்ன குறை? தனம் தான்யம் ஆடை அணிகலன்கள் எல்லாம் வேண்டிய வேண்டியாங்கு நிறைந்திருந்தன. முதலில் ஒற்றுமையாகவே இருந்தார்கள். ஆதித்தன் மகனாகிய கர்ணனைத் துரியோதனன் கண்டு அவனைத் தன் உயிர்த் தோழனாகக் கொண்டான். துவாபர யுகமே வந்து சகுனியாகப் பிறந்தது என்று முந்திக்கூறினேன் அல்லவா? அந்தக் குலத்தை முற்றிலும் முடிவு செய்ய வந்த சகுனி, துரியோதனாதியர்க்கு உறுதுணையாக இருந்தான். துரியோதனனுடைய அம்மானாகிய அவன், அவனிடம் மிக்க பட்சமாக இருந்தான். வஞ்சனையே வடிவாய அவனால், துரியோதனன் தவறான நெறியில் செல்லலானான்.

பீமன் அளவற்ற ஆற்றல் படைத்தவன். ஓடுவதிலும் ஆடுவதிலும் அவன் மற்ற சகோதரர்களுடன் போட்டியிட்டு வெல்வான். துரியோதனாதியர் அவன் கைபட்டு படமட என்று கீழே சாய்வார்கள். நீரில் விளையாடும்போது பத்து இருபது பேர்களை முதுகில் சுமந்து நீந்துவான். வேடிக்கையாக நீரின் அடியில் கொண்டுபோய் அழுத்திவிடுவான். திக்குமுக்காடிக் கரையேறுவார்கள். கரங்களை நீட்டிக் கரத்தில் தொங்கவிட்டுத் தட்டுவான்.

**மாமரம்:** ஒருநாள் துரியோதனாதியர் நூற்றுவரும் ஒரு மாஞ்சோலையில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். துரியோதனன் தம்பியரைப் பார்த்து இது மாங்காய் கிடைக்காத காலம். இதோ இம்மரத்தில் மாம்பிஞ்சுகள் நிரம்பக் காய்த்திருக்கின்றன. ஏறிப்பறியுங்கள் என்றான். ஒருவர் இருவர் ஏறிப்பறித்தாலேபோதும். செம்மறியாடுகளைப்போல் கிளைக்கு எட்டுப் பத்துவீதம் தொண்ணூற்றொன்பதிமரும் ஏறினார்கள். துரியோதனன் மட்டும் மரத்தின் கீழ் நின்றிருந்தான். பீமன் அங்கே வந்து துரியோதனனைப் பார்த்து, "சகோதரா? தம்பியர்கள் எங்கே?'' என்று அன்புடன் கேட்டான்.

''தம்பி! மாமரத்தில் மாம்பிஞ்சுகளைப் பறிக்க ஏறியிருக்கின்றார்கள். நீயும் ஏறிப் பறித்துக் கொள்'' என்றான்.

''அண்ணே! இது என்ன விந்தை? கேவலம் மாம்பிஞ்சுக்காக மரம் ஏறுவதா? நாம் அரசகுமாரர்கள் அல்லவா? உதடு அசைந்தால் உலகம் அசையவேண்டாவோ? நா அசைந்தால் நாடு அசைய வேண்டாவோ'' என்றுகூறி, வானளாவிய அந்த மரத்தை ஒரு கரத்தில் பிடித்து அசைத்தான். அப்படி அசைத்தால் மரத்தில் உள்ளவர்கள் வீழ்வார்களே என்று அவன் நினைக்கவில்லை. கள்ளங் கபடு இல்லாத உள்ளம். பீமன் மரத்தை அசைத்தவுடன்தொண்ணூற்றொன்பதுபேரும் கீழேவிழுந்தார்கள்; மாம்பிஞ்சுகள் இலைகள் எல்லாம் நிலத்தில் உதிர்ந்தன. அம்மரம் இலை காய் ஒன்றும் இன்றி வெறும் கொம்பாக நின்றது. கீழே விழுந்த அந்த இளைஞர்கள் கை கால்களில் அடிபட்டுத் துன்புற்றார்கள். அடேய் மரத்தின்மீது இருந்த நீங்கள் கிளைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டாமா? என்று கூறிப் பீமன் சிரித்தான். இச்செயலைக்கண்டு துரியோதனன் பொறாமையுற்றான். பீமனுடைய அந்தப் பெரும் ஆற்றலைக்கண்டு அவனுக்குப் பொறாமை ஏற்பட்டது. பீமன் விஷயத்தில் துரியோதனனுக்கு முதன்முதலில் பகைமையுணர்ச்சி ஏற்பட்டதற்கு இதுதான் காரணம். இந்தப் பொறாமை விதைக்குச் சகுனி நீர் வார்த்தான், கர்ணன்

வேலியிட்டான். துச்சாசனன் களைபறித்து உரம் போட்டான். பொறாமை என்னும் நச்சு மரம், துரியோதனனின் உள்ளத்தில் வெகு விரைவில் ஓங்கி வளர்ந்துவிட்டது.

துரியோதனன் தனிமையில் சகுனியைப் பார்த்து "மாமா! பீமன் மரத்தை அசைத்து என் தம்பியர்களை மாம்பிஞ்சுகளோடு உதிர்த்தானே. இவன் அடித்தால் எங்கள் உயிர்கள் மாம்பிஞ்சு போல உதிருமே?என்றான். சகுனி "மருகனே! அதில் என்ன சந்தேகம். பீமனை ஒழித்துக் கட்டினாலன்றி உனக்கு வாழ்வு கிடையாது. பீமனை ஒழித்துக் கட்டினாலன்றி உனக்கு வாழ்வு கிடையாது. அவனைக் கொல்லுதல் வேண்டும்" என்றான்.

"பீமன், வலிமையில் தன் தந்தை வாயுதேவ தேவனுக்கு நிகரானவன். பாண்டு இந்நகரத்து மக்களுக்கு அதிக நன்மை செய்திருப்பதனால் இந்நகர மக்கள் தந்தையை இழந்த பாண்டவர்கள் மீது மிக்க அன்பு வைத்திருக்கிறார்கள். பீஷ்மரும் விதுரரும் பாண்டவர்களிடம் மிக்க பட்சம் வைத்திருக்கின்றார்கள். என் பிதாவுங் கூட அவர்களைச் சொந்த புத்திரரைவிட அதிகம் நேசிக்கின்றார். பீமனைக் கொன்றால் நகரத்தார் எல்லோரும் திரண்டு நம்மைக் கொன்றுவிடுவார்களே! இதற்கு என்ன செய்வது மாமா? பீமனைக் கனவில் கண்ட மாத்திரத்திலேயே, எனக்குப் படுக்கை நனைந்து விடுகின்றது. அவன் நடந்தால் பூமி அதிர்கின்றது. அவன் கைவைத்தால் மரங்களில் உள்ளவைகள் உதிர்கின்றன. ஆ! ஆ! அவனைப் பார்த்தால் என் உள்ளம் நடுங்குகின்றது. உயிர்ப்பு ஒடுங்குகின்றது" என்றான் துரியோதனன்.

சகுனியின் ஆலோசனையின்படி, துரியோதனன் பீமனைக் கங்கையாற்றில் வீழ்த்த எண்ணினான். ஒருநாள் தருமர் முதலியோரை அழைத்துக்கொண்டு போய்க் கங்கையாற்றில் நீந்தி விளையாடினார்கள். பீமசேனன் மிக்க ஊக்கத்துடன் விளையாடினான். பொழுது போன பின்னர் அரண்மனையிலிருந்து நல்ல அறுசுவையுண்டிகளைத் தருவித்து ஆற்றங்கரையில் வைத்து உண்டார்கள். துரியோதனன் பீமன் அருகில் அமர்ந்து மிக்க அன்பு காட்டுவதுபோல் நடித்து "என் தம்பிக்கு நிரம்ப பலவை" என்று கூறினான். பீமன் துரியோதனனுடைய அன்பு உண்மையானதென்றே நம்பினான். நல்லது உங்களுக்கு எவ்வளவு வைக்க முடியுமோ, அவ்வளவு வையுங்கள், வேண்டாம் என்று கூறமாட்டேன்" என்று கூறி, வயிறுபுடைக்கத் தின்றான். பின்னர்க் கங்கை யாற்றங்கரையில் உள்ள அரச விடுதியில் எல்லோரும் உயர்ந்த படுக்கையில் படுத்து உறங்கினார்கள்.

**ஆற்றில் இட்டது:** கர்ணன் சகுனி துரியோதனன் துச்சாதனன் இந்த நால்வரும் உறங்கவில்லை. உறுதியுள்ள கயிறுகளால் அயர்ந்து உறங்குகின்ற பீமனைக்கட்டி, வாசுகியினால் பிணித்து மந்திரகிரியைக் கடலில் எறிந்தது போல், பீமனைத் தூக்கிக் கங்கை நதியில் எறிந்து விட்டார்கள். பீமன் மாண்டான் என்று மகிழ்ந்து, மெல்லவந்து தத்தம் படுக்கைகளில் படுத்துச் சுகமே கண் துயின்றார்கள்.

வேகமாக ஓடுகின்ற ஆழ்ந்த நதியில் பீமன் வீழ்ந்தான். உறக்கம் தெளிந்தது. கைகால்கள் கட்டியிருந்தபடியால் திணறினான். தந்தையாகிய வாயுவையும், சிவமந்திரமாகிய திருவைந்தெழுத்தையும் நினைத்து, மூச்சைப் பிடித்து உதறினான். கயிறுகள் வாழைநார் போல் அறுபட்டன. நீந்திக்கரையேறினான். நம்மைக் கயிற்றில் கட்டிக் கங்கையில் இட்டவர் யார்? என்று சிந்தித்தான் எல்லோருக்கும் உதவி புரிகின்ற எனக்குப் பகைவர் யாருளர்? துரியோதன அண்ணா, என் தம்பிக்குப் படை; என் தம்பிக்குக் கொடு என்று மிகுந்த அன்புடன் உபசரிக்கின்றனர். தூக்கத்தில் நானே உருண்டு உருண்டு வந்து விழுந்திருக்கக்கூடும், வழியில் உள்ள கயிறுகளும் கொடிகளும் நம்மைச்சுற்றிக்கொண்டிருக்கும். இப்படி உருண்டு வந்து விழுந்ததைப் பிறரிடம் கூறினால், தூக்கத்தில் மிக்கவன் என்று நம்மை ஏளனம் புரிவார்கள். ஆதலால் யாரிடமும் கூறக்கூடாது" என்று தனக்குள் சிந்தித்துக்கொண்ட பீமன் மெல்லவந்து, தன் படுக்கையில் படுத்துக்கொண்டான். காலையில் கண்விழித்து எழுந்த துரியோதனன், பீமனைக் கண்டு திடுக்கிட்டான்.

**பாம்புகளை ஏவுதல்:** துரியோதனன் தனிமையில் சகுனியைச் சந்தித்தான் "மாமா, பீமன் எப்படிப் பிழைத்தான், உறுதியான கயிற்றில் தானே கட்டினோம். இந்தக் கயிற்றை அறுத்தது போல் நாளை இவன் எங்கள் நாடி நரம்புகளை அறுப்பானே? நினைக்கும் போதே அச்சத்தால் உடம்பு நடுங்குகின்றதே" என்றான். சகுனி "மருகனே! அவன் வாயு குமாரன். சங்கிலிகளைக் கூட அறுக்கும் ஆற்றல் அவனுக்கு உண்டு. நச்சுப் பாம்புகளைத் தயாரித்து, பீமனைத் தனியே படுக்க

வைத்துப் பாம்புகளை அவனைக் கொல்ல முயற்சிசெய். பாம்புகடித்து இறந்தான் என்று உலகம் எண்ணிக்கொள்ளும். பழி நம்மைச்சாராது. தந்திரத்தால் தான் நீ முன்னேற வேண்டும் என்றான். துரியோதனன் மாமனை மார்புறத் தழுவி, 'மாமா! உங்கள் அறிவின் திறம் யாருக்கும் வராது. ஆ! எத்தனை கூர்மையான மதிநலம்? என்னை வாழ வைக்கவே நீங்கள் அவதரித்தீர்கள். எவ்வளவுதான் படித்தீரோ! தங்களைப் போலப் பலர் இருந்தால் தான் நாடும் நகரும் முன்னேற்றமடையும். பீமன் மாண்டான் என்றே மதிக்கின்றேன்'' என்று கூறிப் புகழ்ந்து பாராட்டினான்.

பாம்பு பிடிக்கின்ற பிடாரர்களை அழைத்து, நிரம்பப் பொருள் கொடுத்துக் கொடிய நாகங்களைக் கூடைகளில் அடைத்து, ஆயத்தஞ் செய்து கொண்டான். ஒருநாள் எல்லாரையும் அழைத்துக் கொண்டுபோய் ஆற்றில் விளையாடினான். போனகங்களைத் தருவித்து வயிறார உண்பித்தான். நதிக்கரையில் உள்ள விடுதியில் படுத்தார்கள். துரியோதனன், 'பீமா! நீ கையுங் காலும் எடுத்து எங்கள் மேலே தூக்கத்தில் போடுகின்றாய். இந்தத் தனி அறையில் படுத்துக்கொள்.' என்றான். பீமன் அன்று உருண்டு நதியில் விழுந்து விட்டோமே அறையில் படுத்தால் இந்தச் சுவருக்கும் அந்தச் சுவருக்கும் இடையில் தானே உருளுவோம், இதுவும் ஒரு நன்மைக்கே என்று தனக்குள் நினைத்துக் கொண்டான். "நல்லது'' என்று கூறிவிட்டு, அத்தனி அறையில்போய்த்திருஐந்தெழுத்தை ஓதிக்கொண்டே தூங்கிவிட்டான். நடுஇரவில் துரியோதனன் ஒவ்வொரு கூடையாக எடுத்துச் சாளரத்தின்வழியே ஒவ்வொரு நாகமாக விட்டான். பசியுடன் அடைபட்டிருந்த நாகங்கள் சென்று வாய் பிளந்து அவனைக் கடித்தன. அவனுடைய கடினமான தோலில் பாம்பின் பல் இறங்கவில்லை. அயர்ந்து உறங்குகின்ற பீமன் மூட்டைப் பூச்சிகள் கடிக்கின்றன என்று கருதித் தூங்கிய வண்ணமே; ஒவ்வொரு நாகத்தையும்தட்டித்தட்டிக் கசக்கி எறிந்தான். அவன் விடுத்த பாம்புகள் எல்லாவற்றையும் நசுக்கி விட்டான். சுகமாகத் தூங்கினான். வெளியே துரியோதனன், "மாமா! ஒரு பாம்பு கடித்தாலேயே உயிர் போகும், ஆயிரம் பாம்புகள் கடித்தால் பிழைப்பானா? பீமன் இனி பிழைக்கமாட்டான். நம்மைப் பிடித்த சனி இன்றுடன்தொலைந்தது. நாம் நம் அறிவினால் முன்னேறுகின்றோம். மாமா ஒரு சந்தேகம். விட்ட பாம்பு ஒன்றுகூட வெளியேறவில்லையே'' என்று கேட்டான். சகுனி, "மருமகனே! பீமன் மாண்டு வெகு நேரம் ஆகியிருக்கும். நாகங்கள் கடித்துக் கொண்டேயிருக்கும்'' என்றான்.

விடியற் காலையில் பீமன் சிவநாமத்தைக் கூறிக்கொண்டே கண் விழித்தான். நான்கு திக்குகளிலும் அரவங்கள் உருவம் தெரியாமல் கசங்கிக் கிடப்பதைக் கண்டான். "ஓ! இரவு இந்த அரவங்கள் தான் நம்மைக் கடித்தன போலும், மூட்டைப் பூச்சிகள் என்று நினைத்தேன், அருகில் இருந்த புற்றுக்களில் இருந்து வந்தனபோலும். கூடத்திலே சென்று நம் துணைவர்களான தருமர் முதலியோரையும், துரியோதனன் முதலியோரையும் கடித்திருந்தால், பாவம் அவர்கள் மாண்டிருப்பார்கள். விதி கிழிந்த பாம்புகள் என்னை வந்து கடித்து மாண்டொழிந்தன. இதை வெளியே சொன்னால் நூற்றுக்கணக்கான நாகங்கள் கடித்தும் இவன் தூங்கினான் என்று, நம்மைக் கேலி செய்வார்கள். ஆதலால் இதை வெளிப்படுத்தக்கூடாது'' என்று எண்ணி வெளிப்பட்டான். தூங்கிக் கொண்டிருந்த துரியோதனன் முதலியோரை எழுப்பி "வாருங்கள் நதியில் நீராடலாம்'' என்றான். எழுந்த துரியோதனன் பீமனைக் கண்டு அதிசயித்தான். மெல்ல அந்த அறையைப் போய் எட்டிப் பார்த்தான். தான் வெகு சிரமப்பட்டுச் சேகரித்து விட்ட நாக இனங்கள் நசுங்கிக் கிடப்பதைக் கண்டான். "மாமா! தூக்கத்தில் இக்கொடிய பாம்புகளைக் கசக்கிய பீமன் போரில் எங்களைப் பாம்புகளைப்போல் கசக்கி எறிவானே'' என்றான். "மாப்பிள்ளை அதில் என்ன சந்தேகம்''. "உணவில் நஞ்சைக் கலந்து கொடு அவன் இறப்பான்'' என்று கூறினான்.

துரியோதனன் அதுபடியே சமையல் காரனைத் தன் வசமாக்கிக் கொண்டு, பீமனின் உணவில் கொடிய நஞ்சைக் கலந்து புசிக்கச் செய்தான். பீமன் அதனை யுண்டான். அள வற்ற அந்த நஞ்சு ஜீரணம் ஆயிற்று. அவனை ஒன்றும் செய்யவில்லை.

மற்றொருசமயம் துரியோதனன் சகுனியின் ஆலோசனையைக் கேட்டு ஆயிரம் கூர்மையான வசிகளைத் தயார் செய்து நதியில் நடச் செய்தான். பீமனுடன் சென்று சேர்ந்து நதியில் விளையாடினான். பீமா! இங்கே வா. நீ பெரிய சமர்த்தன் என்கிறாயே, அதோ தெரிகின்ற கரிய அலையுள்ள இடத்தில் நீ குதிக்க முடியுமா? அப்படி குதித்தால் உன்னை வீரன் என்று நான் கொண்டாடுவேன்'' என்றான்

பீமன் சிரித்து "அங்கேயும் குதிப்பேன், அதற்கு அப்பாலும் குதிப்பேன்" என்று கூறி விட்டு, பின்னே சிறிது தூரம்போய் வேகமாக ஓடி வந்து, குறித்த இடத்தில் பாய்ந்து குதிக்க முயன்ருன். இறைவன் அருளால் அந்த இடத்தில் வண்டுகள் சூழ்ந்து ஒலிப்பதைக் கண்டான். உயிர்களிடத்தில் ஒப்பற்ற கருணை யுள்ள பீமன் அங்கு வண்டுகட்கு ஏதோ உணவு இருக்கக்கூடும், அங்குக் குதித்தால் வண்டுகளுக்கு இடையூருகும், என்று கருதி வேகத்தைக்கூட்டி, அதற்கு அப்பால் போய்க் குதித்தான். நீந்தி வரும்போது உற்றுப்பார்த் தான். தண்ணீரின் கீழே நிரம்ப வசிகள் இருப்பதைக் கண்டான். யாரோ இப்படி ஏதற்காகவோ நாட்டியுள்ளார்கள் என்று கருதினன். அப்போதும் அவன் மனதில் துரியோதனன் மீது சந்தேகம் ஏற்படவில்லை.

திருதராட்டிரனுக்கு வைசியப் பெண்ணிடம் பிறந்த யுயுத்சு என்பவன், ஒருநாள் தருமரைச் சந்தித்து 'துரியோதனன் பீமனைக் கொல்லு தற்குப்பல வழியில் முயல்கிருன். எச்சரிக்கை யாக இருக்க வேண்டும்' என்று கூறினன். தருமர் துரியோதனனுடைய கொடுமைகளை அறிந்தும், அதனை வெளிக் காட்டாமல் இருந் தார். விதுரரும் இதனை அறிந்து பாண்டவர் களைக் காப்பாற்றுவதில் எச்சரிக்கையாக இருந்தார்.

துரியோதனன் பீமனை நினைத்து அச்சத் தால் உறக்கம் இன்றிக் கவன்ருன். இவனை இனி எப்படிக் கொல்வது? என்று சிந்தித் தான். சகுனி கர்ணனுடன் ஆலோசித்தான். கங்கை கடலுடன் கூடுகின்ற பிரமாணகோடி என்ற இடத்தில் ஒரு விழா நிகழலுற்றது. துரியோதனன் பாண்டவர்களுடன் அங்குச் சென்று கூடாரங்கள் அமைக்கச் செய்து, ஆடியும் பாடியும் மகிழ்ச்சியாக இருந்தான். பீமன் பெருமகிழ்ச்சிடன் அங்கு விளையாடி ஞன். மரங்களைக் காலால் தட்டி வீழ்த்தியும், குன்றுகளைப் பந்துபோல் உருட்டியும், கடலில் குதித்துக் கரை சேர்வதுமாக ஆடல் புரிந் தான்.

இரவில் பீமன் உண்ணும் உணவில், காள கூட நாகத்தின் விடத்தைத் துரியோதனன் இட்டான். அதனுல் மயங்கிய பீமனைச் சங்கிலி களால் கட்டிக் கடலில் எறிந்தான். தற்செய லாக நாகவுலகுக்குப் போகும் வழியுள்ள இடத் தில் பீமன் விழுந்தான். உருண்டுபோய் நாக லோகத்தில் விழுந்தான். அவனைக் கண்ட கூரிய பற்களையுடைய நாகங்கள் சீறிக் கடித்தன. அப்பற்கள் பதிந்த வழியே முன் உடம்பில் புகுந்திருந்த நஞ்சு வெளிப்பட்டது. அதனுல் மயக்கந் தெளிந்த பீமன், கண் விழித்துப் பார்த்தான். இது என்ன உலகம்? என்று சிந்தித்தான். மீளவும் தன்னைக் கடிக்க வந்த நாகங்களை அடித்தான். அடிபட்ட நாகங்கள் அஞ்சி, வாசுகி என்ற நாகராஜ னிடம் ஓடி வணங்கிக் கூறுவார்கள்.

"அரசே! பூவுலகிலிருந்து ஒருவன் வந்து நம் உலகில் விழுந்தான். அவனை நாங்கள் கடித்தோம். எங்கள் நஞ்சால் மாள்வதற்கு மாருக, மயங்கியிருந்த அவன் உணர்வு பெற்று எழுந்து எங்களை அடிக்கிருன். அவன் ஆற்றல் அளவிட முடியாதது" என்ருர்கள். பீமன் தன்னைக் கட்டியுள்ள சங்கிலிகளை அறுத்தான்.

வாசுகி அரவங்கள் பின்தொடரச் சென்று பீமனைப் பார்த்தான். அங்கு ஆர்யகன் என்ற நாகன் வாசுகியைப் பார்த்து, "வேந்தே! இவன் பீமன் என்ற பெயருள்ள உத்தமன். என்மகள் வயிற்றுப் பேரன் சூரசேனன். அச் சூரசேனனுடைய மகள் குந்தி. அவளுடைய மகன் இவன். எனவே என்பேரனுக்குப்பேரன். இவனுக்குப் பொன்னும் மணியும் தந்தால் மிகுந்த பயன் விளையாது. நாம் சேமித்து வைத்துள்ள வலிமையைத் தரும் அமுதம் போன்ற ரசத்தைஇவனுக்குக் கொடும்"என்று கூறிவிட்டு, பீமனைத் தழுவி அன்பு செய்தான். வாசுகியும் அப்படியே அந்த ரசத்தைத்தரு மாறு கட்டளையிட்டான். நச்சுணவையுண்டு வேகமும் தாகமும் கொண்டிருந்த பீமன், கீழ்த்திசையை நோக்கி அமர்ந்து, ஒரே மூச்சில் எட்டுக் குடங்களையும் குடித்தான். அது ஒரு குடத்துக்கு ஆயிரம் யானை பலம் தரக்கூடியது. அதனுல் பீமன் எண்ணுயிரம் யானை பலத்தைப் பெற்ருன். சற்று மயங்கிய பீமனை நல்ல படுக்கையில் படுக்க வைத் தார்கள். அவன் அயர்ந்து அங்கே எட்டுநாள் தூங்கினன்.

(தொடரும்)

# செய்திச் சுருக்கம்

**சென்னை நகரக் கோயில் அறங்காவலர்கள் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் :** புதிய ஆணையாளராகப் பதவி ஏற்றுள்ள திரு. ரா.இராமசுப்ரமணியம் B.SC., B.L. அவர்களை வரவேற்றுப் பாராட்டும் முறையில், சென்னை தாசப்பிரகாஷ் விடுதியில், சங்கத் தலைவர் திரு. மணலி. இராமகிருஷ்ண முதலியார் B.A. அவர்கள் தலைமையில் 14—6—69 அன்று மிகவும் சிறப்புற நடைபெற்றது. சங்கச் செயலாளர் திரு. எஸ். சூரிய நாராயண பிள்ளை, அனைவர்க்கும் வரவேற்புரை நிகழ்த்தினர். திரு மயிலைக் கபாலீசுவரர் கோயில் அறங்காவலர் திரு.அய்யா சுப்ரமணிய முதலியார் அவர்கள், புதிய ஆணையாளருக்குக் கூட்டத்திற்கு வந்திருந்த அறங்காவலர்கள் அனைவரையும் தனித்தனியே அறிமுகம் செய்து வைத்தார். முன்னாள் மேயர் திரு கே. கமலக்கண்ணன், திரு, பி. இ. இராகவலு செட்டியார் ஆகியோர், சொற்பொழிவாற்றினர். புதிய ஆணையர் அவர்கள் தக்க இனிய அன்புரைகள் கூறி, அனைவரையும் மகிழ்வித்தார்கள். திரு. வே. அ. பாலகிருஷ்ணன் J. P. அவர்கள், நிகழ்த்திய நன்றியுடன் கூட்டம் இனிது நிறைவுற்றது.

—ஆசிரியர்.

**மறைமலை அடிகளார் சிலைத் திறப்பு விழா :** நாகப்பட்டினத்தில், நாகைப் புகைவண்டி நிலையவழி மணிக்கூட்டின் கீழ்ப்புறத்தில், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில், 19—6—69 வியாழனன்று, தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் மறைமலைஅடிகளாரின் முழுஉருவ வெண்கலச் சிலையைத் திறந்துவைத்தார்கள். முத்தமிழ்க்காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், 'மறைமலை அடிகளார் நினைவு மலரை' வெளியிட்டார்கள். அன்று மாலை நாவலர் இரா. நெடுஞ்செழியன் M.A., M.L.A அவர்கள், மறைமலை அடிகளார் கோட்பாட்டுக் கல்வெட்டுத் திறப்பு நிகழ்த்தினர்கள். அதனை அடுத்து நிகழ்ந்த கோட்பாட்டுக் கருத்தரங்கில், திரு. வி. பார்த்தசாரதி A.E.M.U.T. அவர்கள், நாவலர் இரா. நெடுஞ்செழியன் M.A.,M.L.A., தவத்திரு குன்றக்குடி அடிகளார், வியத்தகை ஜி.டி. நாயுடு M.I.S.E., முதுபெரும் புலவர் அவ்வை சு. துரைசாமி, சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் M.L.A. ஆகியோர், கலந்துகொண்டு சிறப்பித்தனர். விழா மிகவும் சிறப்புற நடைபெற்றது.

—ஆசிரியர்.

**திருமண மண்டபத் திறப்புவிழா :** திருவாரூர்த் தியாகராசசுவாமி திருக்கோயில் அபிடேகக் கட்டளை நிதியிலிருந்து கட்டப்பெற்ற "திருவாரூரான் திருமண மண்டபத்தைத்" தமிழ்நாடு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு கே. வி. சுப்பையா, B.A., அவர்கள் தலைமையில், முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்கள். விழாவில் அறநிலைய ஆணையர் திருமிகு. ரா. இராமசுப்பிரமணியம் B.SC.,B.L. அவர்களும், தஞ்சைத் துணை ஆணையர் திருமிகு. டி. என். சிங்காரவேலு B.A.B.L., அவர்களும், கலந்துகொண்டு சிறப்பித்தனர். நிர்வாக அதிகாரி திரு. பி. அருணாசலம் B.A.B.L. அவர்கள், நன்றியுரை நவின்றார்கள்.

—ஆசிரியர்.

**திருக்குறள் வகுப்புத் துவக்க விழா :** திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொநதமான திருவாரூர்க் கமலாலயத்தின் வடகரையிலுள்ள கட்டிடத் திறப்பு விழாவும், திருக்குறள் வகுப்புத் துவக்க விழாவும், தமிழ்நாடு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு கே. வி. சுப்பையா, B. A. அவர்கள் தலைமையில், நிகழ்ந்தது. முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கட்டிடத்தைத் திறந்து வைத்து, திருக்குறள் வகுப்பைத் துவக்கி வைத்தார்கள். விழாவிற்குப் பெருந்திரளான மக்கள் வந்து சிறப்பித்தனர்.

—ஆசிரியர்.

# ஞானமும் நந்தியும்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள் (பாலகவி),
தேவகோட்டை.

அநாதி நித்தியப் பொருள்களாகிய பதி, பசு, பாசம் என்னும் மூன்றனுள், பதியும் பசுவும் ஞான முடைய பொருள்கள். பாசம் ஞானமில்லாதது. பதியினது ஞானம் எந் நாளினும் எக்காரணம் பற்றியும் ஏற்றத் தாழ்வுகளை எய்தாததாய், வேறு எந்த உதவியையும் வேண்டாது, தானே விளங்கி நிற்கும் இயல்பையுடையதாய்ச், சிவபெரு மானது சத்தி வடிவமாய்த் திகழ்ந்து, உயிர்களுக்கு உதவி புரியும். பசுக்களின் ஞானம் இயல்பாகவே அமைந்த ஏற்றத் தாழ்வுகளை உடையதாய், வேறு உதவி யின்றி விளங்கி நிற்கும் இயல்பில்லாத தாய், ஆணவமலத்தால் தகையப்பட்ட சிறுமையையுடையதாய் இருக்கும்.

உயிர்கள், மலத்துடன் கூடியிருக் கும் நிலையைப் "பெத்தநிலை" என்றும், சிவத்துடன் கூடியிருக்கும் நிலையைச் "சுத்தநிலை" என்றும் சொல்வார்கள். இந்த இரண்டு நிலைகளிலுமே "உயிரறிவு" கட்டுப்பாட்டை உடையது தான். உயிர், மலத்துடன் கட்டுப்பாட்டிருக்கும் பொழுது மலத்தின் குணமே அதன் குணமாய் அமைய, அறவே விளக்கமின்மை, சிறிது விளக்கமுடைமை ஆகிய இரண்டு தன் மைகளை உடையதாய், அதன் அறிவு இருக்கும்.

முதலிற் கூறப்பெற்றதாகிய அறவே விளக்கமின்மை என்பது; ஆணவமலம் ஒன்றில் மட்டும் கட்டுடபட்டுக் கிடந்த கேவல காலத்திலும், இரண்டாவதாகக் கூறப்பெற்ற சிறிது விளக்கமுடைமை என்பது, அவ்வாணவ மலத்துடன் கன்ம மாயா மலங்களும் உடனுகை இருக்கின்ற சகல காலத்திலும், அமைவனவாகும்.

" மாயைமா மாயை மாயா
வருமிரு வினையின் வாய்மை
ஆயவா றுயிரின் மேவும்
மருள்எனில் இருளாய் நிற்கும்;
மாயைமா மாயை மாயா
வருமிரு வினையின் வாய்மை
ஆயவா றுயிரின் மேவும்
அருள்எனில் ஒளியாய் நிற்கும்

என்பது சிவப்பிரகாசம்.

மலத்துடன் சேர்ந்திருக்கும் வேளையில் அதன் குணமான இருள் மயமாகவும், சிவத் துடன் சேர்ந்திருக்கும் வேளையில் அதன் குணமான ஒளிமயமாகவும் ஆகித், தனக் கென ஒரு வண்ணமுமில்லாத பளிங்கைப் போல நிற்பது உயிரின் இயல்பு என்பதை, இந்த சிவப்பிரகாசத் திருவிருத்தம் தெளிவு செய்கின்றது. அநாதியே பற்றிப் பிணித் துள்ள ஆணவமலத்தின் தொடர்பினல் விளக்கமின்றி இருளமயமாயிருந்த உயிர றிவு, கருணைக் கடலாகிய சிவபெருமான பேரிரக்கம் வைத்து வழங்கிய தனு கரண புவன போகங்களாகிய தத்துவ தாத்து விகப் பேற்றினல், சிறிதளவு விளக்கத்தை அடையும். அந்த விளக்கம் பூரணமான தாக நிகழாமையால், எந்தப் பொருளையும் மயக்கறக் காணும் வாய்ப்பை, உயிர் அப் போது பெறுவதில்லை. பின்னர், மல மாயா கன்மங்களின் தொடர்பு அறவே நீங்கி, இறைவன் தொடர்பு ஒன்றே உடை யதாக உயிர நிலைபெறுகின்ற வேளையில்

தான், அதன் முழு அறிவும் விளக்கம் பெற்றொளிரும்.

இருளில் அகப்பட்டு ஏதும் அறியாமல் கிடந்த உயிருக்கு உடம்பு, உலகம் ஆதிய வற்றை வழங்கி உதவியவன் இறைவனே, என்பதை நாம் நன்ருகத் தெளிந்து கொள் ளுதல் வேண்டும். முதலில், உடம்பு உலகம் ஆதியவற்றுடன் உயிருக்கு எப் படித் தொடர்பு உண்டாகியது என்பது சிந்தித்தற்குரியது. உடம்பு உலகமாகி யவை, அறிவற்ற நிலைத்திணைப் பொருள் களாதலின், அவைதாமே தொழிற்பட்டு வந்து உயிருடன் கூடுவதற்கு இடமில்லை. உயிர் அறிவுடையதாதலின், அது தன் முயற்சியில் உடம்பு உலகங்களை அடைந் திருக்கக் கூடுமென்ருல், முதலாவதாக உடம்பு உலகங்களை உயிர் பெற்ற வேளை யில் அது இருள் வயப்பட்டு அறிவற்ற நிலைத்திணைப் பொருள் போலவே இருந்த தாகலின், அவ்வாறு சொல்லவும் முடிய வில்லை. இந்த நிலையில் கொள்ள வேண் டியதாயிருக்கிற ஒரே முடிவு: அறிவிழந்து நின்ற உயிருடன், அறிவற்றனவாகிய உடம்பு உலகமாதியவற்றைப் பேரறிவுப் பிழம்பாக விளங்கும் இறைவனே கூட்டி வைத்துள்ளான் என்பதே யாகும்.

இங்ஙனம் கருணைகொண்டு ஒருவாறு விளங்கும்படி உதவிய ஆண்டவனே முழுதும் விளங்கும்படி அருள்புரிய வேண்டுமேயன்றி, அதுபற்றி உயிர்கள் எடுத்துக்கொள்ளும் எந்த முயற்சியும் எள்ளளவு பயனைக் கூடத் தரமாட்டாது என்பதை, ஊன்றிச் சிந்திப்பவர்கள் உறு தியாக உணருவார்கள். கடவுள் நாட்ட முடைய மேன்மக்களை இரண்டு பெரும் பிரிவுகளில் அடக்கிக் காணலாம். ஒரு சாரார், உலக வாழ்விற் பெறத்தக்கன வாகிய போக போக்கியங்களுக்கு முதலி டம் கொடுத்துப் பேரின்பப் பேற்றுக்கு இரண்டாமிடத்தைக் கொடுப்பவர். மற்றொரு சாரார், போக போக்கியங்களை நுகரும் உலகவாழ்வில் தலைப்பட்டிருந் தாலும், நிலையான பேரின்பப் பேற்றிலேயே கண்ணுங்கருத்துமாய் இருப்பவர். கட வுளை நினைப்பதும், வழிபடுவதும் ஆதியன உலகவாழ்வு நலத்தை மட்டும் குறிக் கோளாகக் கொண்டு நிகழுமாயின், அதனைச் செய்பவர்கள் உயர்ந்தவர் களென்று மதிக்கப்படமாட்டார்கள். காமிய வழிபாடாகிய இது, உயர்ந்தோர்களால் மதிக்கப் பெருததும் விரும்பப் பெருதது மாகும். நிலையில்லாத இந்த உலகத்தில் இருந்து கொண்டே, நிலையான பேரின் பத்தை அடைய வேண்டு மென்னும் குறிக் கோளுடையதாய், நிஷ்காமிய வழிபாட்டை உண்மை ஞானியர் மேற்கொள்ளுவர்.

பொருள்களின் நிலையின்மையையும் நிலையுண்மையையும் தெளிந்து கொள்ளு வதற்கு. நூல்களால் நாம் பெற்றிருக்கிற செயற்கை யறிவும், மலமாயா கன்மங்களா கிய பாசங்களின் சேர்க்கையால் விளக்கம் பெருமலிருக்கிற நமது இயற்கையறிவும், நமக்கு எப்போதும் துணை செய்வனவாகா. இவையிரண்டையும் பாசஞானம், பசுஞா னம் என்று சொல்லி, உண்மைப் பொருளை அறிவதற்கு இந்த இருவகை ஞானங்களும் உதவமாட்டா என்று, நமது ஞான நூல் கள் இவற்றை ஒதுக்கி விடுகின்றன. இவற்றிற்கு மேலே பதிஞானம் என்று சொல்லப் பெறுகின்ற திருவருளுணர்வு ஒன்று தான், பொருளியல்பை உள்ளவாறு அறிவிக்கும் கருவி என்பதை, அந்த நூல் கள் வலியுறுத்திக் கூறுகின்றன. சிறந்த தாயிருக்கிற சிவஞானத்தைப் பெற்ரு லன்றி, நிலையான முத்திப்பேற்றைப் பெற முடியாது என்பதை உணர்ந்து, நமது ஆன்ருேர்கள் அந்த ஞான நாட்டத்தி லேயே ஈடுபாடு கொண்டிருந்தார்கள். திரு மூலதேவ நாயஞர், தமது திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்து முப்பதாவது திருப்பாடலில், இந்தக் குறிப்பை அழகு பெற உணர்த்தியருளினர். அது,

"வானின் றழைக்கும் மழைபோல் இறைவனும்
தானின் றழைக்குங்கொல் என்று தயங்குவார்
ஆனின் றழைக்கும் அதுபோல்என் நந்தியை
நானின் றழைப்பது ஞானம் கருதியே"

என்பதாகும்.

இறைவனது நியதிக்குட்பட்டு, உயிர் களுக்கு வேண்டிய நலங்களை யெல்லாம், நிலம், நீர் முதலிய தத்துவப் பொருள்கள் உதவிக் கொண்டிருக்கின்றன, எல்லாப்

பொருள்களின்உதவிகளும் உயிர்களுக்கு இன்றியமையாதனவே யாயினும், மேகம் செய்கிற உதவியை மட்டும் மிகமேலான தென்று யாவரும் பாராட்டி வருவர். "கந்தம்மை ஆளுடையாள், தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே, என்னப் பொழியாய் மழை ஏலோர் எம்பாவாய்" என்பது திருவாசகம். இதில் மழைப்பெயலைத்திருவருள் வெள்ளத்துக்கு ஒப்பிடுவது கொண்டு, அதற்குள்ள சிறப்பு ஒருவாறு விளங்கும்.

மழையை வழங்கும் வேளையில் இடி, மின்னல் முதலியவற்ருல் முன்னறிவிப்புக் கொடுத்துப், பின்னரே வழங்கத் தொடங்குகிறது. இந்த எச்சரிக்கை "மழைநீர் உரிய வகைகளில் பயன்படுவதற்கு நிலத்தைச் செம்மைப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்" என்று உழவர் முதலியவர்களுக்கு விடுவதாக அமைந்திருக்கிறது. வானத்திலேயுள்ள மேகம், இப்படி அழைத்து மழையை வழங்குவதுபோல, இறைவனும் உயிர்களை அழைத்துத் தனது அருள் வெள்ளத்தை வழங்குவானே என்று, பலர் மயங்கிக் கொண்டிருக்கிருர்கள் அல்லவா? இதனையே "வானின்றழைக்கும் மழைபோல் இறைவனும் தானின்றழைக்குங்கொல் என்று தயங்குவார்" என்று, ஆசிரியர் முதற்கண் கூறியருளினுர்.

அங்ஙனம் தயங்குவதற்கு இடமேது? மேகம் சிலவேளைகளில் மட்டும் தான் நம்மை அழைத்துப் பயனை வழங்கும். சிவபெருமானே, எந்த வேளையிலும் இடையீடின்றி அருள் வெள்ளத்தை வாரி வாரி வழங்கிக் கொண்டேயிருக்கிருர். எவ்வளவு மழை பெய்தாலும், மேட்டுப் பகுதியில் பெய்த மறுவினாடியிலேயே மழைப்பெயற் சுவடு மாறி விடுவது போல, எத்தனை தான் இறைவன் அருள் வெள்ளத்தை வாரிவாரி வழங்கிக் கொண்டேயிருந்தாலும், அபக்குவர்களாகிய உயிர்கள் இத்த அருட்பெயற் சுவடு கூட அமையாதவர்களாய் ஆகிவிடுகின்ருர்கள்.

பக்குவர்களாயிருக்கிற அருளாளர்கள், பாலூட்டும் நேரம் அறிந்து கன்றை நினைத்து அழைக்கும் பசுவைப்போலச், சிவஞானத்தை வழங்கும் நேரத்தையறிந்து சிவபெருமான் அழைப்பதை எதிர்நோக்கி இருப்பார்கள். பசு அன்புடன் அழைக்கும் வேளையில் அவ்வழைப் பொலியை எதிர் பார்த்திருக்கும் கன்று, தானும் அழைத்துக்கொண்டு சென்று பசுவை அடைந்து பாலைக் குடித்து மகிழ்கிறதல்லவா? சிவ ஞானிகளும் அவ்வாறே திருவருளை வழங்கச் சிவபெருமான் எப்பொழுது அழைப்பானென்று எதிர்நோக்கி இருப்பார்கள். அவர் அழைப்பு வந்தவுடன் இவர்களும் எதிரழைப்புடன் சென்றுகூடி இன்புறுவர். "நாதனுகிய தன்னையும் என்னையும் நல்கும் போதனுகிய குருபரன் அடைவது எப்பொழுதால்;' என்று மாணிக்கவாசக சுவாமிகள் எதிர் நோக்கியிருந்து அருளாரமுதத்தை வாரி வாரி விழுங்கினுர்கள். நான், நந்தியாகிய ஞானத்தலைவனை, அழிந்து போகின்ற எதையும் பெறுவதற்கு அழைக்காமல்; நிலையான சிவஞானத்தைப் பெறுவதற்கு அழைக்கின்றேன் என்று, பாடலின் பிற்பகுதியில் ஆசிரியர் இதனைத் தெளிவு செய்துள்ளார். *

---

## செய்திச் சுருக்கம்

**குடியிருப்பு இல்லங்கள், கடைகள் திறப்பு விழா :** *திருத்தணிகைச் சுப்பிரமணிய சுவாமி கோயிலின் சார்பில் கட்டப் பெற்ற குடியிருப்பு இல்லங்களையும், கடைகளையும், திரு. சா. கணேசன் M.L.C. அவர்கள் தலைமையில், அறநிலைய ஆணையர் திரு. ஆர். இராமசுப்பிரமணியம் B.SC., B.L., அவர்கள், 21—6—69 காலை திறந்து வைத்தார்கள். சென்னைத் துணை ஆணையர் திரு. கே. இராஜா, B.A.B.L. அவர்கள் விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.*

—ஆசிரியர்.

# "தோட்டிமை யுடைய தொண்டர்"

(திரு கே. எம். வேங்கடராமையா, எம். ஏ., திருப்பனந்தாள்)

**திருத்தொண்டர் சிறப்பு :** இறைவன் தொண்டர் உள்ளத்து அடக்கம். ஆகவே 'தொண்டர் தம் பெருமையைச் சொல்லலும் அரிதே' என்று கூறினர் ஔவையார். 'மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான் வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத்தகத்தான்' என்று அப்பரும் தொண்டர்களிடத்து இறைவன் வீற்றிருப்பதை அருளா நிற்பர்.

இத்தொண்டர் சிறப்பைச் சேக்கிழார் திருக்கூட்டச் சிறப்பு என்ற தலைப்பில் பெரிய புராணத்தில் சிறிது விரிவாகவே பாடியுள்ளார் :— 'அடியவர் தம் மேனிமேல் திருநீறு பூசியிருப்பர்; தாம் பூசும் நீறுபோல் உள்ளமும் தூய்மை யுடையவராக இருப்பர்; பூதம் ஐந்தும் நிலைதடுமாறினும் இறைவன் மலர்த்தாளை மறக்க மாட்டார்கள்; கெடுதி வரின் அதற்காக மனம் கலங்குதலோ, நன்மைவரின் அதற்காக மகிழ்தலோ இலர்; ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் இயல்பினர்; அடியார்களைக் கண்டால் அன்பு மீக்கூர்ந்து வணங்குதலில் விருப்பம் உடையவர்; கண்டிகையை ஆரமாகக் கொண்டவர்; கந்தையையும் மிகையாகவே கருதுபவர், யாவர் மாட்டும் அன்பு பூண்டு விளங்குவர்; அடியார்களுக்கு ஊறு வந்தவிடத்து அஞ்சாமை உடையராய் வீரத்துடன் அவர்களைக் காக்கும் இயல்பினர் ஆவர்'— என்பன சேக்கிழார் தொண்டர்களைப் பற்றி அங்குக் கூறியன வாகும்.

" பெருமையால் தம்மை யொப்பார் ;
பேணலால் எம்மைப் பெற்றார் ;
ஒருமையால் உலகை வெல்வார் ;
ஊனமேல் ஒன்றும் இல்லார் ;
அருமையாம் நிலையில் நின்றார் ;
அன்பினால் இன்பம் ஆர்வார் ;
இருமையும் கடந்து நின்றார் ;

என்று கூறப்பெற்றுள்ளது. பத்தராய்ப் பணிவார் புராணத்தில், அடியார்கள் இடையறாத சிவசிந்தனை உடையவர் என்பதை,

" நின்றாலும் இருந்தாலும்
கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும்
விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடு மலர்ப்பாதம்
ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார்,
தொண்டராம் குணமிக்கார் "

என்று சேக்கிழார் பாடியுள்ளார்.

**தோட்டிமையுடைய தொண்டர் :—** இத்திருத்தொண்டர்களைத் திருநாவுக்கரசு சுவாமிகள் 'தோட்டிமையுடைய தொண்டர்' என்று பின் வரும் திருவாரூர்த் திருநேரிசைப் பாடலில் கூறுவர் :

" தொழுதகம் குழைய மேவித்
தோட்டிமை யுடைய தொண்டர்
அழுதகம் புகுந்து நின்றார்
அவரவர் போலும் ஆரூர்
எழிலகை நடுவண் முத்தம்
அன்றியும் ஏர்கொள் வேலிப்
பொழிலகம் விளங்கு திங்கட்
புதுமுகிழ் சூடினாரே "

**தோட்டிமை - தொட்டிமை ;—** தோட்டிமை என்ற சொல்லைத் தொட்டிமை என்று கொண்டவரும் உண்டு. தொட்டிமை என்ற சொல் சீவக சிந்தாமணியில் பின்வரும் இடங்களில் பயின்றுள்ளது.

" தண்ணுமை முழவம் வீணை
குழலொடு குயிலத் தண்பூங்
கண்ணொடு புருவம் கைகால்
கலையல்குல் நுசுப்புக் காமர்
ஒண்ணுதல் கொண்ட ஆடல்
தொட்டிமை யுருவம் நோக்கி
வெண்ணெய்தீ உற்ற வண்ணம்
ஆடவர் மெலிகின் றாரே "

*" பட்டவாள் நுதலி ளுய்க்குப்*
*பாடுவல் காமன் தந்த*
*தொட்டிமை யுடைய லூணச்*
*செவிச்சுவை யமிழ்தம் என்றூர்"*

*" வட்டிகைப் பாவை நோக்கி*
*மகிழ்ந்திருந் திலிரோ என்னுத்*
*தொட்டிமை யுருவந் தோன்றச்*
*சுவரையே பொருந்தி நின்ருய்"*

பெருங்கதையிலும் 'தொட்டிமை கலந்த' (1—50—8) என்றவிடத்து, இச்சொல் பயின்றுள்ளது. சீவகசிந்தாமணிக்கு உரை வகுத்த நச்சினுர்க்கினியர் 'தொட்டிமை' என்ற சொல்லுக்கு 'ஒற்றுமை' என்று பொருள் எழுதியுள்ளார். சூடாமணி நிகண்டிலும் 'ஒருமை தொட்டிமை குறிப்பொ டொற்றுமை' என்று காணப்படுகின்றது.

**படைப்புச்சொல்:** 'தோட்டிமை' என்பதைத் 'தொட்டிமை' என்று கொள்ள வேண்டியதில்லை என்று தோன்றுகின்றது. தோட்டிமை என்ற சொல் திருநாவுக்கரசு சுவாமிகளின் அரிய படைப்பு. மூவர் தேவாரத்தில் இங்ஙனம் புதிய படைப்புச் சொற்களைக் காணலாம். 'வேதியன் மாதிமையால் விரும்பும்மிடம் வெண்டுறையே' என்ற விடத்து, மாதிமை என்ற சொல்லைக் 'காதல்—ஆசை' என்ற பொருளில் ஞானசம்பந்தர் பயன்படுத்தியுள்ளார். 'ஊர்பலி இச்சை கொண்டுண்பது மாதிமையோ உரையே' என்பது அப்பர் தேவாரம். 'மறியேறு கரதலத்தீர் மாதிமையோ உடையீர்' என்பது சுந்தரர் செந்தமிழ்.

'திருதிமையால் ஐவரையும் காவல் ஏவி' என்ற திருத்தாண்டகத்தில் 'திருதிமை' என்ற சொல் பயில்கிறது. அது 'மனவுறுதி' என்று பொருள்படும்.

'வாய்த்தது' என்ற கோயில் திருவிருத்தத்தில் 'கூத்தனுக்கு ஆட்பட்டிருப்பதன்றே நம் தம் கூழைமையே' என்ற இடத்துக் கூழைமை என்ற சொல் பயின்றுள்ளது. அது 'குழைந்த தன்மை' என்று பொருள்படும். கூழை-பின்னிற்றல் என்றுமாம்.

**சொற்பொருள்:** 'தோட்டி' என்பது யானையை அடக்குவதற்கு யானைப்பாகர் கையகத்திருக்கும் சிறு ஆயுதம் என்பது யாவரும் அறிந்ததே. அதனை 'அங்குசம்' என்றும் கூறுவதுண்டு. தோட்டி அல்லது அங்குசம் யானையை அடக்குவதற்குப் பயன்படுவது. எனவே, யானையை அடக்குவதே 'தோட்டியின் தன்மை' ஆகும். தோட்டியின் தன்மை என்பதே 'தோட்டிமை' எனப்பட்டது. ஐம்புலன் - யானை.

மெய்வாய் கண் மூக்குச் செவி என்பன ஐம்பொறி எனப்படும். "பொறிவாயில் ஐந்து" அதாவது ஐம்புலன் எனப்படுபவை 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்' எனப்படும். இறைவன் 'பொறிவாயில் ஐந்து அவித்தவன்' ஆவான். இறைவனுடைய தொண்டர்களும் பொறிவாயில் ஐந்து அவித்தவரே ஆவர். இவ்வைம்புலன்களை ஐந்து யானைகள் என்றும் கூறுவர். இவ்வைந்து யானைகளையும் அடக்க வேண்டும் எனின் ஒரு அங்குசம் வேண்டும். அவ்வங்குசத்தை 'உரன்' என்று கூறுவர் திருவள்ளுவர்.

'உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன் என்னும் வைப்பற்கோர் வித்து"

என்பது திருக்குறள். 'உரன்' என்பதற்குத் 'திண்மை' என்று பரிமேலழகரும், 'அறிவு' என்று மணக்குடவரும், 'ஒருவழிப்பட்ட சித்தம்' ஒன்று காலிங்கரும் உரை கூறுவர். எனவே, திண்மையான—மன ஒருமைப்பாடுடைய அறிவினுலேயே ஐம்புலனை அடக்கலாம் என அறிகிரேம். இவ்வுரனைத் திருவள்ளுவர் 'தோட்டி' என்று உருவகித்தார். உரனைத் தோட்டி என்றவர், ஐம்புலனையும் யானை என்னுமையால் இஃது ஏகதேச உருவகம் எனப் பரிமேலழகர் கூறியுள்ளார். ஆகவே தோட்டியின் தன்மை, யானையை அடக்குதல் என்பது விளங்குவதாயிற்று. தோட்டியின் தன்மையே தோட்டிமையாகும்.

**தோட்டிமையுடைய தொண்டர்:** தொண்டர்கள் பொறிவாயில் ஐந்தவித்தவர் ஆவர். "தொண்டர் அஞ்சுகளிறும் அடக்கி" என்ற இடத்துச் சம்பந்தரும் தொண்டர்கள் ஐந்து புலன்களாகிய களிறுகளை அடக்குபவர் என்று கூறியுள்ளார். ஐந்து களிறுகளையும் அடக்குபவராகிய தொண்டர்களையே திருநாவுக்கரசர் 'தோட்டிமையுடைய தொண்டர்' என்றூர். எனவே, ஐம்புலன்களாகிய யானைகளை உரன் என்னும் தோட்டியால் அடக்கும் தன்மையுடைய தொண்டர் என்பது இச்சொற்றொடரின் பொருள் என்க. ஆகவே தோட்டிமை வேறு, தொட்டிமை வேறு என்பதும் இதனுனே போதரும்.

# வடநாட்டுத் தலங்களின் யாத்திரை

(மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசார்ய
ஸ்வாமிகள், காஞ்சிபுரம்.)

**குருக்ஷேத்திரம் :** அரித்துவாரத்திலிருந்து குருக்ஷேத்திரம் சேர்வது. கீதையின் உபக்கிரமம் "தர்ம க்ஷேத்ரே குரு க்ஷேத்ரே" என்பதாதலால், இந்த க்ஷேத்திரத்தின் பெருமையைப்பற்றி எழுதவேண்டியதும் உண்டோ? ஏழு அல்லது எட்டு மைல் தூரம் சென்று, தரிசிக்கவேண்டிய பல விசேஷங்கள் இங்கு உண்டு. கீதை அவதரித்த இடம், பீஷ்மாசார்யர் சரதல்பகதரான இடம், சூர்யகுண்டம், பாணகங்கை முதலான பல இடங்கள், இத்தலத்திற்குச் சிறப்பானவை. இருப்புப்பாதை நிலையத்திற்கு அருகில், வசதிமிக்க தருமசாலை உள்ளது. பிரவாமந்திரம் புதிதாக ஏற்பட்டுள்ளது.

**புதுடில்லி :** குருக்ஷேத்திரத்திலிருந்து டில்லி மாநகர் சேர்வது. இது உலகியல் நிலையில் புகழ்மிக்க பெரிய நகரம் என்று தோன்ற நின்றும், பாண்டவர்கள் அரசு ஆண்ட இராசதானியாகையாலும், கண்ணபிரான் பலகால் பாதாரவிந்த விந்நியாசம் பண்ணின இடம் ஆகையாலும், தூய பெருநீர் யமுனை பெருகும் இடமாகையாலும், இதுவும் புண்ணிய புரியாகவே கருதத்தக்கது. இவ்விடத்தில் பிர்லாமந்திரமும், அதைச் சேர்ந்த மிகப்பெரிய தருமசாலையும், யாத்திரிகர்களுக்கு மிகவும் சௌகரியமான வசதியாகும். உத்தியோகத்தின் பொருட்டுத் தென்னாட்டிலிருந்து பல ஆயிரம் பெருமக்கள், இப்பெருநகரத்தில் வந்து நிலைபெற்றவர்களாய் இருக்கிறார்களென்பது, அனைவரும் நன்கு அறிந்தது.

**பிருந்தாவனம் :—** டில்லியிலிருந்து வடமதுரை வந்து சேர்வது. பிருந்தாவன கோகுல கோவர்த்தநாதிகள் சேவிக்கவேணும். பிருந்தாவனத்தில் ஸ்ரீகோவர்த்தனம் சுவாமி பூலோக வைகுண்டமாக அமைத்திருக்கிற மகாசந்நிதியில், அரச மாளிகையிற் போல் வசதியாகத் தங்கி இருக்கலாம்.

**ஆக்கிரா :—** மதுரை பிருந்தாவனம் கோகுலம் கோவர்த்தனம் ஆகியவற்றைச் சேவித்துக்கொண்டு, ஆக்கிரா நகரம் பார்க்கலாம். க்ஷேத்திர தீர்த்தயாத்திரைப் பிரகரணத்தில் இந்நகர்க்கு வரவேண்டிய தேவை இல்லை.

ஆக்கிராவில் மிகச் சிறந்த கண்காட்சியுள்ளது. 'தாஜ்மகால்' என்று சொல்லுவார்கள். சில நூற்றாண்டுகட்கு முன்பிருந்த மொகலாய அரசன் ஆகிய ஷாஜஹான் என்பவன், தன்னுடைய மனைவி ஆகிய மும்தாஜ் என்பவளின் நினைவுச் சின்னமாகக் கட்டுவித்த கட்டிடம் இது. ஆச்சரியமான பேரழகு வாய்ந்தது என்று இவ்வளவுதான் எழுதலாம்; துருக்கப் பிரபுவின் இடம் என்கிற ஒரு அவத்தியமே இதற்குச் சொல்லத்தக்கதாகவுள்ளது. பகவத் விபூதியென்று நினைத்துப் பார்க்கும் அளவில் இதற்கு ஈடான ஒரு பேரழகு இல்லையென்று சொல்லலாம். இதன் சமீபத்தில் யமுனை ஆறு பெருகுகின்றது. தூய பெருநீர் யமுனைத் துறைவனுக்கு இப்படிப்பட்ட அழகு மிகுந்த அற்புத ஆலயம் ஒன்று அமையவேண்டுமென்று, நாம் ஆசைப்படலாம். இவ்வளவு அதிசயமாகச் சொல்லப்படுகிற இந்த மகத்தான இடத்தையும் பரமாணுவாக்கும் படியான மற்றொரு கட்டிடம், சில ஆண்டுகளாக இந்நகரின் சமீபத்தில் தயாள்பாக் என்னும் தலத்திலேயே அமைக்கப்பட்டு வருகிறது. அது பல பல கோடி ரூபாய்ச் செலவில் அமைகின்றது என்றும், முடிவு பெறுவதற்கு இன்னும் பத்தெட்டு ஆண்டுகள் ஆகும் என்றும், 15 வருடங்களுக்குமுன் கேள்விப்பட்டோம். இந்நகரில் இருப்புப்பாதை நிலையத்தின் சமீபத்திலேயே தருமசாலை உள்ளது.

**ஜயப்பூர் :** ஆக்கிராவிலிருந்து ஜயப்பூர். இது புராதனமான அரசப் பெருநகரம். இப்போது

அரச நகரங்களின் நிலைமை உலகம் அறிந்ததே. இவ்விடத்தில் க்ஷேத்திர தீர்த்த விசேடம் ஒன்றுமில்லையாயினும், நகர்ச் சிறப்பு அவசியம் காணத்தக்கது. மிக விசாலமான வீதிகளும், ஒரே ரீதியான உயர்ந்த மாடமாளிகைகளும், கண்ணைக்கவர்கின்றன. இவ்விடத்தில் ஸ்ரீவைஷ்ணவப் பிரபுக்கள் வியாபார நிமித்தமாக விசேடமாய்க் குழுமி இருக்கிறார்கள். ஸ்ரீவைஷ்ணவர்கள் தங்குவதற்குச் சௌகரியம் அளிக்கும் மந்திரங்களும் இங்குப் பலவுண்டு. அவற்றுள், இராம்நகர்கஞ்ஜ் என்னும் இடத்தில் (ஊர்க் கோடியில்), மிக விசாலமான லக்ஷ்மி நாராயண மந்திரம் உள்ளது. அதிலே ஆனந்தமாகத் தங்கியிருக்கலாம்.

**அஜ்மீர் புஷ்கரம் :** ஜயப்பூரிலிருந்து அஜ்மீர் நிலையம் சேர்ந்து, அங்கிருந்து ஒன்பதாவது மைலிலுள்ள புஷ்கர க்ஷேத்திரம் சேர்வது. நிலையத்திலிருந்து ஒருமணி காலத்திற்குள் க்ஷேத்திரம் சேரும்படியான வசதிகள் உண்டு. இவ்விடத்தில் பகவானே தீர்த்தரூபியாகச் சேவை சாதிப்பதனால், அந்தத் தீர்த்த விசேஷத்திற்கே புஷ்கரம் என்று திருநாமம். அந்தப் பெயரையிட்டே ஊர் வழங்கப் பெறுகின்றது. தென்னாட்டில் எம்பெருமானுடைய திருநாமத்தையிட்டே, வானமாமலையென்றுஊர்வழங்கப் பெற்றது போலவே, இதுவும் என்று கொள்ளலாம். இந்தத் தீர்த்த விசேஷமே இவ்விடத்திற்கு ஏற்றம். இங்கு இரண்டு சந்நிதிகள் உண்டு. ஒன்று நூறு வருஷங்களுக்கு முன்பு காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் ஆத்ய. அனந்தாசார்ய சுவாமியால் நிறுவப்பெற்றது. மற்றொன்று சமீபகாலத்தில் மார்வாடத்திலுள்ள டீட்வாணு மகனீராம் சேட்ஜி அவர்களால், வெகுரமணீயமாக அமைக்கப்பட்டது. இதற்கு ரமாவைகுண்டம் என்று பெயர். முந்தின சந்நிதிக்கு ரங்கஜீ மந்திரம் என்று பெயர். இரண்டு சந்நிதிகளிலும் யாத்திரிகர்கள் தங்குவதற்குத் தக்க இடவசதி நன்றாகவுண்டு.

**நாதத்துவாரம் :** புஷ்கரத்திலிருந்து நாதத்துவாரம் என்கிற க்ஷேத்திரம் சேர்வது. இத்தலம் நமது தென்னாட்டினர்க்கு விசேஷமாகத் தெரியாது. உதயபுர ராசதானியில் வல்லபாசார்யர்களின் ஆதீனத்திலுள்ளது இத்தலம். வல்லபர்கள் கிருஷ்ணபக்தியில் மிகச் சிறந்தவர்கள். கண்ணனையல்லது வேறு தெய்வம் அறியாதவர்கள். இவ்விடத்துச் சிறப்புக்கள் சொல்லொணாத அளவுடையவை. சந்நிதி மிகவும் விசாலமானது. தினப்படி ஆயிரக்கணக்கான சேவார்த்திகள் வந்து தொழுகிறார்கள். இங்கு தினந்தோறும் பலவாயிரம் ரூபாய்களுக்குமேல் போகங்களுக்காகச் செலவு செய்யப்படுகிறது. சிப்பந்திகளின் சம்பளம் மட்டும் ஒருநாளைக்கு ஐயாயிரம் ரூபாய் ஆகிறதாம். எனவே மாதமொன்றுக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் செலவாகிறது. சம்பளவகையில் மாத்திரமே இது. நமது நாட்டில் திருவேங்கடமுடையானுடைய ஐசுவரியத்தை ஏகதேசமாக நினைக்கச் செய்து விடுகிறது இத்தலத்துச் செல்வவளம். ஊரில் தர்மசாலைகள் நிரம்பியிருக்கின்றன. தீர்த்த வசதிகளுக்கும் குறையில்லை. ஸ்ரீயுத கோசுவாமி திலகாயித கோவிந்தலால்ஜீ என்கிற வல்லபாசார்யர், இத்தலத்தில் இராஜகுருபீடத்தில் அமர்ந்திருந்தார். தற்காலம் நிலைமை தடுமாறியிருக்கின்றதாம்.

**சித்தபூர் :** நாதத்துவாராவிலிருந்து சித்தபூர் வந்து சேர்வது. இவ்விடத்தை மாத்ருகயா என்று வழங்கி வருகிறார்கள். ஸ்ரீவைஷ்ணவேதரர்கள் இவ்விடத்தில் மாத்ருசிராத்தம் செய்கிறார்களென்று கேள்வி. சரஸ்வதீஸ்நானம் இங்குவிசேஷம். ஸ்ரீரங்கம் முதல் திருமாளிகை தாதாசார்யருக்கு அதீனமான மந்திரமொன்று இங்கு நிலையத்தின் சமீபத்திலுள்ளது. அதில் வாச சவுகரியமுண்டு. வேறு தர்மசாலைகளும் இருக்கின்றன.

**துவாரகை :** சித்தபூரிலிருந்து மெஷாணு வீரங்காம், ஜாம்நகர்வழியாகத்துவாரகைக்குச் செல்ல வேண்டும். இடையில் ஓய்வு கொள்ளாமல் செல்ல முடியாததலால், வீரங்காம் என்னுமிடத்தில் ஒருநாள் தங்கலாம். இவ்வூருக்கு அடுத்தபடி ஜாம்நகரில் தங்கலாம். தங்காமலும் நேராகத் துவாரகை சென்று சேரலாம்.

**கோமதீத் துவாரகை :** கோமதீத்துவாரகை என்றும், பேடிதுவாரகை என்றும், டாகோர் துவாரகை என்றும், இப்படி பல இடங்களைத் துவாரகையாக வழங்கி வருகிறார்கள். ஆனாலும் துவாரகை யென்று உலகமெல்லாம் வழங்குவதுகோமதீத்துவாரகையையேயாகும். நைமிசாரணியம், லக்னோ முதலான இடங்களில் பிரவகிக்கிற கோமதீநதியானது, இவ்விடத்தில் சன்னிதி அருகேயுள்ள சமுத்திரத்தில் சங்கமம் அடைகிறபடியால் இவ்விடத்தை கோமதீத்துவாரகை என்று சிறப்பித்து வழங்குகிறார்கள். இந்நதியின் தீர்த்தம் மற்றவிடங்களில் மதுரமாய் இருந்தாலும், இங்குச் சமுத்திர சம்பந்தம் ஒரு யோசனைதூரம் ஏற்பட்டதனால் அங்கிருந்தே உப்புத் தன்மை

யுடையதாக உள்ளது. துவாரகாநாதனுடைய சன்னிதி வெகு புராதனமாயும், அற்புத சிற்பங்களமைந்ததாயும் காண்கிறது. "சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்துதோன்றும் துவராபதி" என்ற ஆண்டாளுடைய மங்களாசாசனம் மிகப் பொருத்தமாகக் காண்கிறது. நிலையத்துக்கும் சந்நிதிக்கும் இடையில் உள்ள தோதாத்ரிமடம், யாத்திரிகர்கள் தங்குவதற்கு மிகவும் வசதியான இடம்; பெரிய தோட்டத்தில் சன்னிதியும் தர்மசாலையுமாக உள்ளது.

**பேடீத்துவாரகை:** கோமதீத் துவாரகையிலிருந்து, ஓகாபோர்ட் நிலையம் சேர்ந்து, அங்கிருந்த அரைமணிகாலம் படகில் பயணம் செய்து அடையக்கூடிய தலமிது. இங்கும் துவாரகா நாதனுடைய சந்நிதி, மிக அழகாக அமைந்திருக்கின்றது. இதுவும்புராதனமானது என்றே தெரியவருகிறது. ஸ்ரீகிருஷ்ண பகவான் துவாரகாபுரியை ஏற்படுத்தினபோது பல இடங்களில்தனக்கு இருக்கை அமைத்துக் கொண்டதாகவும், அதனாலேயே துவாரகையின் பேதங்கள் பல ஏற்பட்டதாகவும் சொல்லுகிறார்கள். இது பொருத்தம் உடையதாகவே தோன்றுகின்றது. பேடீத்துவாரகையிலிருந்து மறுபடியும் கோமதீத் துவாரகைக்கு வந்தே மேல்யாத்திரை நடைபெறவேண்டும்.

**போர்பந்தர்-சுதாமபுரி:** கோமதீத்துவாரகையிலிருந்து இராஜகோட் வழியாய்ப் போர்பந்தர் சேர்வது. இதற்குச் சுதாமபுரியென்று மறு பெயர் வழங்கும். குசேலருக்குச் சுதாமா என்று பெயர். அவர் பிறந்ததும் வளர்ந்ததும் இவ்விடத்தில் என்பர். இவ்விடத்தில் சிறிய ஆலயமுள்ளது. இது புராதனம் அன்று என்கிறார்கள். நகரம் மிக ரமணீயமாய், மாட மாளிகை சூழ்ந்ததாய், வாசத்திற்கு மிகமிக இனியதாகக் காண்கிறது. மகாத்மாகாந்தியின் பிறப்பிடம் இதுவே என்கிறார்கள். ஐந்து லட்சம் ரூபாய் செலவில் காந்திஜீ மாளிகை ஒன்று, இவ்விடத்தில் இருபது வருஷங்களுக்குள்ளாக வெகு விசித்திரமாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. அவரது தாய் தகப்பன்மாருடைய மிகப் பெரிய திருவுருவங்கள், இதில் நிறுவப்பட்டிருக்கின்றன. உயர்ந்த பல நூல்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. பரம பக்தரான ஒரு சேட்டின் நன்கொடையைக் கொண்டு, இந்த அரிய பெரிய மாளிகை ஏற்படுத்தப்பட்டதாம். மிகவும் மனோகரமாயிருக்கின்ற இது, பரம பவித்திரமாயும் காணப்படுகிறது. பொதுவாக எல்லா மக்களுக்கும் கவர்ச்சி யளிப்பதாய் விளங்குகின்றது. நிலையத்தின் வாசலிலேயே மிகப்பெரிய தர்மசாலையும் உள்ளது.

**பிரபாச பட்டணம்:** குசேலப் பட்டணத்திலிருந்து பிரபாச பட்டணம் வந்து சேர்வது. "மாதவத்தோன் புத்திரன் போய் மறிகடல்வாய் மாண்டானை, ஓதுவித்த தக்கணையா உருவுருவே கொடுத்தான்" என்கிற பெரியாழ்வார்திருமொழியின்படியே, கண்ணபிரான் பன்னிரண்டாண்டுகளுக்கு முன்பு இங்கு நீராடும் பொழுது மாண்டுபோயிருந்த சாந்தீபநி புத்திரனைக் குருதட்சிணையாக மீட்டுக் கொடுத்த இடம் இது என்பார்கள். ஏகாந்தமாகவும் புனிதமாகவுமுள்ள இத்தலம், தவம் புரிவோர்கள் வாழ்வதற்கு ஏற்றது. இங்கே தீர்த்தகட்டத்தின் அருகில் இரண்டு ஸ்ரீவைஷ்ணவமந்திரங்களும் தர்மசாலையும் தங்குவதற்கு ஏற்றனவாக உள்ளன. விராவல் என்கிற நிலையத்தில் இறங்கி, இரண்டு மூன்று மைல் தூரம் சென்று அடையவேண்டிய தலம் இது. இவ்விடத்தில் கடற்கரையில் சோமநாத மந்திரம் என்னும் சிவாலயம், பிரபலமாகத் திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

**அகமதாபாத் நகரம்:** பிரபாச பட்டணத்திலிருந்து இராஜகோட் வீரங்காம் வழியாய், அகமதாபாத் நகரம் வந்து சேர்வது. இங்கு க்ஷேத்திர தீர்த்தச் சிறப்பு இல்லையாயினும், செல்லும் வழிநிலையில் தங்கவேண்டும் இடமாகும். இங்கு, சபர்மதி நதிக்கரையில் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இராமாநுஜகூடமும், தருமசாலையும் விசேட வசதியாக உண்டு. இவ்வூரில் அவசியம் காணவேண்டிய காட்சி ஒன்றுண்டு; அதாவது கீதாமந்திரம், சிறந்த பகவதநுக்கிரகம்பெற்ற ஒரு பக்தசிகாமணியின் பெரு முயற்சியினால் பல லட்சம் ரூபாய்ச் செலவில், வெகு விசாலமாயும், சர்வேந்திரிய ஆகர்ஷகமாயும், லோகோத்தரமாயும், அமைக்கப்பட்ட மந்திரம் இது. இங்கு உட்புகும் போதே ஞான பக்தி விரக்திச் செல்வங்கள் நம்மைவந்து அணைத்துக்கொள்வன போலும். இதில் மூன்று மாடிகள் உள்ளன. பல விரக்தர்கள் பேரின்பமாக வாசஞ்செய்து கொண்டிருக்கிறார்கள். கீழே கீதை முழுவதையும் பதினெட்டுப் பகுதியாகப் பரமசுந்தர தேவநாகர திவ்விய லிபியில் சிலாசாசனமாகப் பொறித்திருக்கும் அழகு மிகச் சிறந்தது. இந்த மந்திரத்தை அமைத்த அருளாளர் வித்யானந்தஜீ என்பர். இப்போது வாழ்பவர் வேறொருவர்.

**டாகோர் துவாரகை:** அகமதாபாதிலிருந்து ஆனந்த் சந்திப்பு வழியாய், டாகோர் என்னும் இடம் அடைவது. துவாரகைகளில் இதுவும் ஒன்றாகப் பரிகணிதமாயுள்ளது. இங்குள்ள மிகப் பெரிய கோவிலில், ஸ்ரீகிருஷ்ணபரமாத்

மாவின் அற்புதமான தரிசனம், மிகவும் பாராட்டத்தக்கதாகவுள்ளது. நிலையத்திலிருந்து ஒருமைல் தூரத்திலுள்ளது சந்நிதி. தீர்த்த சௌகரியமும், தர்மசாலை வசதியும், வெகு ரமணீயமாகவுள்ளது. பரதமந்திரம் என்கிற மிகப்பெரிய ஸ்ரீவைஷ்ணவ மடம், இவ்விடத்தில் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நல்ல புகலிடம்.

**உச்சயினி:** டாகோரிலிருந்துஉச்சயினிக்ஷேத்திரம்சேர்வது."அயோத்யாமதுரா மாயா"என்கிற சுலோகத்தில், அவந்திகா என்னப்பட்ட க்ஷேத்திரம் இதுவே. கண்ணபிரான் பலராமனோடும் குசேலமுனிவரோடும், சாந்தீபநி முனிவரிடத்தில் அறுபத்துநான்கு நாட்களில் அறுபத்துநான்கு கலைகளைப் பயின்றதாகச் சொல்லும் இடம் இதுவே. இங்கு சாந்தீபநி ஆச்சிரமம் முதலான இடங்கள் காணத்தக்கவை. இங்கு க்ஷிப்ராநதி நிர்மலப்பிரவாகமாகப் பெருகுகின்றது.அதன் கரையில் உள்ள மிகப் பெரிய இராமாநுஜகூடம், ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் புகலிடமானது.

**நாசிக் பஞ்சவடி:** உச்சயினியிலிருந்து நாசிக் ரோட் என்னும் நிலையத்தில் இறங்கி, ஏழு மைல் தூரத்தில் பஞ்சவடி வந்துசேர்வது. இங்குக் கோதாவரியின் அழகும், அதன் கரையில் உள்ள பஞ்சவடி தபோவனங்களின் சந்நிவேசங்களும் அநுபவிக்கத் தக்கவை. இராமர் சீதை விகாரத்தலங்கள், சூர்ப்பணகா பங்கத்தலம், மாரீசவதத்தலம் முதலானவை இங்குக் காணவேண்டியவை. நாளடைவில் இது பெரிய நகரமாக அபிவிருத்தியடைந்து வருகிறது. இங்கு வைதீகர்கள் புனிதமாகத் தங்குவதற்குரிய இடம் கோதாவரிக்கரையில் ஸ்ரீசங்கராசார்ய மடம். மற்றும் பல தர்ம சாலைகளும் உண்டு.

**பம்பாய்ப் பெருநகரம்:** கல்கத்தா அகமதாபாத் முதலிய நகரங்கள் போல, இந்நகரமும் வழியடைவில் இடையே உள்ளது. நகரின் சிறப்பைப்பற்றி இங்கு நாம் எழுதவேண்டியது ஒன்றுமில்லை. மகாயசஸ்வியாயும், ஜகத்குரு பிரக்கியாவிக்கியாதராயும்,விளங்கின ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் காதி. அனந்தசார்ய சுவாமியால், இங்குப் பனச வாடியில் ஏற்படுத்தப்பட்டுள்ள திருவேங்கடமுடையான் சந்நிதி, தென்னாட்டுக்கோவில் முறையில் விலட்சணமாக நடைபெற்று வருவதால், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இங்குத் தங்கி இருக்க வசதியுண்டு. தர்மசாலைகளும் மிகவுண்டு. இவ்விடத்தில் நமதுதென்னாட்டினர் உத்தியோக முறையில் அபரிமிதமாக வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

**பூனா நகரம்:** பாம்பாயில் இருந்து போகும் வழியில், பூனா நகரத்தில் ஒருவேளை தங்கியிருக்கலாம். இங்கு ரவிவார்ப் பேட்டையில் ஸ்ரீராம மந்திரம், லக்ஷ்மீநாராயணமந்திரம் என்னும் இரண்டு ஆலயங்கள், சேட்டுகளால் ஏற்படுத்தப்பட்டவை, மிகவும் மனோகரங்களாக விளங்குகின்றன. இக்கோயில்களில்வாசவசதி விசேடமாக உண்டு. சேட்டுகள் ஸ்ரீவைஷ்ணவர்களை மிகவும் ஆதரத்தோடுஅன்புபெருக உபசரிப்பர்கள்.

**பண்டரிபூர்:** பூனாவிலிருந்து குர்ட்வாடி சந்திப்பு வழியாகப் பண்டரிபூர் சேர்வது. பாண்டுரங்கக்ஷேத்திரம் என்பதே, பண்டரிபூர் என்றும், பண்டராபுரம் என்றும் சிதைந்து வழங்குகின்றது. இங்கு விட்டலநாதன் என்னும் எம்பெருமானுடைய சேவை மிகவும் இனிது. சந்நிதியின் சந்நிவேசங்கள் மிகப் பெரியன. எம்பெருமானுடைய சௌசீல்யமோ அப்பிரமேயம் ஆனது. திருவடி வாரத்திலே பக்தர்கள் தலையை மடுத்துச் சேவிக்கலாம்படியான சௌலப்பியம். பக்தர்களின் பஜனைகளும் கீர்த்தனங்களும் இங்கு இடைவீடின்றி நடக்குமது பெரிய சிறப்பு. இந்த க்ஷேத்திரத்தில் சந்திரபாகாநதி பெருகுகின்றது. அதன்கரையில் இராமபாக் என்னும் மிகப்பெரிய தோட்டத்தில், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு விசாலமான வசதி சௌகரியமுள்ளது.

**ஷோலாப்பூர்** - பாண்டு ரங்க க்ஷேத்திரத்திலிருந்து ஷோலாப்பூர் நகரம் சேரலாம். மிகச் சிறந்த ஸ்ரீவைஷ்ணவ பக்த மணிகள் வாழும் இடம் இது. பிரபலமான வியாபாரத் தலம். இங்கு லட்சுமீநாராயணன் சந்நிதி நூறு வருஷங்களுக்கு மேலாக ஏற்பட்டு, வெகு விலக்ஷணமான முறையில் நித்தியநைமித்திகக் கிரமங்கள், ஆச்சரியமாக நடைபெற்று வருகின்றன. இங்கு நாடோறும் காலை மாலை இரவுகளில் நடைபெறும் விசேடங்கள் தென்னாட்டினரும் பின்பற்றத்தக்கவை என்று சொல்லலாம். உத்திராதி வைஷ்ணவர்களாயிருக்கச் செய்தேயும், திவ்வியப் பிரபந்தங்களில் இருநூறு பாசுரங்களுக்கு மேல் அதிகரித்துக் கண்டபாடமாக்கித் தமிழ்நாட்டு அத்தியாபகர்களோடு வாசியற இயல் சேவிக்கும் அழகும், பஞ்ச சூக்தங்களும் உபநிடதங்களும் ஓதி வேத பாராயணம்செய்யும் அழகும், பூர்வாசார்யர்களின் தோத்திரங்களையெல்லாம் முதஸ்தமாக்கி சேவிக்கிற வைகரியும், நாத்திகர்களையும் ஆத்திகர் ஆக்கவல்லவை.

இங்கிருந்து துங்கபத்திரா நிலையத்தில் (தற்காலம் மந்திராலயம் ரோட் என்னுமிடத்தில்) இறங்கித் துங்கபத்திரை ஸ்நானம் செய்துவிட்டு, யாத்திரையை நிறைவு செய்யலாம்.